Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 மாசி 10 சனிக்கிழமை (22.02.2014) பக்கங்கள் 20 ஓசை – 144

## தென்னாபிரிக்கா செல்வதற்கு அழைப்புக் கிடைக்கவில்லை

### சம்பந்தன் தெரிவிப்பு

இலங்கையில் அமுல்படுத்தலாம் என முன்மொழியப் பட்டுள்ள தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்கான அந்நாட்டின் அழைப்புக் கிடைக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.


தென்னாபிரிக்க மாதிரியிலான நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் ஆராய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தென்னாபிரிக்க அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகி இருந்ததாகக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

எனினும் தென்னாபிரிக்காவிடம் இருந்து அப்படியான அதிகாரபூர்வமான அழைப்பு எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

19 ஆம் பக்கம் பார்க்க...

## இந்திய மீனவரின் அத்துமீறல் கூட்டமைப்பின் மௌனம் ஏன்?

### கேட்கிறார் சந்திரகுமார் எம்.பி.



(கொழும்பு)

இந்திய மீனவர்களின் அத்துமீறல் என்பது எமது ஒருசில கடற்றொழிலாளர்களின் பிரச்சினையல்ல. மாறாக பல்லாயிரக் கணக்கான கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை. ஆனால் இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தக் கருத்தையும் முன்வைக்கவில்லை. எனவே நாங்கள் அனைவரும் இந்த விடயத்தில் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் ஒரே குரலாக ஒலிக்க வேண்டுமென ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடா ளுமன்றத்தில் இடம்பெற்ற கடற்றொழில், நீரக

19 ஆம் பக்கம் பார்க்க...

# இலங்கை இனப்பிரச்சினைக்கு பிரதான காரணம் மொழியே!

## கூறுகிறார் அமைச்சர் வாசு



(கொழும்பு)

இலங்கையில் இனப்பிரச்சினை ஏற்படுவதற்கு பிரதான காரணம் மொழியே எனவும், இலங்கையில் சிங்கள மொழி மாத்திரமின்றி தமிழ் மொழியும் தாய் மொழியாகும். எனவே இந்நாட்டில் இரண்டு தாய் மொழிகள் உள்ளன. அவற்றைக் கற்று சமூக மாற்றத்திற்கு வித்திட வேண்டும் என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச் சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அரச கரும மொழிகள் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நாட்டில் நிலை கொண்டுள்ள இனப்பிரச்சினைக்கு மொழியே பிரதான காரணமாகும். இந்த வைபவத்தில் தமிழ் மொழியில் சித்தியடைந்த சிங்கள மாணவர்கள் தமிழ் மொழியில் உரை நிகழ்த்தினர். 3 தமிழ் பாடல்களுக்கு நடனமாடினர்.

இருப்பினும் கடந்த காலங்களில் இவ்வாறான நிலைமை காணப்படவில்லை. இதன் காரணமாகவே இனப்பிரச்சினைக்கான சூழல் அதிகரிக்கப் பட்டது.

வடக்கு தமிழர்களுக்கு சிங்களம் தெரியாது. தெற்கு சிங்களவர்களுக்கு தமிழ் தெரியாது. இதன் காரணமாக நாடு மொழி ரீதியாக இரண்டாகப் பிளவு பெற்று காணப்பட்டது. அதுமாத்திரமின்றி வரலாற்றில் இனப்பிரச்சினை தோன்றியமைக்கும் மொழியே காரணம் என்பது இரகசியமல்ல.

எனவே மொழி ரீதியாக பிளவுபெற்ற இந்நாட்டை அதனூடாக ஐக்கியப்படுத்த வேண்டும். ஆகவே இந்நாட்டை மொழி கலாசார பண்பாடுகளினூடாகவே இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்த முடியும்.

இனங்களுக்கிடையே இத்தகைய மாற்றத்தினை பாடசாலையினூடாக ஏற்படுத்தினாலேயே எதிர்காலச் சந்ததியினால் இன ரீதியாக பிளவுபடாமல் ஐக்கிய இலங்கைக்குள்

19 பக்கம் பார்க்க...

## ஆப்கான் ஜனாதிபதி இலங்கைக்கு விஜயம்

ஆப்கான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய் நாளை இலங்கை வரவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இரண்டு நாள் இலங்கையில் தங்கியிருக்கும் அவர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் ஆகியோரை சந்திக்கவுள்ளார்.

தெற்காசிய நாடுகளில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடான ஆப்கானிஸ்தான் நீண்ட நாட்களாக உள்நாட்டு போருக்கு முகம் கொடுத்துவரும் நாடு என்பது குறிப்பிடத்தக்கது.

## மன்னார் மனிதப் புதைகுழியில் நாணய வடிவிலான தடயம்

### எலும்புக்கூடுகளும் 77 ஆக அதிகரிப்பு

மன்னார் மனிதப் புதைகுழி 28ஆவது தடவையாக நேற்று தோண்டப்பட்டபோது 2 மனித எலும்புக்கூடுகளுடன், 5 ரூபா நாணய வடிவிலான தடயப் பொருளொன்றும் கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் அநுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் டி.எல்.வைத்தியரெட்ண தலைமையிலான குழுவினர் மேற்படி மனிதப் புதைகுழியைத் தோண்டும் பணியை முன்னெடுத்தனர். இந்நிலையில், நேற்றைய தினத்துடன் மனித எலும்புக்கூடுகள் மற்றும் எச்

19 ஆம் பக்கம் பார்க்க...

## அமைதியாக இருக்க காரணம் என்ன? விளக்குகிறது பொதுபலசேனா

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் மாநாடு காரணமாக கடந்த காலங்களில் அமைதியாக இருந்ததாகவும் ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடர் காரணமாக தற்பொழுது அமைதியாக இருப்பதாகவும் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் நாட்டுக்கும், இனத்திற்கும், பௌத்த சாசனத்திற்கும் ஏற்படும் அநீதிக்கு

19 ஆம் பக்கம் பார்க்க...

## கொழும்பிற்கு ஆயுதக் கடத்தல் புலி உறுப்பினர்களுக்கு சிறை

நான்கு பொதிகளில் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களை கொழும்பிற்கு எடுத்துச் சென்றதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இரண்டு புலி உறுப்பினர்களும் வெடிபொருட்களைக் கடத்தியதாக நீதிமன்றில் ஒப்புக்கொண்டதனை அடுத்து இரண்டு ஆண்டுகள் கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குழந்தைவேலு தயாபரன் மற்றும் கார்த்திகேசு நாதன் ஆகியோருக்கே இவ்வாறு உயர் நீதிமன்ற நீதவான் எஸ்.மொராயஸ் இந்தத் தண்டனையை விதித்ததுடன், இந்த இரண்டு புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## ஷிராணிக்கு சார்பான தீர்ப்பை இரத்துச் செய்தது உயர்நீதிமன்றம்

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றப்பிரேரணையை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு சட்டபூர்வமற்றது என மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னாள் தலைவரான நீதிபதி சிறீஸ்கந்தராஜா வழங்கிய தீர்ப்பை உயர்நீதி மன்றத்தின் ஐவரடங்கிய நீதியரசர் குழாம் நேற்று செல்லுபடியற்றதாக்கியுள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான சலீம் மர்சூக், சந்திரா ஏக்கநாயக்க, சத்தியா ஹெட் டிகே, ஈவா வனசுந்தர, ரோஹினி மாரசிங்க ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மேன்முறையீடு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஆட்சேபித்து சட்ட மாஅதிபர் பாலித பெர்னான்டோ இது தொடர்பான மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தவறான வழிகாட்டல் எனவும், நாடாளுமன்றத்திற்கு நீதிமன்றத்தினால் உத்தரவிடமுடியாது எனவும் சட்ட மா அதிபர் தனது மேன்முறையீட்டு மனுவில் சுட்டிக் காட்டியிருந்தார். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை ஆட்சேபித்து பொது மக்கள் சார்பாக தாக்கல் செய்திருந்த சில மனுக்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உள்ளே
க.பொ.த. (சா/த) பொது அறிவு வினாத்தாள்



06 சத்துமின்றி இருந்தால்



13 பாதிப்பு

# போலி நாணயத்தாள்கள் நெல்லியடியில் கண்டுபிடிப்பு

(கரணவாய்)

நெல்லியடி வர்த்தக சங்கத்திற்குட்பட்ட இரு வர்த்தக நிலையங்களில் பொருட்களை கொள்வனவு செய்யவந்தவர்கள் 5 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாளை கொடுத்து பணத்தை மாற்றிச் சென்றுள்ள சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

குறிப்பாக அழகு சாதனப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையத்திலும், துவிச்சக்கள் வண்டிகள் விற்பனை செய்யும் கடையிலுமே இவ்வாறு போலி நாணையத்தாள் கொடுத்து பணத்தை மாற்றிச் சென்றுள்ளனர்.

இதன்பின்னரே நிலையங்களின் உரிமையாளர்கள் மாற்றப்பட்ட நாணயத்தாள் போலியானது என தெரியவந்ததையடுத்து அவர்கள் நெல்லியடி வர்த்தக சங்கத் தலைவரிடம் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து வர்த்தக சங்கத்தலைவர் நெல்லியடி வர்த்தகர்களை போலிநாணயத்தாள் குறித்து அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (18)

# பல்வேறு குற்றச் செயல்கள்; ஒரு வாரத்தில் 210 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பல்வேறு குற்றச்செயல்களின் மூலம் கடந்த வாரத்தில் 210 பேர் கைது செய்யப்பட்டதாக யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பரிசோதகர் பீரிஸ் தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் பிரிவில் பாரிய குற்றச்செயலில் 2 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 21 பேரும், காயப்படுத்திய 2 பேரும், குடிபோதையில் வாகனம் செலுத்திய 13 பேரும், வீடு புகுந்த ஒருவரும், அடித்துக்காயப்படுத்திய 16 பேரும், திருட்டுத் தொடர்பில் 4 பேரும், மோசடி செய்த 2 பேரும், பொது இடங்களில் மது அருந்திய 2 பேரும், சிறு குற்றங்களில் 15 பேரும், பிறருக்கு பல வகைகளிலும் தடைகள் செய்த 4 பேரும், சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக 23 பேரும், சந்தேகத்தின் பேரில் 19 பேரும், வாகனவிபத்தில் 3 பேரும் கைது செய்யப்பட்டதுடன், காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் சிறு குற்றங்கள் தொடர்பில் 9 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 8 பேரும், சந்தேகத்தின் பேரில் 24 பேரும், குடிபோதையில் வாகனம் செலுத்திய ஒருவரும், வேறு குற்றங்களில் 42 பேரும் கைது செய்யப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். இவர்கள் அந்தந்த நீதி மன்றங்களில் ஆஜர்ப்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## வெடிமருந்து மீட்பு

# நீதிமன்ற உத்தரவின்பேரில் மேலதிக விசாரணைகள்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைப் பகுதியில் மீட்கப்பட்பட் வெடி மருந்து தொடர்பில் கைது செய்யப்பட்ட இருவரிடமும் நீதிமன்ற உத்தரவின் பேரில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாக யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பரிசோதகர் பிரசாந்த் பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும், தெரிவிக்கையில், பொலிஸார், புலனாய்வுப் பிரிவினரால் சி - 4 ரக 16 கிலோ வெடிமருந்தும், ரீ.என்.ரி. ரக 56 கிலோ வெடிமருந்தும் கைப்பற்றப்பட்டன. இதுதொடர்பாக குருநகர் மற்றும் கொழுமபுத்துறையைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் நீதிமன்ற உத்தரவின் பேரில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் விரைவில் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வீடு உடைத்து திருட்டு; சந்தேக நபருக்கு மறியல்

கொக்குவிலில் வீடு உடைத்து திருடிய இரு சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனார்.

கொக்குவில் கிழக்கு கலைவாணி வீதியிலுள்ள வீடு ஒன்றை உடைத்து உள்நுழைந்து 2 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும், 17 ஆயிரம் ரூபா பணமும், 2 ஆயிரம் ரூபா இந்தியப் பணமும் திருடப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர் கடந்த 14 ஆம் திகதி கோப்பாய் பொலிஸில் முறையிட்டிருந்தார்.

கடந்த 17 ஆம் திகதி குறித்த சந்தேக நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய பேது சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (இ)

# நயினை அம்பாளின் வரலாறு ஆங்கிலப் பதிப்பு வெளியீடு



(நயினாதீவு)

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் அண்மையில் அம்பாளின் ஆலய வரலாறு ஆங்கிலப் பதிப்பு நூல் வெளியீடும் திருவிழா ஒளிப்பட இறுவட்டு அம்பாளின் திருக்காட்சி படத்தொகுப்பு வெளியீடும் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் ஆலய அறங்காவலர் சபைத்தலைவர், ப.க. பரமலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இதில் நயினாதீவைச் சேர்ந்த பல கல்விமான்களும் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் நயினாதீவின் சகல ஆலய அறங்காவலர்களும், பாடசாலை அதிபர்கள், நயினாதீவு நாகவிகாரை விகாராதிபதி, நயினாதீவு வங்கி முகாமையாளர் மற்றும் பலர் கலந்து சிறப்பித்தனர். (21)

**சிறுவிளம்பரம்**

**காணி விற்பனைக்கு**

கடற்கரை வீதி, யாழ்ப்பாணத்தில் 2 பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு - 021 221 3202, 0 82 7098

(R/339)

# பரிபாலனசபை பொதுக்கூட்டம்

(வேலணை)

சாட்டி வெள்ளைக்கடற்கரை இந்துமயான அந்தியேட்டி பரிபாலன சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேலணைப் பிரதேச சபை மண்டபத்தில் காலை 10 மணி யளவில் வேலணைப் பிரதேச சபைத்தலைவர் சி.சிவராசா தலை மையில் இடம்பெறவுள்ளது.

இதன்போது இறைவணக்கம், தலைமையுரை, சென்ற பொதுக் கூட்ட அறிக்கை கணக்கறிக்கை சமர்ப்பித்தல், இவ்வாண்டுக்கான புதிய பரிபாலன சபைத்தெரிவு என்பன இடம்பெறவுள்ளதுடன், அந்தியேட்டி மட பரிபாலனத்தை சிறப்பாக வளர்ச்சியடைய முழு பங்களிப்பை அளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஜயோதா**

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1036

திகதி 20.02.2014

வெற்றி எண்கள்: 01 24 28 31 — ஆங்கில எழுத்து: U

ஜக்பொட் பரிசு ரூ. 2,25,31,300/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 2,25,31,300/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 2 | 10,00,000/= | ரூ. 20,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 14 | 50,000/= | ரூ. 7,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 251 | 1,000/= | ரூ. 2,51,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 486 | 1,000/= | ரூ. 4,86,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11547 | 60/= | ரூ. 6,92,820/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6047 | 40/= | ரூ. 2,41,880/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 151479 | 20/= | ரூ. 30,29,580/= |
| ஆங்கில எழுத்து | 22045 | 20/= | ரூ. 4,40,900/= |
| | | மொத்தம் ரூ. | 78,42,180/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 8 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கம்பஹா | 705772413-3-13 |
| மாத்தளை | 705766317-8-08 |
| பதுளை | 705762394-6-26 |
| மொனராகலை | 705760171-6-36 |
| ஹம்பாந்தொட்டை | 705767076-4-24 |
| அம்பாறை | 705769275-9-09 |
| மன்னார் | 705763070-1-11 |
| கொழும்பு | 705768561-5-25 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 82,42,180/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 22,827,720/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.02.24 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02

தொலைபேசி: 2 333546/7

(C/3340)

# மதுச்சாலைகளில் அரங்கேறும் கூடிய கட்டண அறவீடு

யாழ்.நகரப் பகுதிகளில் இயங்கும் மதுபான விற்பனை நிலைய்ங்களில் மதுபானங்களில் பொறிக்கப்பட்டுள்ள விலைகளில் இருந்து கூடிய கட்டணம் அறவிடப்படுவதாகக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விற்பனை செய்யும் ஊழியர், காசாளர்களிடம் 170 ரூபா பொறிக்கப்பட்டிருக்கும் சண்டோ ஸ்ரவுட், 190 ரூபா அறவிடப்படுவது ஏன் எனக்கேட்டதற்கு பதிலளித்த காசாளர் 100 ரூபா பொறிக்கப்பட்டிருக்கும் எனக் கூறினார்.

விலைக் கட்டுப்பாட்டுப்பிரிவினர் மளிகைப்பொருட்கள், தேனீர் கடைகளில் மட்டும்தான் விலைவாசிகளில் கவனம் செலுத்தி வருகிறார்கள். மதுபான விற்பனைக் கடைகளில் கவனம் எடுப்பதில்லையா எனக்கேள்வி எழுப்புகின்றனர்.

காசாளர் பொறுப்பற்ற முறையில் 100 ரூபாவும் பொறிக்கப்பட்டிருக்கும் என்றால் எப்படி? விற்பனை செய்பவர்கள் நினைத்த விலையில் விற்பதென்றால் விலைகள் ஏன் பொறிக்கப்படவேண்டும்? அதற்கேன் விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவும் என மதுபானப்பாவனையாளர் சார்பாக கேள்விகள் முன்வைக்கப்படுகின்றன. (68)




# நுளம்பு ஒழிப்பு

வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் ஏற்பாட்டில் டெங்கு நுளம்புகளை ஒழிக்கும் முகமாக புகை அடிக்கும் செயற்பாடுகள் அண்மைக்காலமாக நடைபெற்று வருகிறது. (21)

# முஸ்லிம்களுக்கான வீட்டுத்திட்டம் மூன்றாம் கட்டத்தில் பரிசீலிக்கப்படும்

## அரச அதிபர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் வீட்டுத்திட்டத்தில் முஸ்லிம் குடும்பங்களும் உள்வாங்கப்படுவார்கள். யாழ்ப்பாணம் சோனகதெரு கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் முஸ்லிம் மக்களுக்கரன வீட்டுத்திட்ட விண்ணப்பங்கள் கடந்த 7ஆம் திகதி செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் கட்ட வீட்டுத் திட்ட வேலைகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் அதில் உங்கள் விண்ணப்பங்களும் பரிசீலனை செய்து பயனாளிகளுக்கு உரிய வீடுகள் கிடைக்கும் எனவே அதுவரை பொறுமையாக இருக்குமாறும் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை யாழ் அரச அதிபரை யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் தலைவர் ஏ.எச். ஜமால் தலைமையில் பிரதிச் செயலாளர் எம்.எல்.லாபிர், மாநகரசபை உறுப்பினர் சரபுல் அனாம், வடமாகாண சபை உறுப்பினர் அ.அஸ்மின் ஆகியோர் சந்தித்தனர்.

இச்சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதில் ஜே/85 கிராம அலுவலர் பிரிவில் 53 விண்ணப்பங்களும், ஜே/86 இல் 49 விண்ணப்பங்களும், ஜே/87 இல் 185 விண்ணப்பங்களும், ஜே/88 இல் 49 விண்ணப்பங்களும் செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தினால் யாழ். முஸ்லிம் மக்களின் இந்திய வீட்டுத்திட்டத்திற்கான 317 விண்ணப்பங்கள் கையளிக்கப்பட்டன.

இந் நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விண்ணப்பங்கள் கையளிக்கப்பட்டன. அத்துடன் வடமாகாண ஆளுநர், யாழ்மாநகர முதல்வர், பிரதேச செயலாளர், அரச அதிபர் மற்றும் அரச அதிகாரிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (105)

# தேசிய கலை இலக்கிய விழா மாணவரிடையே போட்டிகள்

தேசிய கலை இலக்கிய விழாவை முன்னிட்டு கரவெட்டி பிரதேச செயலகத்தினால் பாடசாலை மாணவர்களிடையே திறந்த பிரிவாகப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதன்படி கட்டுரை, கவிதைப் போட்டிகள் கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகளுக்கானது இதற்குரிய தலைப்பாக ஆக்கபூர்வமான படைப்புக்களால் எதிர்கால சமுதாயத்தை உருவாக்குவோம் என்ற பொருளுக்கு பொருத்தமான சிந்தனைக்கு எற்ப தயாரித்தல் வேண்டும்.

இதில் கட்டுரை கனிஷ்ட பிரிவுக்கு 1000 - 1500 சொற்களும், சிரேஷ்ட பிரிவுக்கு 1500 - 2000 சொற்களும் இருத்தல் வேண்டும். மேலும் இருபிரிவுக்குமான கவிதைபாடல் போட்டியில் பாரதியார் கவிதைகள், தூதுக் காவியங்கள், நாட்டார் நாடகங்கள் கூத்துக்களில் இருந்தோ அல்லது பல தரப்பட்ட நாட்டார் பாடல்களிலிருந்தோ தேர்ந்தெடுக்கப்பட்ட 5 செய்யுள்கள் பாடவேண்டும்.

கவிதைபாடல் போட்டி பாலர் பிரிவுக்கு தங்களால் தெரிவுசெய்யப்பட்ட 3 செய்யுள் அடிகள், கையெழுத்துப் போட்டி இதில் 6 - 10 வயதினரைக் கொண்ட சிறுவர்கள் மாத்திரம் பிழையின்றி எழுத்துக்களை உபயோகித்தல், எழுத்துக்களின் வடிவம் மற்றும் தெளிவு என்பவை தொடர்பாக கவனத்தில் கொள்ளல்.

மேலும் சிரேஷ்ட பிரிவுக்கான பாடல் நயத்தல் போட்டியில் விரும்பிய தலைப்பின் கீழ் இலக்கிய சங்ககால பாடல் ஆக்கத்தை முன்வைக்க முடியுமானதுடன் 500 - 1000 வசனங்கள் கொண்டிருத்தல் வேண்டும். ஒருவர் ஒரு ஆக்கத்தை மாத்திரம் முன்வைக்க முடியும்.

மேலும் திறந்த பிரிவுக்கான போட்டிகளாக பாடல் ஆக்கம், நாட்டார் கலை கற்றல் போட்டி, இலக்கிய விவரணப் போட்டி, சிறுகதைப் போட்டி, கவிதை ஆக்கப் போட்டி, சிறுவர் கதை ஆக்கப் போட்டி போன்றன இடம்பெறவுள்ளதுடன் போட்டியாளர்கள் தாம் விரும்பிய தலைப்பின் கீழ் போட்டியில் பங்குபற்ற முடியும்.

இதில் பாடசாலை பிரிவுக்கான போட்டிகளில் கவிதைபாடல் மற்றும் கையெழுத்துப் போட்டிகள் மட்டும் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இதற்குரிய விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து ஏப்ரல் மாதம் 7ஆம் திகதிக்கு முன்பு பிரதேச செயலக கலாசார பிரிவுக்கு அனுப்புதல் வேண்டும். திறந்த பிரிவுக்கான போட்டிக்குரிய விண்ணப்பத்தினையும் ஆக்கத்தினையும் எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதிக்கு முன்பாக பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் ஒப்படைத்தல் வேண்டும் ஏனைய பாடசாலைப் பிரிவுக்கான போட்டிகள் (கவிதை பாடல், கையெழுத்துப் போட்டி மாத்திரம் பிரதேச செயலகத்தில் நடைபெறும்) ஏனைய போட்டிகளான கட்டுரை, கவிதை எழுதுதல், பாடல் நயத்தல் போட்டிகள் மாத்திரம் பாடசாலையின் போட்டிக்கு பொறுப்பான ஆசிரியர் நடாத்தி பிரதேச செயலக கலாசார பிரிவில் காலசார அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதிக்கு முன் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (18)




யாழ். றோட்டரக் கழகத்தினால் கைதடி முதியோர் இல்லத்திற்கென தொலைக்காட்சிப் பெட்டியொன்று அண்மையில் இல்லநிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது. (130)

# தப்பி விட்டார் சம்பந்தன்; சிக்கி விட்டார் விக்கினேஸ்வரன்




என்னதான் சொன்னாலும் இப்பொழுதுள்ள தமிழ் அரசியற் தலைவர்களில் சம்பந்தன் ஒரு கெட்டிக்காரர்தான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளே கொதித்துக் கொண்டும் கொந்தளித்துக்கொண்டும் இருந்த குத்து வெட்டுக்களை எல்லாம் அப்படியே அமுக்கி விட்டார் தலைவர்(?).

இந்தக் குத்து வெட்டுகள் முற்றாக அடங்கவில்லை என்றாலும் யாரும் வாலாட்ட முடியாது என்ற நிலையை உருவாக்கி விட்டார்.

இது மட்டுமல்ல, அரசியல் தீர்வை எட்டுவது, மக்களின் நாளாந்தப் பிரச்சினைகள், தேவைகளைத் தீர்ப்பதற்கான பொறுப்பு, முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றப் பிரச்சினைகள், வலி வடக்கு மீள் குடியேற்றம், சிங்களக் குடியேற்றம், உயர்பாதுகாப்பு வலயம், காணிச் சுவீகரிப்பு, காணாமற்போனோரைக் கண்டு பிடித்தல், போர்க்குற்றங்கள் தொடர்பான பிணக்கு என எல்லாவற்றுக்கும் அவர் மாகாணசபையை முன்னிறுத்தி விக்கினேஸ்வரனின் கழுத்தில் கயிற்றைப் போட்டு விட்டார்.

அதாவது இதற்கெல்லாம் அவர் பயன்படுத்தும் கேடயம், வடக்கு மாகாண சபையும் முதல்வர் விக்கினேஸ்வரனுமே.

இனி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும் காணாமல் விடுவதற்கும் பொறுப்பு மாகாணசபையும் விக்கினேஸ்வரனுமே.

இரணைமடுவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு தண்ணீரைக் கொண்டு போவதும் போகாமல் விடுவதற்கும் பொறுப்பு முதல்வர் விக்கியும் வடக்கு மாகாணசபையுமே.

அரசாங்கத்துடன் மோதுவதும் பிடுங்குப்படுவதும் இப்பொழுது வடக்கு மாகாணசபையும் முதல்வர் விக்கினேஸ்வரனுமே.

புலம்பெயர் தமிழர்கள் குற்றஞ்சாட்டினாலென்ன, கண்டித்தாலென்ன எல்லாம் மாகாணசபையின் மீதும் முதல்வர் விக்கினேஸ்வரனின் மீதுமே.

ஊடகங்களும் தேசியவாதிகளும் வைக்கின்ற குற்றச்சாட்டுகளுக்கும் அதிருப்திகளுக்கும் பொறுப்புச் சொல்லும் நிலையும் இப்பொழுது மாகாணசபைக்கும் முதல்வர் விக்கிக்குமே ஏற்பட்டுள்ளது.

நாளைக்கு மக்களுடைய தேவைகளைச் செய்யவில்லை, அவர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் வந்தால் அதற்குப் பதிலளிக்க வேண்டிய–பொறுப்புச் சொல்ல வேண்டிய பொறுப்பையும் மாகாணசபையின் மீதும் விக்கியின் மீதுமே மிக லாவகமாக–சாதுரியமாகச் சுமத்தி விட்டு, குஷியாகக் காலாட்டிக்கொண்டிருக்கிறார் சிங்கன்.

தன்னை நோக்கி வந்த அம்புகளை எல்லாம் தனி ஒரு ஆளாக நின்று தாங்கிய சம்பந்தனைப் பிணையெடுத்திருக்கிறார் விக்கி.

பந்தை விக்கியின் காலுக்குத் தட்டிவிட்டதில் படலே கெட்டிக்காரர் இந்தக் கிழவர்.

சம்பந்தன் என்றால் என்ன சாதாரண ஆளா?

சந்திரிகா குமாரதுங்கவின் காலத்தில் அவருக்குக் குண்டு துளைக்காத கார் இருந்தது. அதைப் பரிசாக வழங்கியிருந்தார் சந்திரிகா அம்மையார்.

அந்தக் காரை வைத்திருந்தபோதே பிரபாகரனிடம் விருந்து சாப்பிட்டார்.

விருந்து மட்டுமல்ல, இன்றைக்கோ நாளைக்கோ என்று மரணத்தறுவாயில் சேடம் இழுந்துக்கொண்டிருந்த தமிழரசுக்கட்சி–தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு உயிரூட்டும் விதமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கி அதற்குத் தலைமைப் பொறுப்பையும் அல்லவா பெற்றவர்.

அதாவது, ஒரு பக்கத்தில் சந்திரிகாவின் குண்டு துளைக்காத காரும் அரவணைப்பும் மறுபக்கத்தில் பிரபாகரனின் விருந்தும் கூட்டமைப்புக்கான தலைமைப் பொறுப்பும் தமிழரசுக் கட்சியைக் காப்பாற்றிய கெட்டித்தனமும் என காரியங்களைச் சாதித்தவர்.

இப்படிக் கணக்குப் பார்த்தால் சம்பந்தன் பெரிய ஆள்தான்.

ஆனால், தமிழ் மக்களுக்கு இந்தப் பெரிய ஆளினால் என்ன நன்மைகள் கிட்டியுள்ளன?

இப்பொழுது இவரால் என்னென்ன நன்மைகளைத் தமிழர்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்?

எதிர்காலத்தில் தமிழ்ச் சமூகமும் வடக்குக் கிழக்கு வாழ் தமிழர்களும் என்ன நன்மைகளை எல்லாம் பெறப்போகிறார்கள்?

இதுதான் இந்தக் கெட்டிக்காரரை நோக்கி நாங்கள் கேட்க வேண்டிய கேள்விகள்.

ஏனென்றால், ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகால அரசியலில் 35 ஆண்டுகளுக்கு மேலாக பாராளுமன்றச் சம்பளத்தைத் தமிழ் மக்களின் விடுதலையின் பேரால் எடுத்துக்கொண்டிருக்கும் இந்தச் சிங்கம் இதற்குப் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

இவர் (சம்பந்தன்) மட்டுமல்ல, இவரைத் தங்களின் தலையிலும் தோளிலும் தூக்கிக் கொண்டாடும் சிந்தனைச் சிற்பிகளும் தொண்டுக் குஞ்சுகளும் இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லியே தீர வேண்டும்.

தலைவர் என்றால் தலைவர்தான். தமிழ் மக்களுக்குக் கிடைத்த தங்கத் தலைவர். வாழ்க தமிழ்ப் பெருங்குடி!

பழகிய மனைவி, பழகிய நாய், தயாராக இருக்கும் பணம் ஆகியவைதான் நம்பிக்கைக்குரிய நண்பர்கள்.

- பெஞ்சமின் பிராங்கிளின்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## எங்கிருந்து தொடங்குவது?

இலங்கையை சிங்கப்பூராக மாற்றும் கனவை ஜே.ஆர். ஜெயவர்த்தன 1970களில் பிரபலமாக்கினார். பதவிக்கு வந்த பிறகு அவருக்கு, 'போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்' என்ற வீம்பு முக்கியமாகி சாண் ஏற நினைத்து முழம் சறுக்கிக் கொண்ட அவலகதி நேர்ந்தது.

நாட்டின் பொருளாதாரத்தை யுத்தக் கறையான் அரிப்பதற்கான ஆரம்ப வசதிகளைச் செய்துகொடுத்தவராக அவர் அமைந்தார்.

யுத்தத்தை முடித்து வைத்த இன்றைய அரசும், 'இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக ஆக்குவோம்' என்று சொல்லும் போது, பழையபடி சிங்கப்பூர்க் கனவே மனதுக்குள் இருப்பதை உணர முடிகிறது.

இந்தியாவில் அண்ணா ஹசாரேயின் ஊழலுக்கெதிரான போராட்டத்தின் போதும், ஊழலை ஒழித்துவிட்டால் நாட்டை முன்னேற்றி விடலாம் என்னும்போது சிங்கப்பூர் உதாரணமே அங்கும் சொல்லப்பட்டது.

சிங்கப்பூர் பலருக்கும் ஒரு இலட்சிய சமூகமாக இன்று தோன்றுவதற்குக் காரணங்கள் உண்டு. ஊழலைக் கட்டுப்படுத்தியதன் காரணமாக அங்கு மக்கள் வாழ்வில் பெரும் வளம் ஏற்பட்டிருக்கிறது என்பது கண்கூடான செய்தியாக இருக்கிறது.

அண்ணா ஹசாரேயின் போராட்டத்தின் போது இப்படி ஒரு குறுஞ்செய்தி சுற்றுக்கு விடப்பட்டது. "1982ஆம் ஆண்டு சிங்கப்பூரில் ஊழல் ஒழிப்பு சட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து ஒரே நாளில் 142 ஊழல் மந்திரிகளும் அதிகாரிகளும் கைது செய்யப்பட்டனர். இன்று சிங்கப்பூரில் நூற்றில் ஒருவரே ஏழை. அங்கு 92 வீத கல்வியறிவு நிலவுகிறது. சிங்கப்பூரில் கறுப்புப் பணத்தின் அளவு பத்து சதவிகிதம் மட்டுமே. அங்கு நூற்றில் ஒருவரே வேலையில்லாமல் இருக்கிறார்."

சிங்கப்பூர் அரசு ஊழலுக்கு எதிரான அமைப்பை நடைமுறைப்படுத்துவதில் எப்படி வெற்றி பெற்றது? சுதந்திரத்துக்கு முந்தைய, பிரிட்டிஷ் காலனியாக இருந்த சிங்கப்பூரில் ஊழல் மலிந்து இருந்ததற்குக் காரணிகளாக இருந்தவை குறைந்த ஊதியம், ஊழலுக்கு தகுந்த தண்டனையின்மை என்றார் நவீன சிங்கப்பூரின் சிற்பியாகச் சொல்லப்படும் லீ க்வான் யூ.

1959ல் சிங்கப்பூர் இங்கிலாந்திடம் இருந்து சுதந்திரம் பெற்றது. "அரசுக்கு கிடைத்த ஒவ்வொரு டொலர் வருமானமும், வழியில் மடைமாற்றப்படாது கடைநிலைக் குடிமகனுக்கு அதன் முழுப் பலனும் கிடைப்பதை நாங்கள் ஒவ்வொரு நாளும் உறுதி செய்தோம்," என்கிறார் லீ க்வான் யூ.

இன்று நேர்மையான நிர்வாகம் உள்ள நாடுகளின் பட்டியலில் சிங்கப்பூர் ஐந்தாவது இடத்தில் இருக்கிறது. லஞ்சம் கேட்பதோ, வாங்குவதோ கூடாது. லஞ்சமாகப் பணம் வாங்கியது உறுதி செய்யப்படாதபோதும், ஊழல் செய்யும் எண்ணத்துடன் செயல்பட்டதாக நிரூபிக்கப்பட்டால் போதும், சிறைத் தண்டனை அளிக்கப்படும்.

ஆசியாவில் ஊழல் ஒழிப்பில் முன்னிலையில் நிற்கும் சிங்கப்பூர், ஏனைய தேசங்களுக்கு சில பாடங்களை உணர்த்துகின்றது.

ஊழலுக்கு எதிரான சட்டம் இருந்தாலும், ஊழலைக் களையத் தேவையான ஆள் பலம் மற்றும் அமைப்பு இருந்தாலும், அந்த அமைப்பு சட்டங்களை நடைமுறைப்படுத்தத் தயாராக இருந்தாலும், உறுதியான அரசியல் தலைமை இல்லாத இடங்களில் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் வெற்றி பெறுவதில்லை.

- ஆசிரியர்.

# வட மாகாண மேல் நீதிமன்ற நீதிபதியாக அன்னலிங்கம் பிரேம்சங்கர் பதவியேற்பு

(கொழும்பு)

யாழ்.மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றிய அன்னலிங்கம் பிரேம்சங்கர், நேற்றுமுன்தினம் பிரதம நீதியரசர் மொகான் பீரிஸ் முன்னிலையில் வடமாகாண மேல் நீதிமன்ற நீதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

மேலும் யாழ்.குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதிகளாக அன்னலிங்கம் பிரேம்சங்கர், முகமட் மக்கி ஆகியோர் நியமனம் செய்யப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர். அத்தோடு திருகோணமலை குடியியல் மேன்முறையீட்டு ஆணையாளராக் கடமையாற்றிய, மா.இளஞ்செழியன் கல் முனைமேல் நீதிமன்ற நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இவர்களுடன் டபிள்யு.பி. வெப் பிரதீப் கெட்டியாராச்சி, சுமுது பிரேமச்சந்திர ஆகியோரும் பொலன்நறுவை, திருகோணமலை குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம், அம்பாறை மேல் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்குறித்த நியமனங்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் இந்த மாதம் 20 ஆம் திகதி முதல் அமுல்படுத்தும் வகையில் வழங்கப்பட்டுள்ளது. புதிய நீதிபதிகள் அனைவரும் பிரதம நீதியரசர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தனர்.

# மத்தள விமான நிலையத்துக்கு படையெடுக்கும் பாம்புகள்

## சரத் பொன்சேகா கிண்டல்

(கொழும்பு)

மிகப் பெரிய வைபவம் ஒன்றை நடத்தி திறந்து வைக்கப்பட்ட மத்தள விமான நிலையத்திற்கு மலைப்பாம்பு, மாப்பிலா போன்ற பாம்புகள் மாத்திரமே வருவதாக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

களுத்துறையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் இன்றைய அரசாங்கம் முழு உலகத்திலும் கடன் பெற்றுள்ளது. கடனை திரும்பச் செலுத்த முடியாமல் வட்டியை மட்டுமே செலுத்தி வருகின்றனர்.

ஏதாவது ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து இந்தப் பிரச்சினைகளை மூடிமறைக்கின்றனர். கடந்த காலத்தில் அம்பாந்தோட்டையில் முட்டாள்தனமாக துறைமுகம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. அதில் தற்போது சீனர்கள் மீன்பிடிக்கின்றனர் என்றார்.

மேலும் மத்தளயில் விமான நிலையத்தை நிர்மாணித்தனர், அங்கு விமானங்கள் வருவதில்லை. விமான நிலையத்திற்கு மயில்கள், மலைப்பாம்பு, விரியன் பாம்பு போன்றவையே வருகின்றன. அதுமட்டுமன்றி காலி என்று அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணித்தனர். அதற்கு செலவிட்ட பணத்தை விட 5 மடங்கு செலவிட்டு காலியில் இருந்து மாத்தறைக்கு அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணித்தனர்.

நாட்டின் ஆட்சியாளரை பிரபாகரனின் உடம்பில் உள்ள முடிக்கும் ஒப்பிட முடியாது என நான் கூறியதை பயன்படுத்தி, கடந்த காலங்களில் எனக்கு எதிராக சேறுபூசும் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. நான் அதனை இன்றும் கூறுவேன்.

பிரபாகரன் பயங்கரவாதி என்ற வகையில் எம்முடன் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்களை நாங்கள் நந்திக்கடல் களப்பில் முடிவுக்குக் கொண்டு வந்தோம். ஆனால் பிரபாகரன் எனது குடும்பத்திற்கோ, படையினரின் குடும்பங்களுக்கோ தொந்தரவுகளைக் கொடுக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# மலையகத்தில் மழை வேண்டி நீரால் அம்மனுக்கு அபிஷேகம்

(கொழும்பு)

மலையகத்தில் தற்போது நிலவி வரும் கடும் வறட்சி காரணமாக நீர் நிலைகள் வற்றியுள்ளதால் நீருக்கான தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என்பதுடன் மலையகத்தின் பிரதான தொழிற துறையான தேயிலை பாதிப்படையக் கூடும் எனவும் மக்கள் மத்தியில் அச்சம் எழுந்துள்ளது.

எனவே உடனடியாக மழையை பெற்றுக் கொடுக்கும் படி இறைவனிடம் கோரும் நிகழ்வாக பெருந்தோட்டப் பகுதிகளில் காணப்படும் அம்மன் கோயில்களில் குடத்து நீர் ஊற்றும் நிகழ்வுகள் தற்போது பரவலாக நடைபெற்று வருகின்றன.

ஆறு அல்லது வேறு நீரூற்றுக்களில் நீரைப் பெற்று அதை ஊர்வலமாக குலவை பாடலுடன் குடங்களில் சுமந்து வந்து அம்மனுக்கு ஊற்றுவதன் மூலம் மழை பெய்யும் என்பது பரம்பரையான ஐதீகம். இந்த செயற்பாட்டினை பெரும் வறட்சிக் காலங்களில் மலையகப் பகுதிகளில் காணமுடியும்.

தற்போது நிலவி வரும் கடுமையான வறட்சியினால் தமது ஜீவனோபாயம் பாதிக்கப்படும் என்பதால் உடனடியாக மழை வேண்டியே இந்தப் பெண்கள் இவ்வாறு நீரை சுமந்து வந்து அம்மனை குளிர்விக்கின்றனர்.

பொகவந்தலாவை எல்படை தோட்டத்தில் நேற்றுமுன்தினம் மாலை இந்த நிகழ்வு இடம் பெற்றதுடன் இந்நிகழ்வு காரணமாக தமக்கு விரைவில் மழை கிடைக்கும் என இவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

# போரை முடிவுக்கு கொண்டுவர பலத்தைக்கொடுத்தது ஜே.வி.பி.

## என்கிறார் கே.டி.லால்காந்த

கடந்த கால யுத்தத்தின் போது ஏற்பட்ட வெற்றியை மகிந்த ராஜபக்ஷ தனக்கு உரிமையான வெற்றி என எழுதி வைத்துக் கொண்டுள்ளார். ஆனால் புலிகளைத் தோற்கடிக்க மகிந்த ராஜபக்ஷவுக்கு ஜே.வி.பி.யே பலத்தைக் கொடுத்தது. என ஜே.வி.பி.யின் மேல் மாகாண முதலமைச்சர் வேட்பாளர் கே.டி.லால்காந்த குற்றம் சாட்டியுள்ளார். கொஸ்கம பிரதேசத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தம் செய்ய முடியாது, அதற்குத் தேவையான வளங்கள் இல்லை எனக் கூறி புலம்பிய மகிந்த ராஜபக்ஷவுக்கு ஜே.வி.பி.யும் தேசப்பற்றுள்ள தேசிய அமைப்பும், நாட்டை நேசிக்கும் மக்களுமே பலத்தை கொடுத்தனர். ஆனால் யுத்தத்தில் வெற்றி பெற்ற பின்னர் அந்த வெற்றியின் உரிமையை மகிந்த அரசு தனதாக்கிக் கொண்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தை விடுவிக்கும் போதும் தொப்பிகலையில் தாக்குதல் நடத்தப்பட்ட போதும் மக்கள் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்புக்களை வழங்கினர். ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பலர் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டனர். விமல் வீரவன்ச, தலைவரின் கரங்களைப் பலப்படுத்தப் போவதாகக் கூறி அரசுடன் இணைந்தார். அரசாங்கத்தை கவிழ்க்கும் எதிர்க்கட்சி ஒன்று அன்று இருக்கவில்லை.

போர் முடிந்தும் ஜனாதிபதித் தேர்தலும் பொதுத் தேர்தலும் நடத்தப்பட்டது. போரில் வென்ற மகிந்தவுக்கு மக்கள் வாக்களித்தனர். இன்று நிலைமை அப்படியல்ல. மகிந்தவின் அமைச்சரவையில் உள்ள 9 அமைச்சர்கள் மீது மோசடிகள் எனக் கூறி விசாரணைகள் நடத்தப்படுகின்றன. கிராம மட்டத்தில் இந்த நிலைமை குறித்து கலந்துரையாடல்கள் நடைபெற்றன. அதன் பிரதிபலனாக பல பிரதேச சபைகளில் வரவு செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டன எனவும் லால்காந்த குறிப்பிட்டார்.

## என்.சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக முந்தைய இரண்டு தீர்மானங்களை முன்மொழிந்த அமெரிக்கா எதிர்பார்த்தபடி இப்போது ஒரு தீர்க்க முடியாத பிரச்சினையில் சிக்கியுள்ளது என்பது அதிகளவு தெளிவாகத் தெரிகிறது. இதன் கருத்து இலங்கை பிரச்சினைகளிலிருந்து விடுதலை பெற்றுவிட்டது என்பதல்ல. மாறாக இன்னும் அதிகமானவை வரும் ஆண்டுகளில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இதைப் பின்தொடரவும் மற்றும் தொடர்ந்து வரக்கூடியுதற்கும் வாய்ப்புகள் உள்ளன.

இலங்கையின் கண்ணோட்டத்தில் புதிய ஐ.நா.மனித உரிமைகள் சபை தீர்மானத்துக்கு மறுப்புத் தெரிவிப்பவர்களின் எண்ணிக்கையை ஒரு சிறிய அளவிலாவது சேர்த்துக் கொண்டால் அது போதுமானது. நடுநிலை வகிப்பவர்கள் இருந்தால்கூட நல்லதுதான். அவர்களது தீர்மானத்துக்கு ஒரு சிறிய அல்லது மட்டுமட்டான பெரும்பான்மையுடன் கூடிய வெற்றி, அதைக் கொண்டுவருபவர்கள் கூறும் காரணங்களுக்கு (அப்படி ஏதாவது இருந்தால்) போதுமானதாக இருக்காது, மற்றும் புதிய தீர்மானத்திற்கு பின்னால் இருப்பவர்களின் கூட்டான கௌரவத்தின் தோற்றத்துக்கும் அது பாதிப்பை ஏற்படுத்தும். இப்போது இலங்கை அதிலிருந்து விடுதலை பெற முடிந்தால் மட்டுமே, எதிர்காலத்தில் உள்நாட்டுப் பிரச்சினையோ அல்லது சர்வதேசப் பிரச்சினையோ ஏற்பட்டால்,

முடியுமா என்பது தொடர்ந்தும் ஒரு மில்லியன் டொலர் கேள்வியாக இருந்து வருகிறது. அல்லது தாங்கள் எதிர்பார்க்கும் இறுதி முடிவு தங்களுக்கு திருப்திகரமாக இல்லாமலிருந்தால் மேற்கு இந்தத் தீர்மானத்தை அடுத்த ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டு வர எண்ணினால் மேற்குறித்த இரண்டு முயற்சிகளும் எவ்வளவு தூரத்துக்கு நீடிக்க முடியும். மேற்கின் இக்கட்டான நிலையை காரணம்காட்டி இலங்கை நிரந்தரமாக சிக்கலில் இருந்து தப்பி விட்டதாக அர்த்தம் கற்பிக்க முடியாது. மாறாக அது சுட்டிக்காட்டுவது இந்த வேதனையான நடவடிக்கை சற்றே தாமதமாக நடக்கிறது, ஆனால் பிரச்சினையை தீர்க்கும் முடிவான விளையாட்டு எப்போது என்பது இன்னும் நிச்சயமாகத் தெரியாது. இலங்கைக்கோ மற்றும் அதன் மக்களுக்கோ இது ஒருமுறை

சுமத்தும் பழி, உள் நாட்டிலுள்ள சிங்கள சமூகத்தினரின் மனங்களில் பாதிப்பை ஏற்படுத்தாது.

இலங்கை அரசாங்கம் தான் நடத்தும் ராஜதந்திரப் போரில் தோற்றுப்போகும் நிலை ஏற்பட்டால், பெரும்பான்மை சிங்களவர்களின் மனங்களை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் முயற்சிகளுக்கு எதிராக உள்நாட்டில் மிக மோசமாகத் தூண்டிவிட இயலும். தமிழர்கள் இதனிடையில் மாட்டிக் கொள்வார்கள். பொறுப்புக் கூறல் விடயத்தில் தமிழர்களுக்கு சர்வதேச சமூகம் வழங்கிய வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. அல்லது இதற்கிடையில் தமிழர்கள் அதை விட்டுக் கொடுப்பது போலவும் தெரியவில்லை - அல்லது அவர்களிடம் அப்படிச் செய்யும் பழக்கம் இல்லையா எனக் கேட்கவும் தேன்றுகிறது.

இந்த நிலையில் எப்படி முன்னோக்கிச் செல்வது என்பது, இலங்கையிலுள்ள தமிழர்கள் மற்றும் குறிப்பாக புலம் பெயர் சமூகத்திலுள்ள அவர்களின்

தன்னிடமே கேட்கவேண்டும்.

சர்வதேச சமூகத்திடம் அவர்கள் கேட்டவற்றை பெற்றுத் தருவதில் சர்வதேச சமூகம் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றுள்ளது, இதனால் எதிர்காலத்தில் அவர்களுக்கு நடக்கப் போவது என்ன, போன்றவற்றில் தமிழர்கள் பெற்றுள்ள அனுபவத்துடன் அந்தக் கேள்விகள் பொருத்தமானதாக இருக்க வேண்டும். சர்வதேச சமூகத்திடம் அவர்கள் பெற விரும்பியதை பெற முடியாவிட்டால், அவர்கள் திரும்பவும் அதைப்பற்றியே இன்னமும் முறைப்பாடு செய்யப் போகிறார்களா அல்லது தற்கால யதார்த்தங்களுக்கு ஏற்றவாறு தங்கள் சொந்த நிலைப்பாடு மற்றும் சூழ்நிலை என்பனவற்றை மீளாய்வு செய்யப் போகிறார்களா?

கடந்த காலங்களில் தமிழ்த் தலைமை, தாங்கள் நம்பிக்கை வைத்த மற்றவர்கள், தங்களுக்குத் துரோகம் இழைத்துவிட்டதாக தமிழர்களை நம்பச் செய்திருந்தார்கள். அத்தகைய ஒவ்வொரு துரோகமும் தமிழர்களை குறிப்பாக தமிழ்த் தேசியவாத சிந்தனையாளர்களை, தனது சமூகம் தங்களது உரிமைகளுக்காக போராடுகிறது மற்றும் அவர்களுக்கான ஒரே பதில் தனிநாடு என்கிற இலட்சியம்தான் என்று சம்மதிக்கும்படி செய்திருந்தது.

தற்போதைய போக்கும் தவிர்க்க முடியாத ஒன்றினை நோக்கி, அவர்களில் சிலர் எதிர்பார்த்த ஒன்றினை நோக்கி அங்குலம்



**இலங்கை அரசாங்கம் தான் நடத்தும் ராஜதந்திரப் போரில் தோற்றுப் போகும் நிலை ஏற்பட்டால். பெரும்பான்மை சிங்களவர்களின் மனங்களை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் முயற்சிகளுக்கு எதிராக உள்நாட்டில் மிக மோசமாகத் தூண்டிவிட இயலும். தமிழர்கள் இதன் இடையில் மாட்டிக் கொள்வார்கள்.**

**கடும்போக்கு தமிழ் தேசியவாதிகள் அல்லது பிரிவினைவாதிகள் சிந்திய பாலுக்காக ஒரு நாடகம் போடுகிறார்கள் – ஆனால் அதற்கான பழியை எப்போதும் மறு பக்கத்தினரையே ஏற்றுக் கொள்ள வைக்கிறார்கள். மீண்டும் ஒருமுறை அவர்களால் – தாங்கள் சர்வதேச சமூகத்தையே நம்பியதாகவும் அவர்கள்கூட தங்களை (மீண்டும் ஒருமுறை) ஏமாற்றி விட்டதாக சொல்ல முடியும். அதன்பின் அவர்கள் உள்நாட்டில் உள்ள தமிழ் சமூகத்தினர் மீது போருக்குப் பிந்தைய விரோத உணர்வுகளைத் தூண்டிவிட்டு இலங்கை அரசாங்கம் மற்றும் பெரும்பான்மை சிங்கள ஆட்சியாளர்கள் மீது திரும்பவும் வெறுப்புக்கொள்ள வைப்பதை ஆரம்பிப்பார்கள்.**

# மீண்டும் ஒருமுறை அவர்களால் சர்வதேச சமூகம் ஏமாற்றி விட்டதாக சொல்ல முடியும்

ஏனைய சிறிய நாடுகளிடம் இலங்கையின் சொல்லுக்கு ஆதரவு கிட்டும்.

இதை அச்சுறுத்தல் அல்லது எச்சரிக்கை என்று எப்படி அழைத்தாலும் சரி ஐ.நா. மனித உரிமைகள் சபை தீர்மானம் - 3இன் தயாரிப்பை மேற்கொள்ளும் அமெரிக்கா அது ஒரு வெறுமே குரைக்கிற ஆனால் கடிக்காத - அதனால் கடிக்க முடியாத - ஒரு தீர்மானமாக இருக்க வேண்டும் என்றே விரும்புகிறது. அதாவது ஐ.நா. மனித உரிமைகள் சபையில் உள்ள எத்தனை அங்கத்தவர்கள் அதனை விரும்புகிறார்கள், மற்றும் ஒரு உயர் அதிகாரம் மிக்க நாட்டின் முயற்சியை அவர்கள் பின்தாங்க வேண்டுமே தவிர ஒரு எதிரான வாக்களிப்பதாகவோ அல்லது நடுநிலை வகிப்பதாகவோ இருக்கக்கூடாது, அல்லது அவர்களின் கருத்தினை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் அமெரிக்கா கவனமாக உள்ளது.

அந்த வரைபின் வார்த்தைகளை எவ்விதம் அமைப்பது, மற்றும் ஏனைய வாக்களிக்கும் அங்கத்தவர்களுடன் எப்போ மற்றும் எங்கே அதற்கு ஒத்துழைப்பதற்காக பேச்சுவார்த்தை நடாத்துவது என்கிற கேள்விதான் தற்போது அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஏனைய மேற்கு நாடுகளின் மனங்களில் பிரதானமாக இடம்பிடித்து உள்ளது.

மூன்றாம் உலக நாடுகள் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தனியான ஒரு பெரிய குழுவாக உள்ளார்கள், மற்றும் இலங்கைக்கு எதிரான ஒரு பிரேரணைக்கு சாதகமாக அவர்களை ஒற்றுமைப் படுத்தி வைத்திருப்பதற்கு ஒன்றில் அழுத்தங்களைப் பிரயோகித்தோ அல்லது பணபலத்தைப் பயன்படுத்தியோ

மட்டும் நடக்கும் ஒரு சம்பவமில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அது நாட்டிலுள்ள மக்களின் நலன்களுக்கு பயன்படுத்தக்கூடிய சக்தியையும் மற்றும் நேரத்தையும் வீணாக விரயமாக்கி வருகிறது.

இடைப்பட்ட காலத்தில் ஜனாதிபதி ராஜபக்ஸ தலைமையிலான இலங்கையின் தலைமைத்துவம், ஒரு காலத்தில் காலனித்துவ வாதிகளாக இருந்தவர்கள் மற்றும் அவர்களின் நவீன காலனித்துவத்தை கைப்பற்றி இருப்பவர்கள் ஆகியவர்களுக்கு எதிரான தேசிய உணர்வுகளை தூண்டிவிடக் கூடியதாக உள்ளது. ஈழப்போர்-4 இல் பெற்ற வெற்றி வருடங்கள் பல கடந்த பிறகும், தற்பொழுது ஆட்சியில்உள்ள கூட்டணியான ஸ்ரீ.ல.சு.க - ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, மாகாணங்களுக்குப் பின் மாகாணங்களில், தேர்தலுக்கு மேல் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கும் துணையாக உள்ளது. மேலும் ஜனாதிபதி தேர்தலுக்கான குறைவான காலத் தவணையான நான்கு வருடங்கள் நவம்பர் 2014இல் முடிவடைவதால், இரண்டு வருடங்கள் முன்னதாக எந்த நேரத்திலும் ஜனாதிபதி தேர்தலை நடத்த தலைமைத்துவம் காத்திருக்கிறது.

அவருக்கு இணையானவர்கள் அதிக தூரம் செல்ல முடியாததால், இந்த வழியில்தான் ஜனாதிபதி ராஜபக்ஸ போருக்குப் பின்னான நாட்டு மக்களின் (சிங்களவர்கள்) மனங்களை 2010இல் முன்கூட்டியே நடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் கவர்ந்து வெற்றி பெற்றார். அடுத்ததாக உள்ள கேள்வி 2015இல் நடக்கவேண்டிய நாடாளுமன்றத் தேர்தல்களும் முன்கூட்டியே நடாத்தப் படுமா என்பதுதான். சர்வதேச சமூகம்

சகோதரர்கள் ஆகியோர் மத்தியில் உள்ள மில்லியன் டொலர் கேள்வியாக இருக்கிறது. இந்தவேளையில் அங்கு ஏற்பட்டுள்ள அவர்கள் முன்பு அறிந்திராத வகையான தாமதங்கள் அவர்களை மிருதுவாக்கி, நாட்டில் உள்ள மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்திற்குத் துணையாக நின்று அரசியல் நடவடிக்கைகளுக்கு புத்துயிர் அளிக்க உதவுமா? இதுவும் மீண்டும் பதில் தேவையான ஒரு கேள்வி, வெகு விரைவிலேயே தங்களிடமே அந்தக் கேள்விகளை கேட்கும் நிலைக்கு தமிழர்கள் தங்களை தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும்.

கடும்போக்கு தமிழ்த் தேசியவாதிகள் அல்லது பிரிவினைவாதிகள் சிந்திய பாலுக்காக ஒரு நாடகம் போடுகிறார்கள் - ஆனால் அதற்கான பழியை எப்போதும் மறு பக்கத்தினரையே ஏற்றுக் கொள்ள வைக்கிறார்கள். மீண்டும் ஒருமுறை அவர்களால் - தாங்கள் சர்வதேச சமூகத்தையே நம்பியதாகவும் அவர்கள்கூட தங்களை (மீண்டும் ஒருமுறை) ஏமாற்றி விட்டதாகச் சொல்ல முடியும். அதன்பின் அவர்கள் உள்நாட்டில் உள்ள தமிழ் சமூகத்தினர் மீது போருக்குப் பிந்தைய விரோத உணர்வுகளைத் தூண்டிவிட்டு இலங்கை அரசாங்கம் மற்றும் பெரும்பான்மை சிங்கள ஆட்சியாளர்கள் மீது திரும்பவும் வெறுப்புக் கொள்ள வைப்பதை ஆரம்பிப்பார்கள்.

இதில் கேள்வி என்னவென்றால், இலங்கையிலுள்ள தமிழ்ச் சமூகம் மற்றும் அரசியல்வாதிகள் உட்புறமாகத் திரும்பி கடந்த காலத்தில் மிதவாத அல்லது போராளித் தலைமைகளிடம் கேட்பதை தவிர்த்த சில பொருத்தமான கேள்விகளை தற்பொழுது

அங்குலமாக முன்னேறுகிறது, அவர்கள் மத்தியிலுள்ள இன்னும் சிலர் அந்த வழியில் செல்வதையே விரும்புகிறார்கள் - தங்களை இணங்க வைப்பது மட்டுமன்றி மீதமுள்ள தமிழர்களிடமும் அவர்கள் திரும்பவும் போராடாமல் இருப்பதற்கு சிறிய தெரிவுகளே உள்ளன என்று நம்ப வைக்கிறார்கள்.

அப்படியானால் இலங்கை அரசாங்கம் மட்டும்தானா அதற்கான இலக்கு, அல்லது ஐ.நா. மனித உரிமைகள் சபையிலும் ஏனைய இடங்களிலுமுள்ள இடைக்கால முட்டுக்கட்டை, உள்நாட்டிலும் மற்றும் வெளிநாட்டிலும் உள்ள தமிழர்களுக்குத் தங்களது பழைய மற்றும் மறக்க முடியாத வழிகளை நோக்கி முன்னேறுவதை நியாயப் படுத்துவதற்கு ஏற்ற காரணமாக தோன்றுகிறதா, அதனால் சர்வதேச சமூகம் குற்ற உணர்ச்சி அடைந்து தங்களின் வழிமுறை சரியானது ஏற்றுக் கொள்ள வைப்பதற்காகவா?

அல்லது இந்த விடயத்தில் சர்வதேச சமூகத்துக்கு வேறு ஏதாவது வழி உள்ளதா - எல்லாவற்றையும் விட மேற்கொண்டு பொறுப்புக்கூறல் விடயங்களுக்கு அப்பால் செல்ல மற்றும் ஒட்டு மொத்தமாக இனப் பிரச்சினையை தீர்க்க அவர்களிடம் தெளிவான இலக்குகளோ அல்லது மூலோபாயமோ இருப்பது போலத் தெரியவில்லை.

# நாம் சத்தமின்றி இருந்தாலே மக்கள் நியாயத்தை வழங்குவார்கள்

## நம்பிக்கை கொள்கிறார் ஹிருனிகா



நாம் எந்தவித கருத்துக்களையும் தெரிவிக்காது இருந்து, தற்போது சிறந்த பெறுபேறொன்றை மக்களிடமிருந்து பெற்றுள்ளோம். நான் சத்தமின்றி இருந்தேன். எனது அன்பான மக்கள், நியாயத்தை நிலைநாட்டுவார்கள் என நான் அறிவேன், என்று ஹிருனிக்கா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.


ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஹிருனிக்கா பிரேமச்சந்திர, கொட்டிகாவத்தை பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டுஉரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

ஜனாதிபதியை சந்திப்பதற்காக நான் சென்றிருந்தேன். ஏன் முன்னரைப் போன்ற பாசம் தற்போது என்மீது கிடையாது என்று நான் வினவினேன். அவ்வாறு இல்லை மகளே! எந்தப் பிரச்சினையும் கிடையாது. செல்லும் இடம் எல்லாம் அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை தெரிவிக்கின்றீர்கள் என்றார். அரசாங்கத்தைத் திட்டவில்லை என நான் கூறினேன். எனது தந்தைக்கு எதிராக அரசாங்கம் எந்தவித செயற்பாடுகளையும் முன்னெடுக்கவில்லை. நான் அரசாங்கத்திற்கு எதிரான நபர் அல்ல. நான் தனிப்பட்ட ஒருவருக்கு எதிராகவே செயற்படுகின்றேன்.

அதற்கு ஜனாதிபதி, எதிர்க்கட்சிகள் தனக்கு எதிராக வேறுபட்ட விமர்சனங்களைக் கூறுவதாகவும், தான் அவர்களுக்கு எதிராக எந்தவித கருத்தையும் வெளியிடுவதில்லையெனவும் அவர் கூறினார். அதேபோன்று, யார் அபகீர்த்தியேற்படுத்துகின்றார்களோ அவர்களே அபகீர்த்தி அடைகின்றனர். இறுதியில் அதனைச்செய்தவர்களே அபகீர்த்தியை எதிர்நோக்குவார்கள் எனக் கூறினார்.

## பாரதலக்ஷ்மன் கொலை தொடர்பில் துமிந்தவுக்கு முகத்தோற்ற வழக்கு பதிவு



(கொழும்பு)

ஜனாதிபதியின் ஆலோசகர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரன் மற்றும் 4 பேரை கொலை செய்தமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்தசில்வாவுக்கும் மற்றும் 12 பேருக்கும் எதிராக முகத்தோற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக கொழும்பு மேலதிக நீதவான் பிரியந்த லியனனே நேற்று தெரிவித்துள்ளார்.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரன் மற்றும் 4 பேரை கொலை செய்தமை, பிரேமச்சந்திரனின் மெய்ப்பாதுகாவலருக்கு கடுமையான காயத்தை ஏற்படுத்தியமை தொடர்பான குற்றச் சாட்டுகளின் பேரிலேயே இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும் இதன்படி அடுத்து வழக்குத் தவணை தினமான ஏப்ரல் 1 ஆம் திகதியன்று குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு எதிரான குற்றப்பத்திரிகை வாசிக்கப்படுமென மேலதிக நீதவான் கூறினார்.

சுருக்க முறையற்ற விசாரணையின் போது வழக்கு தொடருநரால் நெறிப்படுத்தப்பட்ட சாட்சியம் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கூட்டாக இந்தக் கொலைக்கு பொறுப்பானவர்கள் என முகத்தோற்றத்தில் நிரூபிப்பதென சிரேஷ்ட அரச வழக்குரைஞர் துஸித்த முதலிகே வாய்மொழி தொகுப்புரையின் போது கூறியதை கருத்திலெடுத்த மேலதிக நீதவான் இதனைத் தெரிவித்துள்ளார்.

## 8 செயற்குழு நாடுகளுக்கு ஜனாதிபதி தலைமை



பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த எட்டு செயற்குழு நாடுகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ தலைமை தாங்கவுள்ளார்.

பொது நலவாய நாடுகளின் 2915 இன் பின்னர் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் அந்த செயற்குழு இணைந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியுடன் ஆஸ்ரேலியாவின் அந்தனி எபோட், சைப் பிரஸின் நிக்கோஸ் எனாஸ்டசியேட்ஸ், கிரேனடாவின் கலாநிதி கீச் மிச்சேல், சிராலியோனின் ஏனஸ் பேய் கொரோமா, டெங்கோ வின் சியாலி அட்டோன் கோ டுய்வக்காயோ பிரபு மற்றும் டன்சானியாவின் ஜேகாயா கில் வெட்டி ஆகியோரும் இணைந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் குழுவில் பங்களாதேஸ் பிரமதர் சேக் ஹசினாவையும் பங்கு கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் பங்களாதேஸ் ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த நவம்பர் மாதம் கொழும்பில் இடம்பெற்ற பொது நலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு இடம்பெற்றதை அடுத்து, பொது நலவாய நாடுகள் 2915 இன் பின்னர் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் இணைந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள இணக்கம் காணப்பட்டது.

இதற்கமைய பொதுநலவாய நாடுகளின் பரிந்துரைகள், ஐக்கிய நாடுகள் சபையின் 69 ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## 100டொயடா கொரலா வாகனம் பொலிஸ், இராணுவத்துக்கு கையளிப்பு



(கொழும்பு)

இலங்கை பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கு பாகிஸ்தான் இந்துஸ்மோட்டடர்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட 100 டொயடா கொரலா கார்களை கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இலங்கை பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்றது.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ இவ்வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இலங்கைக்கான பாகிஸ்தானிய உயர் ஸ்தானிகர், ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் காஷிம் குரைஷி, இலங்கையின் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்க, இலங்கை பொலிஸ் படை தளபதி என். கே. இலங்கக்கோன் போன்றோரும் இவ்வைபவத்தில் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் இந்துஸ் மோட்டர்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. அலி அஸ்கார் ஜமாலி மற்றும் இஸ்மாயில் அகமட் சேதி, பாதுகாப்பு ஆலோசகர் கர்னல் 'ஹீரியர் பர்வாஸ் பூட், ஊடக இணைப்பாளர் திரு. தாவுட் எதிஷாம் ஆகியோர் கலந்து கொணடமை குறிப்பிடத்தக்கது.

## தேசத்திற்கு மகுடம் கண்காட்சி 6000 பொலிஸார் பாதுகாப்பு

(கொழும்பு)

தேசத்திற்கு மகுடம் கண் காடசியின் பாதுகாப்புப்பணிகளுக்கு 6000 பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குளியாப்பிட்டியவில் தேசதிற்கு மகுடம் கண்காட்சி நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பாதுகாப்புப்பணிகளை மேற்கொள்வதற்காக பெரும் எண்ணிக்கையிலான பொலிஸாரை ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதில் ஆயிரம் உத்தியோகத்தர்கள் சிவில் உடையில் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். பொலிஸாருக்கு விசேட அதிரடிப்படையினரும், முப்படையினரும் ஒத்துழைப்பு வழங்க உள்ளனர்.

சிறுவர்களை அழைத்துச் செல்லும் பெற்றோர் மிகவும் அவதானமாகச்செயற்படவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## உடல் வலுவிழந்தோர் தேர்தலில் வாக்களிக்க வசதி

### தேர்தல்கள் ஆணையாளர் தகவல்

(கொழும்பு)

மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்க வருகைதர முடியாமல் வலுவிழந்த வாக்காளர்களுக்கு விசேட போக்குவரத்துக்காக விண்ணப்பிக்க முடியும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய வாக்காளர்களை அறிவுறுத்தியுள்ளார்.

இந்தப் போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் வலுவிழந்தோர் எதிர்வரும் மார்ச் மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னதாக உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

போக்குவரத்து வசதியினைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கையை அவர் மேற்கொள்வார் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட வாக்காளர் மாதிரி விண்ணப்பப் படிவமொனறைத் தயாரித்து விண்ணப்பங்களை உரிய மாவட்ட தெரிவதாட்சி அலுவலருக்கு சமர்ப்பிக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் நபர் நடந்து அல்லது பொது வாகனங்களில் போக முடியாதவாறு வலுவிழந்திருப்பதன் தன்மையை விபரித்து பதிவு செய்யப்பட்ட வைத்தியர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட வைத்திய அத்தாட்சிப் பத்திரமொன்றின் மூலம் தமது விண்ணப்பத்தை உறுதிப் படுத்தும் பட்சத்தில் அதற்கான முடிவை மேற்கொள்ள தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு உதவியாக இருக்கும்.

தன்னைப் பரிசோதித்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் ஒருவர் அரசாங்க வைத்தியரிடம் விண்ணப்பிக்குமிடத்து அவர் அவ்வைத்திய அறிக்கையினைக் கட்டணமேதுமின்றிப் பெற்றுக்கொள்ளலாம்.



தனியார் அல்லது சுதேச வைத்தியர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளில் அவவைத்தியரின் பெயரையும் பதிவு செய்யப்பட்டுள்ள இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## 4000 கிராமசேவையாளர்கள் அடுத்த மாதம் நியமனம்



(கொழும்பு)

4000 கிராம சேவையாளர்களுக்கு அடுத்த மாதம் நியமனம் வழங்கப்படவுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது

புதிதாக நியமனம் பெறவுள்ள 4000 கிராம சேவை அதிகாரிகளினதும் பெயர் விபரங்கள் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் இணையத்தளம் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் கிராம சேவகர்களுக்கான நியமனம் வழங்கப்படவுள்ள நிலையில் போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைகளுக்குத் தோற்றி தகைமை பெற்றோரின் விபரங்களே பொதுநிர்வாக அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கிணங்க விண்ணப்பதாரிகள் www.pubad.gov.lk என்ற இணையத்தள முகவரியில் தமது விபரங்களைத் தெரிந்து கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உளசமூக சாகித்தியன் யோசபாலா எழுதிய "உளம்மகிழ" நூல்வெளியீட்டு விழா அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர் உரையாற்றுவதையும், நூல் வெளியீட்டு வைக்கப்படுவதையும், நூலாசிரியருக்கு பாதிரியார் ஸ்ரீபன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் காணலாம்.

## முச்சக்கர வண்டிகளுக்கு

# பரமேஸ்வரா சந்தியில் தரிப்பிடம்



பரமேஸ்வராச் சந்தியில் தனியார் முச்சக்கர வண்டிகளை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் மேற்கொண்டார்.

முச்சக்கர வண்டி உரிமையாளர்களால் பரமேஸ்வராச் சந்தியில் (பலாலி வீதி) முச்சக்கர வண்டிகள் நிறுத்துவதற்கான வசதிகளை ஒழுங்கு செய்துதருமாறு கோரிக்கை விடுத்ததற்கு இணங்க வி.கே.ஜெகன் நேற்று முன்தினம் அவ்விடத்திற்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார். தொடர்ந்து மின்சார சபையால் தற்போது பாவனைக்குட்படுத்தாத பகுதியை தெரிவு செய்து யாழ்மாநகரசபை ஆணையாளர் பிரணவநாதனுடன் தொடர்பு கொண்டு, அவ்விடத்திலுள்ள கட்டடத்தினையும், கட்டடத்தின் கழிவுகளையும் அகற்றி விட்டு, முச்சக்கர வண்டிகளை நிறுத்துவதற்கான வசதிகளை ஏற்பாடு செய்து கொடுக்குமாறு கூறினார்.

இதன்போது நல்லூர் பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் அம்பலம் ரவீந்திரதாசன், பரமேஸ்வராச்சந்தி முச்சக்கர வண்டி சங்கத் தலைவர் ந.விஜயகுமார், உபசெயலாளர் சி.கனகராசா (ராசா) ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வெங்காயத்தின் விலை வீழ்ச்சி

(வரணி)

கொடிகாமம் பொதுச்சந்தையில் தற்போது வெங்காயத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த சில மாதங்களாக 250 ரூபாவரை விற்பனை செய்யப்பட்ட வெங்காயம் தற்போது 50 முதல் 60 ரூபா வரை விலைச்சரிவு அடைந்துள்ளது. தற்போது வெங்காயம் அறுவடை செய்வதால் இன்னும் விலைச்சரிவு அடையுமென சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (150)

# நம்பிக்கை மோசடி செய்த நபருக்கு சிறைத்தண்டனை

நம்பிக்கையினடிப்படையில் உழவு இயந்திரப் பெட்டி ஒன்றை மாங் குளம் பகுதியிலுள்ள நபர் ஒரு வரிடமிருந்து வாங்கி அவருக்கு தெரியாமல் விற்றது தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஒருவருக்கு ஒருவருட கடூழியச்சிறை விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தீர்ப்பளித்துள்ளார்.

350000 ரூபா பெறுமதியான உழவு இயந்திரத்தை நம்பிக்கை மோசடி செய்ததாக எதிரி குற்றஞ் சாட்டப்பட்டதுடன் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்தே இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. பொலிஸார் வாகனத்தை மீட்டதுடன் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் உரிமையாளரிடம் வாகனத்தை கையளித்தனர். (170)

# சிவிக்சென்ரர் வீதியை செப்பனிடுமாறு கோரிக்கை

(கொடிகாமம்)

கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட வட்டக்கச்சி வைத்தியசாலைக்கு அருகாமையில் உள்ள சிவிக் சென்ரர் வீதி திருத்தும் பணி மந்தகதியில் இடம்பெறுவதாக அப்பகுதி பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதி திருத்தும் பணி 03 மாதங்களிற்கு முன்பு தொடங்கப்பட்டுள்ளபோதிலும் வேலைகள் முடிவுறுத்தாமல் கற்கள் வீதிக்கு பறிக்கப்பட்டு பரவி உள்ள நிலையில் தார் ஊற்றாமல் காணப்படுகின்றது.

இப்பகுதியில் உள்ள 50 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் இவ்வீதியினையே பயன்படுத்துகின்றனர்.

மேலும் இப்பகுதியில் பாடசாலை, தபாற் கந்தோர், வைத்தியசாலை என்பன உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதிக்கான கள ஆய்வுப் பணி (பரிசோதனை) ஒப்பந்தகாரர் மூலம் மேற்கொள்ளாது சபை நிதிமூலம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனமெடுத்து கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட சிவிக் சென்ரர் வீதிப்பணிதொடர்ந்து நடைபெற்று பொது மக்கள் பாவனைக்கு விடப்பட வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (130)

## "பாலுமகேந்திரா அழியாச்சுடர்" அஞ்சலியும் கருத்துப் பகிர்வும்

"உயில்" கலை இலக்கிய சங்கத்தின் ஏற்பாட்டில் "பாலுமகேந்திரா அழியாச்சுடர்" அஞ்சலியும் கருத்துப் பகிர்வும் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பருத்தித்துறை வீதி, இமையாணன், ஆகாயம் பதிப்பகத்தில் இடம்பெறவுள்ளது.

தி.செல்வமனோகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் உரைகளை அ. யேசுராசா, சி.விமலன்ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். நன்றியுரையை யாத்திரிகன் நிகழ்த்துவார். நிகழ்வில் "நம்பிக்கை" குறும்படக் காட்சியும் கலந்துரையாடலும் இடம்பெறும். ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (90)

# பழுதனை மாசேரி வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(வரணி)

வரணி வடக்கு தம்பான் பழுதனை மாசேரி வீதி மிக நீண்ட காலமாக கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றது. இவ் வீதி புனரமைப்பு செய்யப்படாததால் வட வரணி மக்கள் மாசேரி, காட்டுப்புலம், மாவில் போன்ற பிரதேசங்களுக்கு மாற்று வழிப் பாதையை பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ் வீதி சீர்செய்யப்பட்டால் மேற்படி மக்கள் கொடிகாமம், பருத்தித்துறை வீதிக்கு சுலபமாக பயணிக்கவும் மற்றும் வட வரணி, தம்பான் மக்கள் இப்பகுதிக்குச் சென்று வரவும் முடியும்.

இவ்வீதியில் இறப்பு பிறப்பு விவாகப்பதிவாளர் அலுவலகமும் அமைந்துள்ளது. எனவே இந்த வீதியை புனரமைப்புச் செய்ய உரியதரப்பு முன்வருமா? எனப் பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (150)

## முரசின் இன்றைய பலன்



(22.02.2014 சனிக்கிழமை)

விஜய வருஷம் மாசி மாதம் 10 ஆம் திகதி.
விசாக நட்சத்திரம் காலை 7.44 வரை.
பின் அனுசம். சப்தமி / அட்டமி.
இராகு காலம் 09.31 - 11.01 வரை. சுபநேரம் 03.31 - 05.01 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பெற்றோரின் புத்திமதியைக் கேட்டதால் பிரச்சினையிலிருந்து தப்புதல், நிதானத்தை கடைப்படித்தல். |
| ரிஷபம் | உறவினர் வருகையால் மகிழ்ச்சி ஏற்படல், பாரபட்சம் காட்டியதால் பிதாவுடன் முரண்படும் நிலை. |
| மிதுனம் | பரீட்சையில் தோல்வியால் முற்றுப்புள்ளி வைத்தல், நீர்க்கண்டத்தினின்றும் பிறர் உதவியால் மீட்கப்படல். |
| கடகம் | தொழிலை இழக்கும் நிலை, மரியாதை வழங்காததால் முரண்பாடு. |
| சிம்மம் | மாணவர் வீசாவில் வெளியூர் செல்ல அனுமதி கிட்டல், கருத்து வேற்றுமை அகன்றதால் உறவினருடன் சமூக நிலைஏற்படல். |
| கன்னி | வெளியூர் பயணத்தை ஒத்திவைத்தல், புதிய மனையில் குடிபுக ஆயத்தமாதல். |
| துலாம் | பிறரின் நடத்தை பற்றி அவதானமாக இருத்தல், சொத்துப் பிரச்சினையால் குடும்பத்தில் கலவரம். |
| விருச்சிகம் | தெய்வதரிசனம் கிடைத்தல், கடன் பெற காவற்துறையை நாடல். |
| தனுசு | மனைவியுடன் ஏற்பட்ட தகராறு தீர்ந்ததால் ஒற்றுமை ஏற்படல், திடீர் பிரயாணம் மேற்கொள்ளல். |
| மகரம் | விவாகப் பேச்சு முடிவுக்கு வருதல், திருட்டு முயற்சி தடைப்படல். |
| கும்பம் | குடும்பத்தில் குதூகலம், அதிர்ஷ்ட இலாபச் சீட்டினால் பணம் அள்ளி மகிழ்தல். |
| மீனம் | தெய்வதரிசனம் கிடைத்தல், தேக நலன் பாதிப்பால் பயணத்தை கைவிடல். |

விளையாட்டுச் செய்திகள்

# அரையிறுதியில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன்

(இளவாலை)

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி முன்னேறியுள்ளது.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கினால் அதன் அங்கத்துவ அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்டு வரும் தலைவர் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியும், பண்டத்தரிப்பு பிறைற்ஸ்ரார் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் சாவற்காடு மகாத்மா அணியும் கல்வளை விநாயகர் அணியும் மோதின. இதில் இரு அணிகளுமே சமபலத்துடன் மோதிக் கொண்டன. இதன் காரணமாக 1-1 என்ற கணக்கில் இப்போட்டி சமநிலையில் நிறைவடைந்தது. பின்னர் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் அவல்வளை விநாய்கர் அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இதேவேளை, இன்றைய தினம் அரையிறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியை எதிர்த்து தெல்லிப்பளை யூனியன்ஸ் அணியும், தொடர்ந்து நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியும், தகுதி காண் போட்டியில் வெல்லும் அணியும் மோதவுள்ளன.

(48,93)

## கபடி, வலைப்பந்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் ஆண்கள் பெண்களுக்கான கபடிப் போட்டி, வலைப்பந்தாட்டம், கயிறிழுத்தல் போட்டிகள் இன்று காலை 8.30 மணி முதல் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

எனவே பதிவு செய்த இளைஞர் கழகங்கள் இப்போட்டிக்கு உரிய நேரத்தில் வருகை தருமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (48)



## வீனஸ் முன்னேற்றம்

(டுபாய்)

டுபாய் டுட்டி பிரீ ரென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் விளையாட, அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் தகுதி பெற்றார்.

காலிறுதியில் இத்தாலி வீராங்கனை பிளாவியா பென்னட்டாவுடன் நேற்று முன்தினம் மோதிய வீனஸ் வில்லியம்ஸ் 6-3, 7-5 என்ற நேர் செட்களில் போராடி வென்று அரையிறுதிக்கு முன்னேறினார். இப்போட்டி, ஒரு மணி 38 நிமிடம் நீடித்தது. மற்றொரு காலிறுதியில் டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி 6-1, 6-2 என்ற நேர் செட்களில் ரோமானியாவின் சொரானா சிர்ஸ்டீயை வீழ்த்தினார். அரையிறுதியில் வீனஸ் - வோஸ்னியாக்கி மோதவுள்ளனர்

# காயத்தால் டோனி விலகல் ஹோலிக்கு தலைமைப் பதவி



(மும்பை)

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரில் இருந்து, இந்திய அணி கப்டன் டோனி காயம் காரணமாக விலகியுள்ளார். அவருக்கு பதிலாக, இளம் வீரர் ஹோலி கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். இது குறித்து, கிரிக்கெட் சபைச் செயலர் சஞ்சய் பட்டேல் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை விபரம்: வெலிங்டன் டெஸ்ட் போட்டியின்போது டோனிக்கு இடது விலாப் பகுதியில் காயம் ஏற்பட்டது.

அவர் பத்து நாட்கள் ஓய்வெடுக்க வேண்டியுள்ளதால், பங்களாதேஷில் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் மார்ச் 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஆசிய கோப்பை ஒருநாள் போட்டித் தொடரில் இருந்து விலகியுள்ளார். ஹோலி கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். டோனிக்கு பதிலாக தமிழக விக்கெட் காப்பாளர் தினேஷ் கார்த்திக் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

## குறைத்து மதிப்பிடவேண்டாம்

(லாகூர்)

இந்திய அணியின் சமீபத்திய தோல்விகளை வைத்து ஆசிய கோப்பையில் அந்த அணியை குறைத்து மதிப்பிடுவது ஆபத்து என பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் ஜாகீர் அப்பாஸ் எச்சரித்துள்ளார்.

தென்னாபிரிக்கா மற்றும் நியூசிலாந்து தொடர்களில் இந்திய அணி தோற்றதை வைத்து அந்த அணியை அலட்சியப்படுத்தினால், பாகிஸ்தான் அணிக்கு அது ஆபத்தாகிவிடும். பங்களாதேஷ் மைதானங்களில் நிலைமை வேறாக இருக்கும்.

இது போன்ற ஆடுகளங்களில் இந்தியா எப்போதுமே சிறப்பாக விளையாடும் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். இரு அணிகளும் மோதும் போட்டிகள் எப்போதுமே நெருக்கடி மிகுந்தவையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவே பாகிஸ்தான் வீரர்கள் எச்சரிக்கையாக விளையாட வேண்டும். ஆசிய கோப்பைக்காக நன்கு தயாராகி வருகிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## எதிர்காலம் குறித்து சகீர் முடிவெடுக்கவேண்டும்



இந்திய அணியின் மூத்த வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் தனது எதிர்கால கிரிக்கெட் வாழ்க்கை குறித்து சிந்திக்க வேண்டும் என்று முன்னாள் கப்டன் ராகுல் ராவிட் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா மற்றும் நியூஸிலர்ந்து கிரிக்கெட் தொடர்களில் எதிர் பார்த்த அளவு சகீர்கான் ஜொலிக்கவில்லை. இதைத் தொடர்ந்து, இங்கிலாந்தில் நடைபெறும் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி விளையாடவுள்ளது. இதில், மூத்த வீரரான சகீர்கான் சிறப்பாகச் செயற்படுவது கடினம் என்று தனியார் ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் ராவிட் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இங்கிலாந்து தொடரில் சகீர்கான் சிறப்பாக விளையாட முடியும் என்று உறுதியாகக் கூற முடியாது. மோசமான ஆட்டத் திறனால் ஒருவர் தனது கிரிக்கெட் வாழ்க்கையை முடிப்பதுபோல சகீர்கான் முடிக்கக் கூடாது என்று நான் விரும்புகிறேன். கபில்தேவுக்குப் பின்னர் இந்திய அணிக்குக் கிடைத்த சிறந்த வேகப் பந்து வீச்சாளர் சகீர். அத்தகைய சிறப்புகளைப் பெற்ற அவர், 120-125 கிலோ மீற்றர் வேகத்தில் பந்து வீசினால், அது மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கும். அதனை நான் விரும்பவும் இல்லை. கடந்த இரு வெளிநாட்டுத் தொடர்களிலும் அவர் தடுமாறி வருவதை நாங்கள் கண்டோம். அதனால், தனது எதிர்கால கிரிக்கெட் குறித்து அவர் சிந்திக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உண்மையான வீரர் பெடரர்

### ரென்னிஸ் ஜாம்பவான் சாம்ராஸ்

(லண்டன்)

ரென்னிஸ் விளையாட்டை உண்மையாக நேசிப்பவர் பெடரர். முழுத் திறமையை வெளிக்காட்டி விளையாடினால் அவரால் மேலும் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை ருசிக்க முடியும் என ரென்னிஸ் ஜாம்பவான் அமெரிக்காவின் பீட் சாம்ராஸ் தெரிவித்துள்ளார்..

அதே உற்சாகம் மற்றும் உடல்தகுதியுடன் இருக்கிற வரை மேலும் 2 ஆண்டு முதல் 4 ஆண்டுகள் வரை பெடரரை களத்தில் பார்க்க முடியும். ரென்னிசில் எல்லாச் சாதனைகளையும் அவர் படைத்து விட்டார். ஆனாலும் அவர் இன்னும் ஒவ்வொரு நாடுகளுக்காக பயணித்து விளையாட ஆர்வமாக இருப்பதைப் பார்க்கும் போது, எனக்கு மிகுந்த ஆச்சரியமாக உள்ளது. ஏனெனில் நான் 30 அல்லது 31 வயதை எட்டிய போது தளர்ந்து போய் விட்டேன். ரென்னிஸ் விளையாட்டை உண்மையாக நேசிப்பவர், பெடரர். முழு திறமையை வெளிக்காட்டி விளையாடினால் அவரால் மேலும் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை ருசிக்க முடியும். அவருக்கு பிடித்தமான ஆடுகளமான விம்பிள்டனில் பட்டம் வெல்ல வாய்ப்புள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## காயத்தால் நாடு திரும்பிய டில்சான்



இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில் காயமடைந்த டில்சான், நேற்று நாடு திரும்பியுள்ளார்.

மேலும் ஓர், ஒருநாள்ப் போட்டி மீதமுள்ள நிலையிலும் ஆசியக் கிண்ண போட்டித் தொடர் பங்களாதேஷில் நடைபெறவுள்ள நிலையிலும் அவர் விளையாட முடியாத நிலையில் நாடு திரும்புகின்றார். இவரின் இடத்திற்கு திரிமான்ன அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

இதேவேளை, இன்று நடைபெறவுள்ள மூன்றாவது போட்டியில் குமார் சங்ககாரவிற்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஏற்கனவே ஓய்வு வழங்கப்பட்டிருந்த மஹேல ஜெயவர்த்தன அணியுடன் இணைந்து கொள்ளவுள்ளார். அத்துடன் சத்துரங்க டி சில்வாவும் அணியுடன் இணைந்து கொள்ளவுள்ளார். அண்மையில் இலங்கை ஏ அணி சார்பாக சகலதுறை வீரராக சத்துரங்க டி சில்வா பிரகாசித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# வில்லியர்ஸ் சதம்; மீண்டது தென்னாபிரிக்கா

(பேர்த் எலிசபெத்)

டி.வில்லியர்ஸ், டுமினி ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி நெருக்கடியிலிருந்து மீண்டுள்ளது. அவுஸ்ரேலிய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் தென்னாபிரிக்காவின் பேர்த் எலிசபெத்தில் நடைபெற்று வருகின்றது.




நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய தென்னாபிரிக்க அணி முதலிரு விக்கெட்டுக்களையும் 11 ஓட்டங்களைப் பெற்றவேளை வீழ்த்தப்பட்டது. இந்நிலையில் ஒரு முனையில் நிதானமாக ஆடிய எல்கர், டு பிளிசார் இணை மூன்றாவது விக்கெட்டுக்காக சிறப்பாக ஆடியது. இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டக்காக 112 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து சிறப்பாக ஆடிய எல்கரும் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். இந்நிலையில் தென்னாபிரிக்க அணி மீண்டும் நெருக்கடியை எதிர்கொண்டது. இந்நிலையில் ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த டி வில்லியர்ஸ், டுமினி இணை பொறுப்பாக ஆடி அணியை சரிவிலிருந்து மீட்டது. இதில் சிறப்பாக ஆடிய டி வில்லியர்ஸ் சதமடித்து அசத்தினார். இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் மதிய போசனத்திற்காக நிறுத்தப்பட்டவேளை தென்னாபிரிக்க அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 323 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் டி வில்லியர்ஸ் 102, டுமினி 59 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதிருந்தனர். ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 122 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அத்துடன் டெஸ்ட் அரங்கில் வில்லியர்ஸ் பதிவாக்கிய 19ஆவது சதமாக இது அமைந்தது. மற்றும் எல்கர் 83, டு பிளிசர் 55 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நதன் லயன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

விளையாட்டுச் செய்திகள்

# உள்ளூராட்சி அமைச்சு சம்பியன்





(நல்லூர்)

வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தினால் நடாத்தப்பட்ட மாகாண அமைச்சுக்களுக்டையிலான விளையாட் டுப் போட்டியில் உள்ளூராட்சி அணி வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

வடமாகாண விளையாட்டுத்துறைத் திணைக்களத்தினால் மாகாண அமைச் சுக்களுக்கு இடையில் 2013ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி களின் இறுதிப் போட்டிகளும் பரிசில் வழங்கலும் கடந்த 19ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு நல்லூர் ஸ்தான வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இறுதி நாள் போட்டி நிகழ்வில் ஆண் களுக்கான கரப்பந்து, பெண்களுக்கான வலைப்பந்து, ஆண் பெண்களுக்கான கயிறிழுத்தல் என்பன நடைபெற்றது.

ஆண்களுக்கான கரப்பந்துப் போட்டி யில் கல்வி அமைச்சு அணி உள்ளூராட்சி அமைச்சு அணியை எதிர்கொண்டது. இதில் 2:1 என்ற செட் கணக்கில் கல்வி அமைச்சு அணி வெற்றி பெற்றது.

பெண்களுக்கான வலைப்பந்து போட்டியில் பிரதம செயலாளர் கொத் தணி அணியை எதிர்த்து உட்கட்டமைப்பு அமைச்சு அணி மோதியது. இதில் பிர தம செயலாளர் கொத்தணி அணி வெற்றி பெற்று சம்பியனாகியது. ஆண் களுக்கான கயிறிழுத்தல் போட்டியில் உள்ளூராட்சி அமைச்சு அணியை எதிர்த்து உட்கட்டமைப்புஅமைச்சு அணி மோதியது. இதில் உள்ளூராட்சி அமைச்சு அணி 2:1 என்ற அடிப்படையில் வென்றது.

பெண்களுக்கான கயிறுழுத்தல் உள் ளூராட்சி அமைச்சு அணியை எதிர்த்து உட்கட்டமைப்பு அமைச்சு அணி மோதியது. இதில் 2: 1 என்ற புள்ளிகள் அடிப்படையில் உட்கட்டமைப்பு அமைச்சு அணி வென்றது.

ஒட்டுமொத்த புள்ளிகளின் அடிப் படையில் உள்ளூராட்சி அமைச்சு அணி முதலாம் இடத்தைப் பெற்றது.

இப்போட்டி நிகழ்விற்கு வடக்கு மாகாண கல்வி விளையாட்டு அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண சபை உறுப்பினரும் வடக்கு மாகாண விளை யாட்டுத் துறை அமைச்சின் இணைப் பாளருமான இ.ஆர்னேல்ட், அமைச்சுக் களின் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (48)

## இன்றைய ஆட்டங்கள்

(நல்லூர்)

நல்லூர் பிரதேச இளைஞர் சேவை மன்றத்தினால் நடாத்தப்பட்டு வரும் இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற வுள்ளது.

இப்போட்டி நிகழ்வில் பங்குகொள்ள வுள்ள வீர,வீராங்கனைகளை உரிய நேரத்திற்கு வருகை தந்து நேர விர யத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (93)

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பிரதேச செயலக விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக தற்போது பெருவிளையாட்டுப் போட்டி கள் நடைபெற்று வருகின்றன. இந் நிலையில் ஆண்களுக்கான கால்பந் தாட்டப் போட்டி இன்றும் நாளையும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. முதல் சுற்று ஆட்டங்கள் இன்று நடை பெறவுள்ள அதேவேளை, அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் நாளை நடைபெறவுள்ளதாக போட்டி அமைப் பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## இன்று சைக்கிள் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அதிபர் வெற்றிக் கிண்ண சைக்கிள் ஓட்டப் போட்டி இன்று காலை 8.00 மணிக்கு நடைபெற வுள்ளது.

யாழ். மாவட்ட செயலக ஊழியர் நன்புரி சங்கத் தினால் பிரதேச செயலக பணியாளர்களுக்கிடையில் நடாத்தப்பட்டு வரும் அரச அதிபர் வெற்றிக் கிண்ண பெரு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வரு கின்றன.

இதில் ஆண், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம் இன்றைய தினம் 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம் மாவட்டச் செயலக நுழைவாயிலிருந்து ஆரம்பித்து, கச்சேரி நல்லூர் வீதி வழியாகச்சென்று, சங்கிலியன் பூங்காவின் இடது பக்கம் திரும்பி, செம்மணி வீதி வழியாக, யாழ். வரவேற்பு சந்தியை அடைந்து பின் ஏ-9 வீதி வழியாக மீண்டும் மாவட்ட செயலகத்தில் நிறைவடையும்.

ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம் மாவட்ட செயலக நுழைவாயிலிலிருந்து ஆரம்பித்து, கச்சேரி நல்லூர் வீதி வழியாகச் சென்று முத்திரைச் சந்தி, பருத்தித்துறை வீதி வழியாக கோப்பாய் சந்தியினை அடைந்து, அங் கிருந்து கைதடி மானிப்பாய் வீதியினால் திரும்பி, கைத டிச் சந்தினை அடைந்து ஏ-9 வீதி வழியாக மீண்டும் மாவட்ட செயலகத்தில் நிறைவடையும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)

## கிண்ணம் வென்றது சென். நியூஸ்ரார்



(அராலி)

சங்கானை இளைஞர் சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட இளைஞர் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை துணைவி சென். நியூஸ்ரார் இளைஞர் அணி கைப்பற்றிக் கொண்டது.

சங்கானை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் அனுசரணையுடன் அராலி வடக்கு சில்வெஸ்ரார் இளைஞர் கழகம் சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட இளைஞர் கழக அணிகளுக்கிடையே நடாத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த 15ஆம் திகதி அராலி வடக்கு சில்வெஸ்ரார் இளைஞர் கழக மைதானத்தில் நடைபெற்றது.

அணிக்கு 7 பேர் கொண்ட இப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் அராலி ஞானவைரவர் இளைஞர் கழக அணியும் துணைவி சென் நியூஸ்ரார் இளைஞர் கழக அணியும் மோதின.

இரு அணிகளும் மாறி மாறி எதிரணிகளின் பகுதிகளை ஆக்கிரமித்த போதும் கோல் பெறமுடியவில்லை.

முதல் பாதி நிறைவடைய சில நிமிடங்கள் இருக்கையில் அராலி ஞான வைரவர் அணி கோலொன்றினைப் போட்டது.

பதிலுக்கு இரண்டாவது அரைப்பாதி யில் கோல் பெற துணைவி சென் நியூஸ்ரார் அணி எடுத்த முயற்சிகள் வீண்போகாமல் விட அவ் அணியும் கோலொன்றினைப் போட்டது.

இதன் படி போட்டி ஆட்ட நேர நிறைவில் இரு அணிகளும் 1:1 என்னும் கோல் அடிப்படையில் சமநிலையிலிருந்தது. பின் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் சென் நியூஸ்ரார் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

போட்டித்தொடரின் சிறந்த கழகமாக பாரதி இளைஞர் கழக அணியும், சிறந்த வீரனாக பாஸ்கரன் (சென். நியூஸ்ரார் இளைஞர் கழக அணி), சிறந்த கோல் காப்பாளராக கே.கலக்ஷன் (சென். ஸ்ரார் இளைஞர் கழக அீணி) அதிக கோல்களைப் போட்டவராக இ.லுகிர்தன் (சென். ஸ்ரார் இளைஞர் கழக அணி) தொடரின் சிறப்பாட்டக் காரனாக கஜரூபன் (சென். நியூஸ்ரார் இளைஞர் கழக அணி) நன்நடத்தையுள்ள வீர னாக வீ.சிந்துஜன் (பாரதி இளைஞர் கழக அணி) வழங்கப்பட்டது.

போட்டிகளில் வெற்றிக்கிண்ணங் களை வடமாகாண சபை உறுப்பினரும், வடமாகாண விளையாட்டு அமைச்சின் இணைப்பாளருமான இ.ஆர்னேல்ட் வழங்கி கௌரவித்தார். (48,93)

## கபடி, கயிறுழுத்தல்

(சுன்னாகம்)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வலி. தெற்குப் பிரதேச சம்மேளனம் நடாத்தும் பெரு விளையாட்டுப் போட்டி கள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் கபடி மற்றும் கயிறுழுத்தல் போட்டிகள் இன்றைய தினம் சுன்னாகம் ஐயனார் கோவில் வீதி யில் அமைந்துள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து இளைஞர் கழக அணி-களையும் உரிய நேரத்திற்கு வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். இன்று மாலை வரை போட்டிகள் நடைபெற ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (120)

## 2ஆவது சுற்றில் யாழ். சென்றல்

(யாழ்ப்பாணம்)

வீ.டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு யாழ். சென்றல் அணி தகுதி பெற்றுள்ளது.

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகத்தினால் ஒன்பதாவது ஆண்டாக நடாத் தப்பட்டு வரும் வீ.டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ண கிரிக்கெட் தொடரின் ஆட்டமொன்று கடந்த 16ஆம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். சென்றல் அணியும், பற்றீசியன்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். சென்றல் அணி 40.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கலிஸ்ரன் 67, கபில்தேவ் 36, சுதர்ஷன் 31, றஜீவ்குமார் 26, சலீஸ்ரன் ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஜித், மிலாண்டோ ஆகியோர் தலா மூன்று, கிளின்ரன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 220 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பற்றீசியன் அணி 34 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ரியூடர் 45, அஜித் 26, யக்பைன் 18, நவதீபன் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் றஜீவ்குமார் நான்கு, சுபாதீஸ், றொகான் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இவ்வெற்றியின் மூலம் யாழ். சென்றல் அணி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறி யுள்ளது. (எஸ்.பி., 48)


# ஜெனிவா: இந்தியா காத்திருக்கிறது சீனாவோ உறுதியாக நிற்கிறது

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் உள்ள இரண்டு முக்கிய உறுப்பினர்களாகவும் அதேவேளை இலங்கையின் மிகப் பெரிய முதலீட்டாளர்களாகவும் உள்ள இந்தியா மற்றும் சீனா என்பன கடந்த வாரம் மனித உரிமைகள் விவகாரம் பற்றிய தங்கள் குரல்களையும் ஒருவருக்கொருவர் சளைக்காமல் எழுப்பியிருந்தார்கள்.

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் வெளியார்கள் தலையிடுவதை தான் எதிர்ப்பதாக சீனா உறுதிபடத் தெரிவித்திருந்தது, இலங்கை மீதான ஒரு சர்வதேச விசாரணையை அது எதிர்க்கக்கூடும் என்பதற்கு ஒரு அடையாள-மாக இருக்கலாம், அதே வேளை இந்திய அரசாங்கம் அதுபற்றி மேலும் கருத்துத் தெரிவிப்பதற்கு முன்னர், உத்தேச தீர்மானத்தின் இறுதி எழுத்து வடிவத்தை தான் முதலில் பார்க்க வேண்டும் எனக் கூறியுள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித், “இந்த விடயத்தில் மக்களிடமோ அல்லது நாடுகளிடமோ விரோதப் போக்கைத் தவிர்த்து, சாதகமான வழிகளைப் பார்க்கும்படி அவர்களை (இலங்கை அரசாங்கம்) நான் வலியுறுத்துகிறேன்” என்று கடந்த வாரம் இலங்கையிலிருந்து வந்திருந்த ஊடகவியலாளர்களுடன் நடத்திய சந்திப்பில் தெரிவித்திருந்தார். இலங்கை அப்படியான ஒரு வேண்டுகோளை விடுக்கும் பட்சத்தில் இந்தியா அதனுடன் இணைந்து பணியாற்றத் தயாராக உள்ளது, மற்றும் இப்போது விடயங்கள் எந்த நிலையில் உள்ளன என்பதை பற்றி அமைச்சர் பீரிசிடம் இருந்து வரவிருக்கும் பதிலுக்காக காத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்திய வெளியுறவுச் செயலர் சுஜாதா சிங் கூறுகையில் ஜெனிவாவில் உள்ள அனைத்துக் கட்சிகளுடனும் இந்தியா தொடர்பிலுள்ளது, மற்றும் அந்தப் பிரச்சினையின் பல்வேறு அம்சங்களையும் ஆராய்ந்து வருகிறது என்றார்.






“எங்கள் கண்காணிப்புக் கருவியின் கீழுள்ள ஒரு விடயம் அது. அது எப்படிச் செல்கிறது என்பதை நாங்கள் அவதானிப்போம்” என்று சொன்ன அவர் இந்திய அரசாங்கம் அதன் நிலையை முடிவு செய்வதற்கு முன்னர் உத்தேச தீர்மானத்தின் இறுதி எழுத்து வடிவத்தைப் பார்க்க வேண்டியுள்ளது என்பதையும் சேர்த்துச் சொன்னார். வெளியுறவுச் செயலர் மேலும் வலியுறுத்தியது, இலங்கை பற்றி இந்தியாவுக்குச் சொந்தமாக சில கருத்துக்கள் உள்ளன, தமிழர்கள் பிரச்சினை உட்பட அந்தக் கருத்துக்களை இலங்கையிடம் தெரிவிப்போம் என்று.

“அந்தத் தீர்மானத்தின் வார்த்தை வடிவம் வெளியானதும் நாங்கள் அதைப்பற்றி தீர்மானிப்போம். அதைப்பற்றி தற்சமயம் இந்தியாவின் நிலைப்பாடு எதுவுமில்லை” என்று அவர் தெரிவித்தார்.

ஆயினும் அப்படிச் சொல்லியிருந்தாலும், வரும் மே மாதம் இந்தியா பொதுத் தேர்தலுக்கு தயாராகிறது மற்றும் எதிர்க் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சி ஆளும் காங்கிரசை விட முன்னிலை பெறுவதற்கான சமிக்ஞைகளை வெளிப்படுத்துகிறது. இதனால் ஆளும் காங்கிரஸ் தமிழ் நாட்டிலுள்ள முக்கிய தமிழ் கட்சிகளின் ஆதரவை தேட நினைக்கிறது. அந்த ஆதரவை தமிழ் நாடு வழங்க வேண்டுமாயின் இலங்கை மீதான அமெரிக்காவின் தீர்மானத்துக்கு இந்தியா பின்துணை வழங்க வேண்டும்.

இதற்கிடையில், ஜெனிவாவில் கொண்டுவரப்படும் தீர்மானத்துக்கு சபையில் உள்ள 47 நாடுகளின் அங்கத்தவர்களில் பெரும்பாலானவர்களின் ஆதரவு கிடைப்பது உறுதி என்று பிரித்தானியா கூறுகிறது.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 25ஆவது அமர்வில் ஒரு எழுத்து மூலமான அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ள சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு சபை நிச்சயம் உதவி செய்யும் என்று தெரிவித்தது. அடுத்த மாதம் ஜெனிவாவில் நடக்கவுள்ள அமர்வுக்கு முன்னரே பகிரங்கப்படுத்தப்பட்ட அந்த அறிக்கையில், 2009ஆம் ஆண்டு முடிவடைந்த அரசாங்கப் படைகள் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ ஆகியோருக்கு இடையேயான ஆயுத மோதலின் போது, நடத்தப்பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித நேயத்துக்கான குற்றங்கள் பற்றிய ஒரு நம்பிக்கையான சர்வதேச விசாரணையை இலங்கை அரசாங்கம் தனது முயற்சிகள் மற்றும் வளங்களை பயன்படுத்தி தடை செய்வதிலேயே குறியாக உள்ளதால், மனித உரிமை மீறல்களால் பாதிப்படைந்த ஆயிரக்கணக்கானவர்களுக்கும் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கும் நீதி, உண்மை மற்றும் இழப்பீடு என்பன மறுக்கப்பட்டுள்ளன, என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயுத மோதலின்போது இலங்கை அரசாங்கப் படைகள் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ என்பன சர்வதேச விதிகளை மீறியுள்ளதுக்கான நம்பிக்கையான குற்றச்சாட்டுகள் நீண்ட காலமாகவே உள்ளன, என்று சர்வதேச மன்னிப்புச்சபையின் அறிக்கையில் மேலும் சொல்லப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளது, இலங்கை அரசாங்கப் படைகள் புரிந்த கட்டாயமாக காணாமற் போக்கடித்தல், நீதிக்குப் புறம்பான கொலைகள், பாதுகாப்புக்கு உரிய இடங்களான, மருத்துவ மனை போன்ற இடங்களில் தங்கியிருந்த பொதுமக்கள்மீது வேண்டுமென்றே குண்டுத் தாக்குதல் நடாத்தியது, போரில் சிக்குண்டிருந்த மக்களுக்கு உணவு மருந்து என்பனவற்றை கிடைக்காமல் தடை செய்தது போன்றவற்றுக்கான கணிசமான ஆதாரங்கள் உள்ளன என்று. பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியது, யுத்த வலயத்தை விட்டுத் தப்பியோட முயற்சித்தவர்களைக் கொலை செய்தது, மற்றும் சிறுவர் போராளிகளை ஆட்சேர்ப்புச் செய்தது, போன்ற குற்றங்களைச் செய்ததாக எல்.ரீ.ரீ.ஈ மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.


சர்வதேச மன்னிப்புச்சபை, இலங்கை அரசாங்கப் படைகள், அதேபோல எல்.ரீ.ரீ.ஈ ஆகியோர் சர்வதேச சட்டங்களின் கீழ் புரிந்துள்ளதாகக் கூறப்படும் குற்றங்களுக்காக ஒரு சுயாதீனமான சர்வதேச விசாரணையை உறுதிப்படுத்தும்படி ஐ.நா. மனித உரிமைப் பேரவையை வலியுறுத்தி உள்ளது. மனித உரிமைக் குழுக்கள் மேலும் தெரிவிப்பது, அந்த விசாரணையில் போதுமானளவு ஏற்றுக் கொள்ளத்தக்க சாட்சியங்கள் இருக்குமாயின், சர்வதேச சமூகம் அத்தகைய குற்றம் புரிந்ததாக சந்தேகிக்கப் படுபவர்கள் மீது உண்மையான நடவடிக்கை எடுத்து சர்வதேச தரங்களுக்கு முழுவதுமாக ஏற்ப நியாயமான விசாரணை நடாத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும் எனக் கேட்டுள்ளன.

எனினும் இலங்கைமீது ஒரு சர்வதேச விசாரணை நடாத்துவதற்கு இடமே இல்லை என்று இலங்கை அரசாங்கம் வெகு தெளிவாகத் தெரிவித்துள்ளது. இந்தச் செய்தி அடுத்தமாத அமர்வின்போது உயர்மட்ட பிரிவினருடன் பேசுவதற்கு அட்டவணைப்படுத்தப் பட்டுள்ள அமைச்சர் பீரிசினால் அநேகமாக வலியுறுத்தப்படும். எனினும் இலங்கை கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் முயற்சிகளைப் பூர்த்தி செய்ய இன்னும் கால அவகாசம் கோரும் விதமாக ஒரு ஒருமித்த நீர்த்துப்போன தீர்மானத்தை எட்டுவதற்கும் முயற்சி செய்யலாம் என்பதற்கான அடையாளங்களும் உள்ளன.

– ஈஸ்வரன் ரட்ணம் கட்டுரையிலிருந்து.

# குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டும்?


- குழந்தைகளின் வார்த்தைகளுக்குச் செவிசாய்ப்பதோடு அவர்களது உணர்வுக்கும் மதிப்புக் கொடுக்க வேண்டும்.
- சிரித்தால் அவர்களுடன் சேர்ந்து சிரிக்க வேண்டும். அழுதால் ஏன் அழுகிறாய்? என்று காரணம் கேட்க வேண்டும். மாறாக குழந்தைகளைத் திட்டுவதோ, அடிப்பதோ கூடாது.
- குழந்தைகளிடம் அன்பு காட்டுவதால் அவர்களைச் சிறந்தவர்களாக உருவாக்க முடியும். அதைத் தவிர்த்து அவர்களை உதாசீனப்படுத்தினாலோ, மனதைக் காயப்படுத்தினாலோ அவர்களுக்குத் தாழ்வு மனப்பான்மை உருவாகக் காரணம் ஆகிவிடும்.
- குழந்தைகளைப் பகட்டாகவோ, ஆடம்பரமாகவோ வாழவிடாவிட்டாலும் பரவாயில்லை. அவர்களின் சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்ற வேண்டும்.
- நாம் குழந்தையாக இருந்தபோது நமக்குக் கிடைக்காத சந்தோஷம் நமது குழந்தைகளுக்குக் கிடைக்கும் போது அதை நாம் பகிர்ந்து கொண்டு ஆனந்தப்பட வேண்டும்.
- குழந்தைகள் தங்களைப் பாராட்டுவதைத்தான் பெரிதும் விரும்புவார்கள். அடுத்தவர் முன் தலைகுனிவதை குழந்தைகள் விரும்புவதில்லை. அதேநேரம் அவர்களிடம் பிழைகள், தவறுகள் இருந்தால் அன்பாக எடுத்துக் கூறி அவற்றைத் திருத்த பெற்றோர் முயற்சிக்க வேண்டும்.
- குழந்தைகளுக்குத் தோல்விகளையும் சந்திக்கப் பழக்க வேண்டும். கேட்டதை எல்லாம் வாங்கிக் கொடுப்பதோ, சொல்வதையெல்லாம் செய்து கொடுப்பதோ மிகவும் தவறானது. அத்தகைய சூழ்நிலையில் வளரும் குழந்தைகள் சின்னச் சின்ன தோல்விகளையும், தாங்க முடியாமல் முடங்கிப் போவார்கள்.
- மற்ற குழந்தைகள் போல் நமது குழந்தைகளும் படிப்பில் முன்னேறவில்லை என்று அடிப்பதாலோ, திட்டுவதாலோ, பயன் கிடைத்துவிடாது. அதனால் குழந்தைகளுக்கு மன உளைச்சல், பயம், விரக்தி, எரிச்சல்தான் வரும் என்பதைப் புரிந்து கொண்டு பெற்றோர்கள் சாதுரியமாக நடந்து கொள்ளவேண்டும்.
- உங்கள் குழந்தையை அதன் போக்கில் வளரவிடுவது அவர்களது தன்னம்பிக்கையை அதிகரிக்கச் செய்யும். அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே என்று அவர்களைக் கட்டுப்படுத்தினால் அச்செயலைச் செய்வதில் எல்லாரையும் விட குழந்தைகள் ஆர்வமாக இருப்பார்கள் என்று மனநலமருத்துவர்கள் கூறுகிறார்கள்.



- ஹரிஹரன் -

# மணிரத்னம் - ஓர் உரையாடல்

— அராத்து —




மணிரத்னத்துடன் ஓர் உரையாடல் என்ற புத்தகத்தில், ரஹ்மானின் முன்னுரையே இனிய அதிர்ச்சி. கொஞ்சம் ரஹ்மானை புரிந்துகொள்ள வாய்ப்பாகத்தான் இந்த முன்னுரை அமைந்திருக்கிறது. அடுத்து இந்தப் புத்தகத்திற்காக தொடர்ந்து மணிரத்னத்தை சந்தித்து உரையாடிய பரத்வாஜ ரங்கனின் குறிப்புகள்.

மணிரத்னத்தின் குடும்பமே சினிமா குடும்பமாக இருந்தாலும் இவரை யாரும் சினிமாவுக்கு வரவழைக்க முயலவில்லை. உதவி இயக்குநராக யாரிடமும் பணி புரியாமல் நேரடியாக இயக்குநராகி, அதிலும் மொழி தெரியாத கன்னடப் படத்திற்கு முதல் நாள் ஷூட்டிங்கில் அவர் நின்ற விதத்தை சொல்லுகையில் நமக்கு பட பட வென்று இருக்கிறது.

கமலுக்கு, இவன்கிட்ட என்னமோ இருக்குடா என தெரிந்துள்ளது. முக்தா சீனிவாசனுக்கு பெரிதாக ஆர்வமில்லாவிட்டாலும் வலியனாக இவரை தன் படத்திற்கு இயக்குநராக்க கமல் மெனக்கெட்டிருப்பது புரிகிறது. கமலைப்பற்றி மற்ற இயக்குநர்கள் பேட்டியில் ஆஹா ஓஹோ என சொல்வதை படித்து எரிச்சலான நமக்கு மணி சொல்வது இயல்பாகவும் ரத்தினச் சுருக்கமாகவும் இருக்கிறது. கமலுடைய மெனக்கெடலை இந்த அளவுக்கு யாரும் சொன்னதில்லை.

மிக முக்கியமான விஷயம் இளையராஜாவைப் பற்றியும் ரஹ்மானைப் பற்றியும் பேசும் இடங்கள். புதிதாக இயக்குநராகப்போகும் அனைவருக்கும் உதவும் பகுதிகள். இதுவரை இளையராஜாவின் வேலை முறைமையைப்பற்றி டெக்னிக்கலாக உணர்ச்சி வசப்படாமல் யாரும் சொன்னதில்லை. 5 நிமிஷத்துல ட்யூன் போட்டுட்டாரு, 10 நிமிஷத்துல ரீ ரெக்கார்டிங் நோட்ஸ் எழுதிட்டாரு என உளறுவார்கள்.

மணி, பக்காவாக சொல்கிறார். படத்தை ஒருமுறை பார்ப்பார். திரும்ப ரீல்கள் ஓடும், அப்போதே குறிப்புகள் எழுத ஆரம்பித்து விடுவார், உதவியாளர்கள் பிரதி எடுக்க ஆரம்பித்து விடுவார்கள். ரீல் ஓடி முடிந்ததும் இசைக்க ஆரம்பித்து விடுவார்கள் என்கிறார். ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால் ரீல் ஓடும்போதே சொல்லி விட வேண்டும், எது சொன்னாலும் டக்கென புரிந்து கொண்டு விடும் மேதை என்கிறார். அப்புறம் சொல்லலாம் என மென்று விழுங்கிக்கொண்டு இருந்தால் எல்லாம் முடிந்து அடுத்த படத்துக்கு நோட்ஸ் எழுதிக்கொண்டிருப்பார் என்கிறார்.

இங்கேதான் மற்ற இயக்குநர்கள் தோற்கிறார்கள், வாய் பொத்தி அமர்ந்திருப்பார்கள் போல. பலவாறாக யோசித்து வாய் திறக்கையில் ராம நாயுடு படத்துக்கு பாதி மியூசிக் போயட்டு இருக்கு என்பார் போலிருக்கிறது இளையராஜா. ரஹ்மானின் வேலை முறைமை வேறு மாதிரி. நண்பனைப்போல பொறுமையாக பேசிப் பேசி வேலை செய்யலாம் என்கிறார்.

கிடைக்கும் புத்தகத்தை வைத்து, படித்து சினிமா கற்றிருக்கிறார் மணி என்பது தெரிய வருகிறது. ஒரு படம் வெற்றி பெற்றவுடன் அதே ஃபோர்முலாவை கட்டிக்கொண்டு அழாமல் அதைத் தாண்ட முயற்சித்திருக்கிறார். அந்த முயற்சியில் சறுக்கல்கள் வந்தாலும் தளராமல் வேறு வேறு கதைசொல்லல் முறைகளை தொடர்ந்து முயன்று பார்த்திருக்கிறார்.

ஒரு உரையாடலாகப் படித்துமே என்னையறியாமல் நானும் கொஞ்சம் சினிமா கற்றுக் கொண்டேன் என்பதுதான் இந்தப் புத்தகத்தின் பலம்.

பல ஆச்சரியமூட்டும் விஷயங்கள் வெளிப்படுகின்றன. மௌனராகத்தில் பெரும் வரவேற்பைப்பெற்ற கார்த்திக் கேரக்டர் ஆரம்பத்தில் இல்லையாம்.

பகல் நிலவு படத்தில் அனைவரும் மேக்கப் இல்லாமல் நடிக்க ஒத்துக்கொண்டது.

நாயகன் மற்றும் அக்னி நட்சத்திரம் இரண்டும் சமநேரத்தில் ஷூட்டிங் நடந்து, பின் அக்னி நட்சத்திரத்தை நிறுத்தியது.

கமலிடம் இவர் ஒரு கதையை சொல்லப்போனால், அவர் ஐந்து கதைகளை சொல்லுவாராம்.

திரைப்படப் பள்ளியில் படித்திருக்கலாம் என மணி இப்போது நினைப்பது.

பாலு மகேந்திரா, தரணி, பி.சி.ஸ்ரீராம் என சரியான டெக்னிக்கல் டீமை சர்வ சாதாரணமாக சேர்த்தது.

தனது முதல் படமான பல்லவி அனுபல்லவி படத்திற்கு முதலில் ஒரு இசையமைப்பாளரை அமர்த்தி பின் அவரைத் தவிர்த்து, இளையராஜாவிடம் பேசி அப்போது அவர் வாங்கிய சம்பளத்தில் ஐந்தில் ஒரு பகுதியைத்தான் தர முடியும் என கூற, அவர் சம்மதித்தது.

தயாரிப்பாளர்கள் மணியையும் நாளைக்கு வா, நாளைக்கு வா என துரத்தியது, இயக்குநர் மகேந்திரன் பியர் குடித்துக்கொண்டே இவரை உதாசீனப்படுத்தியது.

இவர் சம்பந்தமில்லாமல் மலையாளப்படம் இயக்கப்போனது.

அர்ஜுனின் வித்தியாசமான நடிப்பை கடலில் வெளிக்கொணர்ந்த முறை.

... ...இப்படி சுவாரசியங்கள் புத்தகம் முழுக்க பரவிக்கிடக்கின்றன.

புத்தகத்தில் என்ன குறை என்றால் மணிரத்னமே ஆங்காங்கே குறிப்பிடுவதைப்போல பல கேள்வி களை அறிவுஜீவித்தனமாக கேட்கிறார் பரத்வாஜ் ரங்கன். நல்ல காலமாக மணிரத்னம் தெளிவாக இருக்கிறார், இந்த அறிவுஜீவித்தனமெல்லாம் ஒண்ணுமில்லை என இடக்கையால் ஒதுக்கியபடி வெகுசாதாரணமாக பதிலளிக்கிறார், ஆறுதலாக இருக்கிறது. கடல் பற்றிப் பேசும்போது, நீங்கள் படைப்பாளியை உங்கள் விருப்பத்திற்கேற்றாற் போல வகைப்படுத்துகிறீர்கள் என்கிறார்.

உங்களுடைய பெரும்பாலான படங்கள் ஏதேனும் புராணத்தையோ, உண்மைச்சம்பவத்தையோ அல்லது வரலாறையோ கதைக்களனாக வைத்தே வந்துள்ளதே? ஏன் உங்களுக்கு கதை யோசிப்பதில் கற்பனை வறட்சியா என்ற கேள்வியைக் கேட்காமல் விட்டு விட்டார் என எனக்குத் தோன்றியது.

கடைசியாக கடல் படத்தைப் பற்றி விலாவாரி யாக இருவரும் பேசிக்கொள்கிறார்கள். எங்கே இடறினார் என மணிரத்னத்துக்கே தெளிவாகத் தெரியவில்லை என்று எனக்குத் தெரிய வந்தது கவலை அளிப்பதாக இருந்தது.

# காணாமற் போயிருப்பவர்களின் பெயரால் காய்நகர்த்தல்

மூதற்தடவையாக குடாநாட்டில் ஜனாதிபதி நியமித்திருக்கும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு முன் காணாமற் போனோரின் உறவினர்கள் சாட்சியமளித்திருக்கிறார்கள்.

போர்ச் சூழலில் காணாமற்போன தமது உறவு களை மீட்டுத்தரக் கோரி நாட்டுக்கு உள்ளேயும் வெளியே யும் தமிழ்த் தரப்பின் பல்வேறு சக்திகளால் தத்தமது அரசியல் நலன் நோக்கிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பல முயற்சிகளுக்குப் பிறகு இந்த சாட்சியமளிப்பு இப்போது நடைபெற்றிருக்கிறது.

இந்த காணாமற்போதல் விவகாரம் சூடுபிடித்ததற்குப் பிறகு தேர்தல் காலங்களை யொட்டி தமிழ்த் தலைமைகள் மேற்கொண்ட சந்திப்புகளில் பாதிக்கப்பட்டவர்களால் வெளிப்படுத்திய உணர்ச்சி கொந்தளிப்புகள் எதிர்பார்த்த தேர்தல் நோக்கங்களுக்கு அது உதவியிருந்த போதும் தமது உறவு-களை பறிகொடுத்தவர்களுக்கு உரிய பரிகாரத்தைத் தேடிக் கொடுப்பதென்பது ஒரு எட்டாக்கனியாகவே அது எப்போதும் இருந்து வந்திருக்கிறது.

இப்போது இந்த விசாரணைகள் நடைபெறும் காலம், சூழல், நிலைமை-களை நோக்கும் போது இந்த விசாரணைகளுக்கான அரசியல் நிர்ப்பந்தம், தேவை என்பதற்கப்பால் இந்த விசாரணைகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த அளவுக்கு எதிர்பார்க்கின்ற பலனைக் கொடுக்கும் என்பதையும் இவ்விடத்தில் கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

நான்கு நாட்கள் இடம்பெற்ற இந்த விசாரணைகளின் ஊடே ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் அரசுக்கு அழுத்தத்தைக் கொடுக்கும் வகை யில் ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கைக்கெதிராக தான் முன்மொழியவிருக்கும்



தீர்மானங்களையும் ஏககாலத்தில் வெளியிட்டிருக்கிறார்.

இந்த நிலையில் இந்த ஆணைக்குழு மேற்கொள்ளும் விசாரணை முயற்சிகளின் அடுத்த கட்டம் என்னவாக இருக்கும் என்பதையும் இப்போதே அறிந்துகொள்ள வேண்டும் என்கிற ஆவலும் நம் எல்லோர் மனதிலும் மேலெழுந்து நிற்கிறது.

உண்மையில் இந்த விசாரணைகளுக்கான சந்தர்ப்பம் என்பது நமது தமிழ்ச் சூழலில், எமது மக்கள் மனங்களில் நம்பிக்கை தரும் நடவடிக்கையாக அமைய வேண்டும் என்பதுடன் அந்த நம்பிக்கையை தருவதற்கான வழிமுறையில் இந்த விசாரணைகள் இடம்பெறுகின்றனவா என்பதையும் கேட்டுக்கொள்ள வேண்டியிருகிறது.

ஏனெனில் இந்த விசாரணைக்கான முறைப்பாடுகளை தேர்ந்துகொள்ளும் விதம், தமிழ் தலைமைகளால் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள், அந்த முன்னெடுப்புகள் அரசுக்கு ஏற்படுத்தியிருக்கும் பதிவுகள் எத்தகையவை என்பதை நோக்கும் போது இந்த விசாரணைகள் தமது உறவுகளை தொலைத்து விட்டவர்களுக்கு எத்தகைய பலனை கொடுக்கும் என்பதையும் இவ்விடத்தில் கேட்டுக்கொள்ள வேண்டி இருக்கிறது.

சாராம்சத்தில் நமது போராட்டம் தீவிரம் பெற்ற சூழலில் இருந்து காணாமற் போனவர்கள் பற்றிய பிரச்சினைகளும் அதனூடான சர்ச்சை களும் அப்போதிருந்தே ஒரு உணர்ச்சி பூர்வமான விவகாரமாக எம் அனைத்து மக்கள் மனங்களையும் நெருடும் ஒரு துன்பியல் நிகழ்வாகவே அது தொடர்ந்து பதிவாகியிருக்கிறது.

அதுவே உண்மையான நிலமையாகவும், போக்காகவும் இருக்கும் போது இந்த காணாமற் போனவர்களுக்காக எமது தமிழ் தலைமைகள் நியாயமான சாத்தியமான தீர்வை, நிவாரணத்தை தேடிக்கண்டு கொள்வதற்குப்பதில் அதனை தமது தேர்தல் நோக்கங்களுக்காக பயன்படுத்திக்கொள்வதிலேயே எப்போதும் குறியாக இருந்திருக்கிறார்கள்.

இந்தச் செயன்முறையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இலங்கை அரசை அம்பலப்படுத்துவதன் மூலம் தமது தேர்தல் வெற்றிகளை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுதான் அக்கறைக்குரியதாக இருந்ததே தவிர, காணாமற் போன வர்களை தேடிப்பிடித்துக் கொடுக்கும் முயற்சியென்பது குறைந்த பட்சமாகவேனும் முன்னெடுக்கப்படவில்லை என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும்.

அதாவது, தங்களது பிரச்சினை களைத் தீர்ப்பதற்காக வென்று தமிழ் மக்கள் தேர்வு செய்து விட்டிருக்கும் தலைவர்களாகப்பட்டவர்கள், தமிழ் மக்களது எந்தவொரு பிரச்சினையும் தீர்வதற்குத் தாங்கள் பொறுப்பில்லை என்றே நடந்துவருகிறார்கள். மக்கள் ஆதரவு மூலம் தாங்கள் பெற்றுக்கொண்ட பதிவுகளை, மக்களது பிரச்சினை எதுவும் தீர்வதற்காக இவர்கள் முழுமையாகப் பயன்படுத்தியதில்லை.

ஆக மொத்தத்தில் காணாமற் போனவர்களுக்காக ஜெனிவா கூட்டத் தொடரில் ஏற்றுக்கொள்ளக் கூடிய விளக்கமொன்றை முன்வைப்பதற்கு வசதியாக இப்போதைய சந்திப்பை எவ்வாறு கையாளலாம் என அரசுத்தரப்பு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.


- சாலையூரான் -

மறுபக்கத்தில், இந்த விவகாரத்தை மார்ச் ஜெனிவா கூட்டத் தொடரில் தமது அரசியல் ஆதாயங்களுக்காக எவ்வாறு கையாளலாமென நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் இருக்கும் தமிழ்த் தலைமைகள் மூளையை பிய்த்துக்கொண்டிருக்கின்றன.

இந்த காய்நகர்த்தலில் காணா-மற் போயிருப்பவர்களில் எவராவது எங்கேனும் இருந்தால் அவர்கள் வெளியே வருவதை சம்பந்தப்பட்ட இரு தரப்புக்களில் யாராவது உறுதிப்படுத்துவார்களாயின் அது பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிகப் பெரிய நன்மையான விடயமாக இருக்கும்.

**மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு**

# இறந்த ஊழியர்களுக்கு வங்கிகள் கொடுக்கும் பரிசு இதுதானா?



தற்போது நகை அடகு சம்பந்தமாக வங்கிகள் பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றது. ஏராளமான நகைகள் வங்கிகளில் மீட்கப்படாத நிலையில், தேங்கிக் கிடக்கின்றன. ஏலவிற்பனையிலும் பாரியநட்டம் ஏற்பட்டமையால் விற்கப்படாத நிலையிலும், மீட்கப் படாத நிலையிலும் வங்கிகளில் நகைகள் தேங்கிக்கிடக்கின்றன.

இது தொடர்பாக ஆய்வு செய்தபோது இலாபத்தைக் கருத்திற்கொண்டு தங்கத்தின் தற்காலிக பெறுமதி உயர்விற்கேற்ப அடகுக் கடன்களை வழங்கியமை இனங்காணப்பட்டுள்ளது. மறு துருவத்தில் மக்கள் மத்தியில் தற்போது நிலவிவரும் சமனற்ற பொருளாதாரப் பரம்பலும் இதற்கான காரணங்களாக இனங்காணப்பட்டுள்ளது.

எது எப்படி இருப்பினும் வங்கிகள் தனது சுமையை மக்கள் மத்தியில் சுமத்துவது ஏற்புடையதன்று. அதாவது நகை சம்பந்தமாக கொடுக்கப் படும் வாக்குறுதிக் கையொப்பத்தில் இருப்பது யாதெனில், "மீட்கப் படாத நகைகள் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப் படும் என்பதேயாகும்" ஏல விற்பனைக்குரிய பெறுமதி கடன் தொகையை விஞ்சி விட்டது என்றால், அதற்கு வாடிக்கை யாளர்கள் (கடனாளிகள்) பொறுப்பு நிற்க முடியாது. இது வங்கி செய்த தவறு. இதைக் கடனாளிகள் மீது சுமத்த முடியாது. தற்போது வங்கிகள் சட்டத்திற்கு முரணாக வாடிக்கையாளர்களின் வேற்றுக் கணக்குகளில் இருந்து இக்கடனை வலுக்கட்டாயமாக அறவிடும் முறை தலைதூக்கியுள்ளது. அண்மையில் இறந்த வங்கி ஊழியின் (பென்சன்) ஓய்வூதியம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

விதவையான மனைவி பிள்ளையை வளர்ப்பதற்கு கணவனின் ஓய்வூதியத்தினைப் பெற வங்கிக்கிளை ஒன்றுக்கு சென்றபோது உங்கள் கணவன் வைத்த நகையை மீட்கவில்லை இதனால் அவரது பென்சன் நிறுத்தப்பட்டுள்ளது எனக் கூறப்பட்ட சம்பவமும் தொடர்ச்சியாக இரண்டு மாதங்கள் நிறுத்தி அதற்கான தொகைகளைப் பெற்று வரும் சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

இது எந்த வகையில் நியாயமானது. இறந்த ஓர் வங்கி ஊழியருககே இந்த நிலையென்றால் மற்றவர்களுக்கு எந்த நிலை என்பதுதான் புரியவில்லை. வங்கியின் திட்டமிடல்களில் உள்ள தவறுகள் இவை. தற்காலிக தங்கத்தின் பெறுமதி உயர்வுகளை கருத்திற்கொண்டு, குறைந்த கடன் தொகைகளை வழங்கியிருந்ததால் குறைந்த தொகையில் ஏலத்தில் தற்போது விற்றிருக்க முடியும்.

வட்டி இலாபத்தைக் கருத்திற் கொண்டு அதிக ஆசைப்பட்ட வங்கிகள் தற்போது நட்டத்தில் நகைகளை விற்கமுடியாத நிலை வரும் போது அதனை கடனாளிகள் மீது திணிப்பது எந்தவகையில் நியாயமானது.


நகைகளை மீட்க முடியாத நிலையில தானே ஏலவிற்பனைக்கு ஆமோதிக்கின்றார்கள். இந்த நிலையில் மக்கள் தள்ளாடும்போது அன்றாட வாழ்க்கைச் செலவிற்கு பயன்படுத்தப்படும் ஓய்வூதியங்களில் கை வைப்பது எந்த வகையில் நியாயமானது. அதற்கு எந்த அதிகாரம் வங்கிகளுக்கு உண்டு இதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலாபத்தைச் சம்பாதிக்கும்போது வங்கிகளுக்கு வாடிக்கையாளர்கள் தேவை நஷ்டம் வந்தவுடன் அந்த வாடிக்கையாளர்கள் வங்கிகளுக்குத் தேவையற்றுப் போகின்றார்கள். இதற்கு ஓர் தீர்வு வேண்டும். இல்லையேல் வங்கி மோசடி என்றே இதனைக் கருத முடியும். - *வெண்கட்டியன்*

**வட்டி இலாபத்தைப்பெற ஆசைப்பட்டு கடன் தொகையை அதிகமாக வ்ழங்கிய வங்கிகள் தற்போது ஏலத்தில் பெறுமதிசார் ரீதியாக விற்க முடியாத நிலை வரும் போது கடனாளிகளின் ஓய்வூதியங்களைக் கூட மோசடி செய்கின்றது இந்த அதிகாரத்தை வங்கிக்கு யார் கொடுத்தது?**



# புதிர்ப் போட்டி 75



**அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.**


*புதிர்ப்போட்டி 75 இற்குரிய விடைகள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 08.03.2014*

### சென்றவார விடைகள்

•(3) 1) (A,E,F ) H சனிக்கிழமை லீவு. C காலையில் வேலை செய்யமாட்டார். எனவே G யுடன் வேலை செய்யக்கூடியவர்கள் AEF

2) (4) E, G ஏனையோர் உடன்பாடற்றவர்கள்.

3)  கிடையாக ஏனைய உருவங்கள் சமனாகப் பிரிபடும்.



1) ஓர் அளவீட்டின்போது A,B, C எனும் மூன்று பிரேரணைகள் தொடர்பில் நாட்டு மக்களின் அபிப்பிராயம் பெறப்பட்டது. 68 சதவீத மக்கள் குறைந்த பட்சம் ஒரு பிரேரணையையாவது விரும்பினார்கள். 45% மக்கள் A பிரேரணையையும், 35% மக்கள் B பிரேரணையையும், 20% மக்கள் C பிரேரணையையும் விரும்பினார்கள். A,B,C ஆகிய மூன்று பிரேரணைகளையும் 10% மக்கள் விரும்பினார்கள். இரண்டு பிரேரணையை மட்டும் விரும்பிய மக்களது சதவீதம் யாது?

2) குறித்த ஒரு நகரத்தில் 55% மக்கள் மோட்டார் கார் உடைமையாளராவார். 30% மக்கள் மோட்டார் வான் வாகன உடைமையாளராவர். 15% மக்கள் மோட்டார் கார், மோட்டார் வான் வாகனம் ஆகிய இரண்டினதும் உடைமையாளராவார். மோட்டார் காரினையோ வான் வாகனத்தையோ தமது உடைமையாகக் கொண்டிராத பிரஜைகளின் சதவீதம் யாது?

3) அப்பியாசப் புத்தகம் ஒன்றின் விலை ரூபா 5.75 500 இற்கு மேற்பட்ட புத்தகங்களைக் கொள்வனவு செய்பவருக்கு ஒவ்வொரு புத்தகத்திற்கு ம் 10% கழிவீடு வழங்கப்படுகிறது. வியாபாரி ஒருவர் 6000 அப்பியாசக் கொப்பிகளை கொள்வனவு செய்தால் அவர் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை யாது?

4) பண்டங்களை ஏற்றிச் செல்லும் கடற் போக்குவரத்துக் கம்பனியொன்று முதல் 15 கிலோகிராமுக்கு ரூபா 17.50 யையும் மேலதிகமான ஒவ்வொரு கிலோகிராமுக்கும் 2 ரூபாயையும் கட்டணமாக அறவிடுகின்றது. 125 கிலோகிராம் எடையுடைய பொதியொன்றிற்குச் செலுத்த வேண்டிய கட்டணம் யாது?

5) ஒரு கிலோகிராம் இறப்பரின் விலை 25 ரூபா. ஒரு கிலோகிராம் தேயிலையின் விலை 50 ரூபா. ஒவ்வொரு மாதமும் ஒரு கிலோகிராம் இறப்பரின் விலை 10 சதவீதத்தால் அதிகரிக்கின்ற போதிலும் தேயிலையின் விலையில் மாற்றம் ஏற்படவில்லை. ஒரு கிலோகிராம் இறப்பரின் விலையானது ஒரு கிலோகிராம் தேயிலையின் விலையிலும் பார்க்க அதிகமாவதற்கு எத்தனை மாதங்கள் செல்லும்.?

### சரியான விடை எழுதி பாராட்டுப்பெறுபவர்கள் விபரம்

பெயர்:- பு.நிரோஜினி
பாடசாலை :- யா/ வல்வை சிவகுரு வித்தியாசாலை.

பெயர்:- சி.சியாமி
பாடசாலை :- யா/ யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

பெயர்:- பி.திவ்யா
பாடசாலை :- யா/ இந்து மகளீர் கல்லூரி.

பெயர்:- க.தாட்சாயினி
பாடசால்ல :- யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை.

### அனுப்பவேண்டிய முகவரி

*புதிர்ப்போட்டி இல*
*தினமுரசு*
*இல. 373, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**மாணவர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்! புதிர் பபோட்டி விடைகளுடன் உங்களது போட்டோப் பிரதி ஒன்றையும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.**

### விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர்:- ----------------------------------------

பாடசாலையின் பெயர் :- ----------------------------------------

தரம் :- ----------------------------------------

தொலைபேசி இல :----------------------------------------

முகவரி :- ----------------------------------------

# சனசமூக நிலையங்களின் நடவடிக்கைகள் ஒழுங்கமைப்பு

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் கீழ் இயங்கும் சனசமூக நிலையங்களின் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் வகையில் சனசமூக நிலையங்கள் பின்வரும் விடயங்களை கவனத்திற்கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச சபை தலைவரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.


தங்களால் நடாத்தப்படும் சகல கூட்டங்களுக்கான அறிக்கைகளையும் (பொதுக்கூட்டறிக்கை நிர்வாக அறிக்கை) கூட்டம் நடைபெற்று ஒரு வாரத்தினுள் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வறிக்கைகள் யாவும், எமது சபையில் பேணப்படும் தங்களது சனசமூகநிலையத்துக்கான கோவையிலிடப்படுவது அவசியமாகும். (பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், சமாசத்தலைவர், சபை உத்தியோகத்தர் முன்னிலையில் நடாத்தப்படல் வேண்டும் தாமதமாகக் கிடைக்கும் அறிக்கைகள் பரீசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

பொதுக்கூட்டங்கள் ஒவ்வொரு வருடமும் நடாத்தப்படுவது கட்டாயமானதாகும். அத்துடன் தற்போது செயற்படும் நிர்வாகமானது அடுத்து வரும் நிர்வாகத்திடம் பொருட்கள், ஆவணங்களைப் பூரணமாகக் கையளிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களே இவ்விடயத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டியவராவர். என்பதைக் கவனத்திற்கொள்ளவும்.

5000 ரூபாவிற்கு மேற்பட்ட பணத்தொகையை மீளப்பெறுவதற்கு தங்களது நிர்வாகக் குழுக் கூட்டத்தில் தீர்மானித்து அதன் அறிக்கையை பிரதேசசபையில் சமர்ப்பித்து சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் அனுமதியைப் பெற்ற பின்னரே பணத்தை வங்கியிலிருந்து மீளப் பெறமுடியும்.

மேலும் சனசமூக நிலையங்களின் 2013ஆம் ஆண்டுக்கான விபரங்களைப் பூரணமாகப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு சனசமூகநிலையங்களுக்கு அறிவுறுத்தலுடன் வழங்கப்பட்ட படிவத்தைப் பூர்த்தி செய்து கோரப்பட்ட ஆவணங்களை இணைத்து அனுப்பிவைக்குமாறு தலைவர் அறிவித்துள்ளார்.

# கால்நடைகளுக்கு நோய் பண்ணையாளர்கள் பாதிப்பு



(நெடுங்கேணி)

நெடுங்கேணி பகுதியில் கால்நடைகளுக்கு வாய், கால் நோய்கள் அதிகரித்து வருவதாக கால்நடை உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நெடுங்கேணி, ஒலுமடு, கீரிசுட்டான், கற்குளம். பட்டிக்குடியிருப்பு. ஆகிய கிராம சேவை பிரிவுகளில் உள்ள கால் நடைகளுக்கு கால்நோய் வாய நோய் அதிகரித்து வருவதினால் உணவு உண்ண முடியாத நிலையில் கால்நடைகள் இறந்து விடுகின்றன.

எனினும் கால்நடைகளில்குறிப்பாக ஆடு,மாடு போன்றவற்றை பயன்படுத்தி சீவியம் நடத்தும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இன் நோயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு கால்நடை உரிமையாளர்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டும் பயன் ஏதும். இல்லை எனவும் இது தொடர்பில் கால்நடை வைத்திய அதிகாரி பணியினால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என கால்நடை உரிமையாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (40)

# மின்மார்க்க பணிகளுக்காக மின்சார விநியோகம் தடை

(யாழ்ப்பாணம்)

புதிய உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்றும் நாளையும் பின்வரும் இடங்களில் மின் விநியோகம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்று சனிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை மருதங்கேணி, சோரன்பற்று, மாசார், புதுக்காடுச் சந்தி, கரம்பொன், பொன்னொச்சிக்கடை சந்தியிலிருந்து நாரந்தனை வரையான பிரதேசம், நெடுந்தீவுப் பிரதேசம் முழுவதும் ஆகிய இடங்களில் மின் தடைப்படும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப்பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படிப் பிரதேசம், கொன்வென்ட் பிரதேசம், பிரதான வீதி, யாழ். நகரம் முழுவதும், யாழ். மாநகரசபைப்பகுதி, ஸ்ரான்லி வீதி, கலட்டி, தட்டார்தெரு, மனோகரா, கஸ்தூரியார் வீதி, குருநகர், பாசையூர், காக்கைதீவு, மீனாட்சிபுரம், கொட்டடி, நாவாந்துறை, யாழ் பிரதான வீதி, பண்ணைப் பகுதி, ஊரெழு, உரும்பிராயின் ஒரு பகுதி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, போயிட்டி, பூம்புகார், நாவலடி, அரியாலை கிழக்கு, மணியந்தோட்டம், உதயபுரம், நெடுங்குளம், தூண்டி, வசந்தபுரம், ஆனந்தன் வடலி வீதி, மகேந்திரபுரம், தேவபுரம், கொழும்புத்துறை வீதியின் ஒரு பகுதி, கொக்குவில் சந்தி, கம்பஸ் லேன், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், முடமாவடி, பால் பண்ணை, சிவப்பிரகாசம் வீதி, பூநாறிமரத்தடி, நாச்சிமார் கோவில், இராசவீதி, கல்வியியற் கல்லூரி, 51பிறிகேட் இராணுவ தலைமையகம், கோப்பாய் கிருஸ்ணன் கோவில், பொற்பதி வீதி, கோண்டாவில் இருபாலை வீதி, கோண்டாவில் மேற்கு, பலாலி வீதி, நெடுந்தீவுப் பிரதேசம் முழுவதும் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்படும் என யாழ் பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## கழன்று ஓடியது "சில்லு"





கனரக வாகனத்தின் சில்லு கழன்று ஓடிய சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பஸ்தியாம்பிள்ளை சந்திக்கருகில் புகையிரதப் பாதைபுனரமைப்பு பணியில் ஈடுபடும் கனரக வாகனத்தின் முன் சில்லு கழன்று ஓடியதை அடுத்து வாகனம் விபத்துக்குள்ளாகியிருப்பதைக்காணலாம்.

(இ)

# வாரம் ஒரு காரம்



## காணாமற் போனோரைப் பாறை சாற்றி கண்டறியும் முயற்சிக்கு ஊடகங்கள் உலை வைக்கின்றன

இலங்கையரசாங்கம் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடாத்துவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவினை நியமித்து பலமான விசாரணைகளைப் பல பக்கங்களிலும் மேற்கொண்டு வருகின்றது. இது சர்வதேச சந்திப்புக்களுக்கான ஓர் சங்கதியா? என சந்தேகப்பட வேண்டிய கட்டங்கள் ஒரு புறமிருக்க ஊடகங்கள் பக்கம் பக்கமாக படங்களைப் போட்டு அடுத்து வரும் நாடாளுமன்றத்தேர்தலிற்கு பாவப்பட்ட மக்களைப் பயன்படுத்துகிறார்கள். இதன் பின்னணிகளை ஆழமாக சிந்திக்கின்ற போது அது காணாமற்போனோர்க்கு பாதகமான பக்கங்கள் என்பதை எவரும் புரிந்து கொள்ளவில்லை.

காணாமற்போனோரின் உறவுகள் கூறுவது போல ஒரு வேளை இவர்கள் தற்போதும் உயிருடன் இருந்தால் அவர்களின் உயிருக்கு இந்தச் சூழலே ஆபத்தை ஏற்படுத்தி விடும் என்கின்ற ஐயம் இலைமறைவில் உள்ள காய் போல் இருப்பது எவருக்கும் புரியவில்லை. சர்வதேச பார்வைக்கு இலங்கையரசு ஆணைக்குழுவை நியமித்து விசாரணைகளை நடாத்தும் போது ஏதோ சர்வதேசம் தேடிக்கொடுப்பது போல் ஓடிப்போய் விபரத்தை கொடுத்துக் கண்ணீர் வடிக்கின்றோம். அனைவரிற்கும் பறைசாற்றி விபரங்கள் திரட்டப்பட்ட பின் எவரும் தாங்கள் தான் கடத்திச்சென்றோம் என விடுவிக்க முன்வர மாட்டார்கள். ஏனெனில் அது அநாவசியமான அவமானப்பக்கங்களை அடையாளப்படுத்துவதாக அமைந்து விடும்.

இது ஒரு புறமிருக்க அரச எதிர்ப்பை வைத்து பத்திரிகை நடாத்திய ஊடகங்கள் தற்போது காணாமற் போனோர் தொடர்பான காட்சிகளை அரங்கேற்றிக் கொண்டு இருக்கின்றார்கள். மக்களின் கண்ணீரைக் காட்சிப்படுத்தி காசு சம்பாதிக்கும் ஊடகங்கள் காணாமற் போனோரின் எதிர்காலம் தொடர்பாக சற்றேனும் சிந்திக்க மறுக்கின்றன.

அன்று விடுதலைப்புலிகளின் வளர்ச்சியை கண்டு பயந்த அமெரிக்கா உட்பட்ட சர்வதேச நாடுகள் தங்களுக்கே இவர்கள் அச்சுறுத்தலாக இருப்பார்களோ என முனைப்புப்பெற்று அவர்களை அழிக்க முற்பட்டவேளை ஏராளமான மக்களின் அழிவுகள் இடம் பெறுவது தெரிந்தும் அழிக்க வேண்டுமென்ற ஆதங்கத்தில் ஆயுதங்களைக் கொடுத்த அமெரிக்கா உட்பட்ட சர்வதேசம் இன்று மறுதுருவம் திரும்பி மனித உரிமை மீறலெனக் கொக்கரிக்கின்றது இவையெல்லாம் அரசியல் நாடகங்கள் என்பதைப் புரிந்த இலங்கையரசு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் கண்ணாடிக் கூண்டிற்குள் இருந்து கல்லெறியும் கதை பேசுகின்றது.

இது தொடர்பாக எவற்றையும் புரியாத அப்பாவித் தமிழ் மக்கள் அன்றும் அடி வாங்கினார்கள், இன்றும் வேறொரு துருவத்தில் அடி வாங்குகின்றார்கள். இதன் ஓர் துருவம் தான் காணாமற் போனோரைப் பறைசாற்றி கண்டறியும் முயற்சிக்கு உலை வைப்பது.

சமூக பொறுப்புடன் ஊடகங்கள் நடந்து கொள்ள வேண்டும் என்கின்ற நிலை தற்போது மாறி வருகின்றது. விற்பனை இலாபநோக்கம் என்கின்ற தொனிப பொருளில் ஓர் சமூகத்தையே காட்டிக்கொடுக்கின்றன இந்த ஊடகங்கள்.

ஏராளமான போராளிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். தளபதிகள் தரத்தில் இருந்தவர்கள் கூட விடுவிக்கப்பட்டு புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. அத்தனை பேரின் விபரங்களும் பறைசாற்றப்படாதா? பக்குவமாக அவர்களின் உறவுகள் கையாண்டமையால் பிடித்தவர்கள் யார் விடுவித்தவர்கள் யார் எனத் தெரியாத நிலையில் பல உயிர்கள் காபந்து செய்யப்பட்டுள்ளன.

இதுதான் யதார்த்தம். இத்தனை நாளும் விடுவிக்கப்படவில்லை என்கின்ற ஆதங்கத்தில் ஆவேசப்படுகின்றோம். இந்த ஆவேசம் உயிருடன் உள் இருப்போரின் நிம்மதிகளையும் குலைக்கு மென்பதை சற்றேனும் நாம் சிந்திப்பதில்லை.

கூட்டமைப்பு ஒரு துருவத்தில் அன்று விடுதலைப்புலிகளை ஏமாற்றி விட்டு ஒரு துருவத்தில் இன்று மக்களை ஏமாற்றி மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியல் மூலம் சுயலாப அரசியல் அதிகாரங்களை அனுபவித்து வருகின்றது. சர்வதேசம் என்கின்ற போர்வையில் அமெரிக்கா அன்று இலங்கையரசுடன் சேர்ந்திருந்து விட்டு இன்று மக்களையும் ஏனைய நாடுகளையும் ஏமாற்றுகின்றது. மறுதுருவத்தில் இலங்கையரசு மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றுகின்றது. இதற்கிடையில் மிஞ்சப்போவது காணாமற்போன உறவுகளின் கண்ணீர் மட்டும் தான்.

– வெண்கட்டியன்

# இல்லை என்று சொல்வதற்கு ஒரு அமைச்சர் தேவையில்லை

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன்

ஜெயபுரம் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் இல்லை என வடக்கு மாகாண கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். அவ்வாறு இல்லை என்று பதிலளிப்பதற்கு அமைச்சர் என்று ஒருவர் தேவையில்லை என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் ஜெயபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

வானுயர்ந்த கட்டட வளங்கள் அனைத்தும் பூரணமாக நிவர்த்தி செய்யப்பட்ட ஒரு ரம்யமான சூழலில் ஜெயபுரம் மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டி நடந்து முடிந்துள்ளது. ஆனாலும், இப்பாடசாலையில் ஆசிரியர் உள்ளிட்ட பல குறைபாடுகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றமை கவலையளிக்கின்றது.

மீள்குடியேற்றத்தின் பின்பு கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தியில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மிகுந்த கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றார். அதற்கமைவாக இம் மாவட்டத்தில் கல்வி மேம்பாட்டுக்காக பல வேலைத் திட்டங்களை அவர் நடைமுறைப்படுத்தியிருக்கின்றார். அவற்றுக்கூடாக இம்மாவட்டம் கல்வி வளர்ச்சியிலும் ஒரு உயர் அத்தியாயத்தை எட்டியிருந்தது என்பதனைப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. ஆனால், வடக்கு மாகாண சபைத் தேர்தல் சற்று பிந்தி நடைபெற்றிருந்தால் அல்லது தேர்தலில் அமோகமான வாக்குகளை அபகரித்தவர்களுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படாதிருந்தால் பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை வழமையைப் போலவே சீர்படுத்தும் வாய்ப்புகிட்டியிருக்கும். ஏனெனில், கடந்த காலங்களில் அனைத்து பாடசாலைகளிலும் பாரிய வளப்பற்றாக் குறைகள் நிலவின. அவை அனைத்தையும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தொலைபேசி உரையாடல்களுக்கூடாகவே உடனுக்குடன் நிவர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வந்தார். அதற்கமைவாக வேலைத் திட்டங்களும் துரிதப்படுத்தப்பட்டன. ஆனால், இப்போது கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கும் தேசிய பாடசாலைகளைத்தவிர மாகாணசபையின் கீழ் இயங்கும் அனைத்து பாடசாலைகளும் மாகாண அமைச்சின் கீழான நிர்வாகத்திற்குட்பட்டிருக்கின்றன.

வடக்கு மாகாணத்தில் ஆசிரியர் பற்றாக்குறை என்பது இல்லை. மாறாக ஆசிரியர்கள் மேலதிகமாகவே இருக்கின்றார்கள். ஆனால், ஆசிரிய வளத்தை சரியாக பங்கீடு செய்யும் நிர்வாகத்திறனற்ற அமைச்சரே அங்கு உள்ளதனால் மாணவர்கள் கல்விக்காக கண்ணீர் சிந்தும் நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது என்றார்.



பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் அவர்கள் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களை வழங்கினார். இதன்போது முழங்காவில் பங்குத்தந்தை ஆனந்தகுமார் அடிகளார், பூநகரி பிரதேச சபைத் தலைவர் சிறிஸ்கந்தராசா, பாடசாலையின் அதிபர்கள், பூநகரிக் கோட்டத்தில் ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

### இத்தாலியில் திருட்டில் ஈடுபட்ட 8 பேர் சிசிலியே பொலிஸாரால் கைது

சிசிலியே நகரத்தைக் கேந்திர நிலையமாகக் கொண்டு திருட்டில ஈடுபட்ட 8 இலங்கையர்களை இத்தாலியின் சிசிலியே மெஷினா நகரின் கெரப்னேரி பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

அது மட்டுமன்றி கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து திருடப் பயன்படுத்தப்பட்ட கத்தி, இரும்பு கம்பி என்பன பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன. 2011ஆம் ஆண்டு இந்தத் திருட்டுக் குழுவினர் மெஷினா நகரில் இலங்கையர் ஒருவரை கடுமையாக தாக்கி அவரிடம் இருந்து பணம் மற்றும் பொருட்களை திருடிச் சென்றுள்ளதாக முதல் முறையாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# மாடுகளை வெட்டுவதை எதிர்க்கும் உண்ணாவிரத போராட்டம் நிறுத்தம்

(கொழும்பு)

மாடுகளை வெட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சிங்கள ராவய அமைப்பைச் சேர்ந்த பிக்குமார்களினால் முன்னெடுக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமையவே இந்தப் போராட்டம் கைவிடப்பட்டதாக சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்தார்.

மாடுகளை வெட்டுவதற்கு எதிராக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பில் கடந்த ஆறு மாதங்களாக காத்துக்கொண்டிருக்கிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாடுகளை வெட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பு, கோட்டை ரயில் நிலையப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து இந்த உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 14 ஆமைகளை பிடித்த 5 பேர் மாரவில பொலிஸாரால் கைது

(கொழும்பு)

மாரவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெத்தினிய, ஹொரகெலே பிரதேசத்திலுள்ள குளமொன்றில் இறைச்சிக்காக கல் ஆமைகளைப் பிடித்ததாகக் கூறப்பட்டு 5 பேரை மாரவில பொலிஸார் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 14 கல் ஆமைகளையும் கைப்பற்றியதாக மாரவில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கல் ஆமைகளுடன் ஹெத்தினிய பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேக நபர்கள் 5 பேரை மாரவில நீதிமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆஜர்படுத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் மாரவில பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பரிசோதகர் அமித ரஞ்ஜித் தலைமையிலான குழுவினர் இது தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரியவந்துள்ளது.

# பல்வேறுகோரிக்கைகளை முன்வைத்து தம்பிராசா சத்தியாக்கிரகம்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு சம்பூர் கிராம மக்களின் மீள் குடியேற்றத்திற்காக மக்களுக்குரிய உறுதிக் காணிகளில் இருந்து உடனடியாக அரச படைகள் வெளியேற வேண்டுமென்றும், உறுதிமொழி வழங்கப்பட்ட உலர் உணவு நிவாரணம் உடனடியான வழங்கப்பட வேண்டுமென்றும் கோரி அடக்குமுறைக்கு எதிரான ஜனநாயக் அமைப்பின் தலைவர் மு.தம்பிராசா நேற்றுக் காலை 6.45 மணியிலிருந்து யாழ்.செயலகத்திற்கு முன்னால் தொடர் சத்தியாக் கிரகத்தை ஆரம்பித்தார்.

அரசியல் கைதிகளின் விரைவான விடுதலைக்கும், காணாமற் போனவர்கள் சம்பந்தப்பட்ட விரைவான நீதியான விசாரணைக்கும், அவர்களின் விடுதலைக்கும் கடந்த கால போராட்ட




சூழ் நிலையில் அங்கவீனர்கள் ஆக்கப்பட்ட எமது மக்களின் மேம்பாட்டிற்கும் நிறைவானதும் நியாயமானதுமான கொடுப்பனவுகளுக்கும் விடுதலை செய்யப்பட்டவர்களின் பாதுகாப்பிற்கும் அவர்களின் அன்றாட வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான கொடுப்பனவுகள் அரச வேலை வாய்ப்புக்கள் மற்றும் மாகாண சபையை எந்தவொரு இடையூறுமின்றி இயங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மத்திய அரசாகத்தையும் ஜனாதிபதியையும் கோருவதாக குறிப்பட்டு தொடர் சத்தியாக்கிரக போராட்டம் இடம்பெற்று வருகின்றது. (இ)

# படுகொலைகளை நினைவூட்டும் மட்டக்களப்பு கண்காட்சி




(கொழும்பு)

புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் தொடர்பில் இதுவரை கண்டிராத புகைப்படங்கள் அடங்கிய மீள் நினைவூட்டல் கண்காட்சியொன்று நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஐக்கியத்திற்கும் சகவாழ்வுக்குமான மத்திய நிலையம் (சி.ஆர்.சி) ஏற்பாடு செய்துள்ள இந்தப் புகைப்படக் கண்காட்சியினை ஊக்குவிப்பு உற்பத்தி திறன் விருத்தி அமைச்சர் பசீர் சேகு தாவூத் ஆரம்பித்துவைத்தார்.

இதன் ஆரம்ப வைபவத்தில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், கிழக்கு மாகாணசபையின் பிரதி தவிசாளர் எம்.எஸ். சுபைர், ஐக்கியத்திற்கும் சகவாழ் வுக்குமான மத்திய நிலையத்தின் தலைவர் எம்.டி.என். பெரேரா உட்பட பிரதே செயலாளர்கள், அதிகாரிகள், சமய தலைவர்கள், பாதுகாப்பு உயரதிகாரிகள், சிவில் சமூக பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

நேற்றுமுன்தினம் காலை ஆரம்பமான புகைப்படக்கண்காட்சி நேற்று மாலை நிறைவு பெற்றது. இந்த புகைப்பட கண்காட்சியில் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், புலிகளினால் யுத்தத்திற்கு பயன்படுத்திய சிறுவர்கள், அரசியல் தலைவர்களின் படுகொலைகள் என்பன தொடர்பான படங்கள் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள மீள் கட்டுமானம், அபிவிருத்தி நடவடிக்கைகள், சமாதானம் மற்றும் ஐக்கியம் என்பவற்றை அடையாளப்படுத்தும் புகைப்படங்களும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இளங்கதிர் முன்பள்ளிக்கு ஊஞ்சல் அன்பளிப்பு



கிராம அபிவிருத்திச் சங்கம், கிராம சேவையாளரின் வேண்டு கோளுக்கு இணங்க வவுனியா தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பு ஓமந்தை வேப்பங்குளம் இளங்கதிர் முன்பள்ளிக்கு ஊஞ்சல் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளது.

அடிப்படை வசதிகள் இல்லாமல் ஆரம்பிக்கப்பட்ட இந்த முன்பள்ளிக்கு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் திறப்பு விழாவில் சிறார்களின் மன மகிழ்வுடன் கற்றலுக்கான செயற்பாட்டுக்காக ஊஞ்சல் ஒன்றை வழக்கும்படி கலந்து கொண்ட தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பு வவுனியாவின் சந்திரகுமார் (கண்ணன்) இடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக இந்த ஊஞ்சல் வழங்கி வைக்கபட்டது.

மேலும் இக் சிறார்களின் தேவைக்கு சருகீஸ், சீசோ போன்றவையும் தேவைபடுவதாகவும் நலன்விரும்பிகள் முடிந்தால் அதை அந்தச் சிறார்களின் மனமகிழ்வுடன் கற்றலுக்கான செயற்பாட்டுக்காக வழக்கும்படியும் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் கருணாநிதி கேட்டுக் கொண்டார்.

# க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை - 2014

# கல்வி முரசு

## பொதுஅறிவு

1) 1505 இல் போர்த்துகேயர் இலங்கையைக் கைப்பற்றினர்.

2) 1658 இல் ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றினர்.

3) 1707 இல் தேசவழமைச்சட்டம் யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டது.

4) 1737 இல் முதலாவது அச்சு நூல் சிங்கள மொழியில் உருவாக்கப்பட்டது.

5) 1796 இல் பிரித்தானியரால் இலங்கை கைப்பற்றப்பட்டது கிழக்கிந்தியக் கம்பனியிடம் இலங்கை ஒப்படைக்கப்பட்டது.

6) 1798-1805 வரை பிரட்ரிக் நோத் தேசாதிபதியாக இருந்தார் இவரே இலங்கையின் முதலாவது தேசாதிபதியாவர்.

7) 1802 இல் இலங்கை பிரிட்டனின் முடிக்குரிய குடியேற்ற நாடாக்கப்பட்டது

8) 1802-1806 வரை பிரதம நீதியரசராக எட்மண்ட் கரிங்டன் தெரிவு செய்யப்பட்டார் இவரே இலங்கையின் முதலாவது பிரதம நீதியரசர் ஆவார்.

9) 1802 இல் முதன் முதலில் "வர்தமானி" எனும் அரச வெளியீடு வெளியிடப்பட்டது.

10) 1815 இல் கண்டி யுத்தத்தின் பின்னர் இலங்கை பூராகவும் அந்நியர் ஆட்சிக்குட்பட்டது கண்டியை ஆண்ட கடைசி மன்னர் விக்ரம ராஜசிங்கன் இக் காலப்பகுதியில் ஆளுனராக றொபேட் பிறவுன்றிக் இருந்தார்.

11) 1820 இல் கொழும்பு - கண்டி வீதி எட்வோர்ட்பான்ஸ் இனால் திறந்து வைக்கப்பட்டது.

12) 1823 இல் கோப்பிப் பயிர்செய்கை சேர் எட்வேர்ட் பான்ஸ் எனும் ஆளுனரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

13) 1824 இல் இலங்கையின் முதல் பெண்கள் பாடசாலையாக உடுவில் மகளிர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

14) 1833 இல் கோல்புறூக் ஆணைக்குழுவின் சிபார்சின் படி கோல்புறூக் அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டது இதில் சட்டவாக்கக்கழகமும் நிர்வாகக்கழகமும் உருவாக்கப்பட்டது.

15) 1832 இல் அஞ்சல் சேவையை பிரித்தானியர் அறிமுகம் செய்தனர்.

16) 1839 இல் கலாநிதி கினேசர் பேராதனைப் பூங்காவில் தேயிலைச் செடிகளை நாட்டினார்.

17) 1841 இல் பெருந்தோட்ட அபிவிருத்திக்கு ஓறியன்ரல் வங்கி உருவாக்கப்பட்டது.

18) 1841 இல் தமிழ்மொழி வளர்ச்சிக்காக முதல் உதயதாரகை வெளிவந்தது.

19) 1857 இல் இலங்கையின் முதலாவது அஞ்சல் முத்திரை வெளியிடபப்பட்டது

20) 1865 இல் இலங்கையின் முதலாவது மாநகரசபையாக கொழும்பு மாநகரசபை உருவாக்கப்பட்டது தற்போது 18 மாநகர சபைகள் இலங்கையில் உள்ளது.

21) 1867 இல் கண்டியில் லூலகந்தை தோட்டத்தில் ஜேம்ஸ்ரெயிலர் என்பவரால் தேயிலை பெருந்தோட்டப்பயிராக உருவாக்கப்பட்டது.

22) 1870 இல் இலங்கைப் புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டது.

23) 1871 இல் முதலாவது சனத்தொகை கணக்கெடுப்பு இலங்கையில் நடாத்தப்பட்டது கடைசியாக இலங்கை பூராகவும் 1981 இல் கணக்கெடுப்பு நடைபெற்றது. அசாதாரண நிலைமைகளில் 2001 இல் கடைசியாக கணக்கெடுப்பு நடைபெற்றாலும் இது வடக்கு கிழக்குப் பகுதிகளில் நடை பெறவில்லை 2001 இல் நடைபெற்றது 13 ஆவது சனத்தொகைக் கணக்கெடுப்பாகும்.

24) 1872 இல் நாணயக்குற்றி அறிமுகப்படுத்தப்பட்டது.

25) 1876 இல் பிறேசிலிலிருந்து இறப்பர் விதைகள் கொண்டு வரப்பட்டு இறப்பர் செய்கை ஆரம்பிக்கப்பட்டது.

26) 1885 இல் தாள் நாணயம் உருவாக்கப்பட்டது.

27) 1893 இல் தொழில்நுட்பக் கல்லூரி மருதானையில் ஆரம்பிக்கப்பட்டது

28) 1902 இல் நொத்தாரிசுச்சட்டம் உருவாக்கப்பட்டது.

29) 1910 இல் மக்கலம் கால அரசியல் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது கல்வி கற்ற இலங்கையருக்கு பிரதிநிதியைத் தெரிவு செய்யும் உரிமை வழங்கப்பட்டது.

30) 1912 இல் முதலாவது கூட்டுறவுச் சங்கம் மாத்தறை மாவட்டத்தில் வெல்படபத்து எனும் இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

31) 1917 இல் சாரணர் இயக்க தந்தை பேடன்பவல் ஆவார்.

32) 1919 இல் முகாமைத்துவ பட்டைய கணக்காளர் சங்கம் நிறுவப்பட்டது.

33) 1919 இல் இலங்கையின் தேசிய காங்கிரஸ் உருவாகியது இதன் தலைவராக சேர் பொன் அருணாசலம் இருந்தார்.

34) 1921 இல் உபதபால் அலுவலகங்கள் நிறுவப்பட்டன.

35) 1921 இல் கொழும்பில் பல்கலைக்கழகக்கல்லூரி நிறுவப்பட்டது.

36) 1925 இல் கொழும்பு ஒளிபரப்பு நிலையம் உருவாக்கம்.

37) 1931 இல் டொனமூர் அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டது இதில் 21 வயதுக்கு மேற்பட்டோருக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

38) 1936-1942 வரை அமைச்சரவையிலிருந்த அனைவரும் சிங்களவராவர்.

39) 1937 இல் பண்டாரநாயக்காவால் சிங்கள மகாசபா உருவாக்கப்பட்டது.

40) 1939 இல் இலங்கை வங்கி ஆரம்பம் 1961 இல் தேசியமயமாக்கப்பட்டது.

41) 1942 இல் பங்கீட்டு முறை அறிமுகமானது.

42) 1942 இல் இலங்கைப் பல்கலைக்கழகம் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது முதலாவது வெளிநாட்டுத் துணைவேந்தர் ஜவர் ஜெனிங்ஸ்(பிரிட்டன்) முதலாவது இலங்கையரான துணை வேந்தர் நிக்கலஸ் ஆட்டிகல.

43) 1943 இல் கூட்டுறவு பயிற்சிக்கல்லூரி பொல்கொல்லையில் ஆரம்பமாகியது.

44) 1943 இல் பட்டதாரிகளுக்கு கல்வி டிப்ளோமா வழங்கும் திட்டம் அறிமுகம்.

45) 1945 இல் இலவசக்கல்வி கன்னங்கரவினால் அறிமுகம் (இலவசகல்வியின் தந்தை).

46) 1947 இல் சோல்புரி யாப்பு உருவாக்கப்பட்டது இது செனற்பிரதிநிதிகள் சபை எனக் காணப்பட்டது.

47) 1947 இல் இலங்கையில் சினிமாத்துறை ஆரம்பம் "ராஜயசீய" விக்கிரமய முதலாவது மௌனப்படம்.

48) 04.02-1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றது.

49) 1948 இல் புற்றுநோய் தடுப்புச்சங்கம் ஆரம்பம்.

50) 1948 இல் 18 ஆவது பிரஜாவுரிமைச்சட்டத்தின் மூலம் இந்திய வம்சாவளித் தமிழர்கள் அனைவரும் பிரஜாவுரிமை அற்றவர் ஆக்கப்பட்டமை.

51) 1949 இல் இலங்கை வானொலி எனப் பெயர் மாற்றம்

52) 1949 இல் இலங்கை ராஜசபை உருவாக்கப்பட்டது (10-10-1949) பிரதம நீதியரசராக முதலாவது இலங்கையர் சேர் ஆதர்விஜயவர்தனா.

53) 1950 இல் மத்திய வங்கியின் தலைமையகம் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது.

54) 09-12-1950 இலங்கைக் கடற்படை உருவாக்கப்பட்டது.

55) 1950 இல் சிங்கக்கொடி தேசியக்கொடியாக்கப்பட்டது.

56) 1950 இல் லக்சபான மின்நிலையம் ஆரம்பம்.

57) 1951 இல் சிங்களம் தமிழில் இலங்கை வானொலியில் வர்த்தக சேவை ஆரம்பம்.

58) 1952 இல் கல்லூரி மாணவருக்கு புலமைப்பரிசில் திட்டம் அறிமுகம்.

59) 1952 இல் டி.எஸ. சேனநாயக்க மரணமடைய டட்லி சேனநாயக்க பிரதமரானார்.

60) 1953 இல் டட்லி சேனநாயக்க அரிசிவிலை உயர்வால் பதவியை இராஜினாமாச் செய்தார்.

61) 1955 இல் ஜோன் கொத்தலாவல (பிரதமர்) யாழ்ப்பாணம் விஜயம் செய்தார்.

62) 1955 இல் இலங்கை ஐ.நா.வில் உறுப்பு நாடாகியது.

63) 1955 இல் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டது பண்டாரநாயக்காவால்)

64) 1956 இல் யூன் 5 இல் பாராளுமன்றத்தில் இச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

65) 1956 இல் கண்டி யாத்திரையை ஜெயவர்த்தனா நடாத்தினார்.

66) 26-07-1957 இல் பண்டா செல்வா ஒப்பந்தம் கைச்சாத்து.

67) 1957 இல் வாகனங்களுக்கு சிங்கள ஸ்ரீ அறிமுகம்.

68) 1957 இல் கட்டுநாயக்கா விமானநிலையம் இலங்கைக்குச் சொந்தமானது.

69) 1958 இல் இலங்கைப் போக்குவரத்துச் சபை ஆரம்பம்.

70) 1958 இல் கொழும்புத்துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டது.

71) 1958 இல் இனக்கலவரம் ஏற்பட்டது.

72) 1959 இல் S.W.R.D பண்டாரநாயக்கா சுட்டுக்கொலை.

73) 1959 இல் கலாநிதி W.தகநாயக்கா பிரதமனாரார் இவரினாலேயே பாராளுமன்றத் தேர்தல் ஒரே நாளிலேயே நடாத்தி முடிக்கும் திட்டம் முதலில் நிறைவேற்றப்பட்டது.

74) 1960 இல் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அரசு மையமாக்கப்பட்டது.

75) -1960 இல் பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டது.

76) 1960 இல் இலங்கையின் முதல் முறையாக பெண் பிரதமர் ஸ்ரீமாவோபண்டரநாயக்கா தெரிவு செய்யப்பட்டார் (உலகின் முதல் பெண் பிரதமரும் இவரே).

77) 1961 இல் முதலாவது மக்கள் வங்கிக் கிளை திறக்கப்பட்டது

78) 1962 இல் ஐ.நா பாதுகாப்புச் சபையில் இலங்கை உறுப்புரிமை பெற்றது

79) 1962 இல் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆரம்பம்

80) 1963 இல் கிராமசேவகர் முறை அறிமுகம்.

81) 1965 இல் பங்கீட்டுத்திட்டத்தின் கீழ் இலவச அரிசி வழங்கும் திட்டம் அறிமுகம்.

82) 1965 இல் டட்லி சேனநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தம் ஏற்பட்டது இது பின்னர் 1968 இல் கைவிடப்பட்டது.

83) 1966 இல் அரசாங்கம போயா நாளை விடுமுறை நாளாக பிரகடனம் செய்தது.

84) 1967 இல் இலங்கை வானொலி இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் எனப் பெயர் மாற்றப்பட்டது.

85) 1968 .இல் அரச குடும்பத்திட்டப்பிரிவு உருவாக்கப்பட்டது.

86) 1972 இல் தேசியசேமிப்பு வங்கி ஆரம்பிக்கப்பட்டது.

87) 1972 இல் யாழ் பல்கலைக்கழக கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது இது 1974 பல்கலைக்கழகமாகதரம் உயர்வு.

88) 22-05-1972 இல் இலங்கை குடியரசு நாடாகியது.

89) 1972 இல் தேசிய அடையாள அட்டை அறிமுகம்.

90) 1972 இல் தமிழ் புலிகள் அமைப்பு உருவாகியது.

91) 1973 இல் திரிபோசா மா வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது

92) 1973 இல் சீன உதவியுடன் பண்டராநாயக்க ஞாபகார்த்த மண்டபம் கட்டப்பட்டது.

93) 1977 இல் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி தலைவராக இருந்தார் இலங்கை வரலாற்றிலே தமிழர் ஒருவர் இப்பதவியில் இருந்தது இதுவே முதற்தடவை.

94) 1978 இல் சுதந்திர வர்த்தக வலயம் கட்டுநாயக்காவில் ஆரம்பிக்கப்பட்டது.

95) 1979 இல் பயங்கரவாதத்தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டது -எயர் லங்கா நிறுவப்பட்டது லங்கா துறைமுக அதிகார சபை உருவாககப்பட்டது.

96) 1980 இல் ஸ்ரீமாவோ பண்டரநாயாக்காவால் குடியுரிமை பறிப்பதற்கான குடியுரிமை தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

97) 1980 இல் திறந்த பல்கலைக்கழகம் இலங்கையில் நிறுவப்பட்டது.

98) 1980 இல் தொலைத்தொடர்பு திணைக்களம் உருவாக்கப்பட்டது 1990 ரெலிகொம் என மாற்றப்பட்டது.
ஜப்பானியரால் நாடாளுமன்றம் ஜெயவர்தனபுரவில் நிர்மாணிக்கப்பட்டது.
இலங்கை கிரிக்கெட் அணிக்கு ரெஸ்ட் அந்தஸ்து வழங்கப்பட்டது.
1984 இல் முதலாவது ரெஸ்ற்கிறிக்கறி வெற்றியை இலங்கை பெற்றுக்கொண்டது.

99) 1985 இல் பிரேமதாச அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒக்ரோபர் முதல் திங்களில் சர்வதேச குடியுரிமை தினம் ஐ.நாவினால் பிரகடனப் படுத்தப்பட்டது.

100) 1985 இல் தேசிய கல்வி நிறுவகம் மகரகமவில் ஆரம்பிக்கப்பட்டது.

101) 1986 இல் மகாப்பொல புலமைப்பரிசில் திட்டம் ஆரம்பம்.

102) 1987 இல் இலங்கை இந்திய ஒப்பந்தம் யூலை 27 ஆம் திகதி ராஜீவ்காந்தி ஜெயவர்த்தனா ஆகியோர் கைச்சாத்திட்டு உருவாக்கினார் இந்தியப்படை இலங்கைக்கு வந்தது இதற்கு முன் 1971 இல் ஜெ வி பி பிரச்சினையைத் தீர்க்க இந்திய இராணுவம் வரவழைக்கப்பட்டது.

103) 1987 இல் தேசிய பாடாசாலை அமைப்பு உருவாக்கப்பட்டது.

104) 1988 இல் மாகாணசபைகள் நிர்வாகமுறை ஏற்படுத்தப்பட்டது கிராம சபை பட்டினசபை என்பனவற்றை இணைத்து பிரதேச சபை நிர்வாக முறை ஏற்படுத்தப்பட்டது.

105) 1988 இல் இலங்கை அரசின் அழைப்பை ஏற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இலங்கையில் இயங்குகின்றது.

106) 1990 மார்ச் 24 இல் இலங்கையை விட்டு இந்தியப்படை முற்றாக விலகியது
1990 இல் எம்.ஜி மெண்டிஸ் என்பவரின் வேண்டு கோளுக்கிணங்க ஒக்ரோபர் - 6 ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகின்றது இது கோஸ் ரார்க்காவில் நடைபெற்ற ஆசிரியர் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.
இலவச மதிய உணவு வழங்கும் திட்டம் ஆரம்பம்
கொத்மலை புதிய நகரம் ஆரம்பிக்கப்பட்டது.

107) 1991 இல் கொககல சுதந்திரவர்த்தக வலயம் பிரேமதாசாவால் ஆரம்பிக்கப்பட்டது.

108) 1992 இல் களனிப்பாலம் பிரேமதாசவால் அமைக்கப்பட்டது

109) 1992 இல் மே தினத்தில் ஏற்பட்ட குண்டுவெடிப்பில் பிரேமதாசாவால் கொல்லப்பட்டார்.

110) 1993 இல் சீருடை மாணவருக்கு வழங்கும் திட்டம் ஆரம்பம்

111) 1994 இல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவு செய்யப்பட்டார். இத் தேர்தலில் 62 சதவீத வாக்குகளுடன் தெரிவு செய்யப்பட்டார்.

112) 1995 . இல் இலங்கை கிரிக்கெட் அணி வெளிநாட்டில் 1 ஆவது ரெஸ்ட்வெற்றியை நியூசிலாந்தில் எதிராகப் பெற்றது.

113) 1996 - அமெரிக்காவின் அற்லாண்டிக்காவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிக்கு புஸ்மாலி ராமநாயக்கா எனும் பெண் முதன் முதலில் இலங்கைக்காக தலைமை வகித்துச் சென்றார்.
தேசிய இயற்கை அழிவு முகாமைத்துவ நிலையம் 1996 இல் நிறுவப்பட்டது.
மனித உரிமைகள் சட்டம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது.
இலவச உணவுத்திட்டம் நீக்கப்பட்டது.
உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை உலகச்சம்பியன் ஆனது.

114) 1997 இல் 5 அங்கத்தவர்களைக் கொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது இதன் ஆரம்பத்தலைவராக டி் எஸ் செனிவரத்ன நியமிக்கப்பட்டார்.
ஜெனஜெய எனும் பெயரில் சுயதொழில் செய்வோருக்கான ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

115) 1998 சார்க் அமைப்பின் 10 ஆவது உச்சிமகாநாடு கொழும்பில் நடைபெற்றது.
பொருட்கள் சேவைகள் வரி 12.5 ஆக அறவிடத் தீர்மானிக்கப்பட்டது.
இதற்கு முன்பிருந்த வரி நீக்கப்பட்டது.
வேடுவ இனத்தலைவர் திஸ்ஸகாமி 95 வயதில் இறந்தார்.
சிறுவர் உரிமைகள் ஆண்டாக இலங்கை அரசு அறிவித்தது.
ஐ.நா சபையில் இலங்கைக்கான நிரந்தர பிரதிநிதியாக ஜோன் டி சேரம் தெரிவு செய்யப்பட்டார்.

## கடந்த ஞாயிற்றுக்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமை வெளியான புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்களின் விடைகள்

1) தாவரங்கள் வளர்ச்சிக்கு / குடிப்பதற்கு/ உழவுத்தொழிலுக்கு/ மின் உற்பத்திக்கு
2) பொங்கும் / தங்க / மங்கள
3) உணவு/ பயிர் / மின்விளக்கு / அருவிகள் / நீர்
4) குன்று /வரை
5) ஏர்த்தொழில் / விவசாயம் / கமத்தொழில்
6) எங்கள்
7) கங்கை + அவள்
8) இலங்கையின் மிக நீளமான நதி
9) அணிந்துரை
10) வாசிப்பு ஒரு மனிதனை முழுமனிதனாக்கும்
11) சித்திரமும் கைப்பழக்கமும் செந்தமிழும் நாப்பழக்கமும்
12) சித்ரா பூப்பறித்து மாலை தொடுத்தாள்
13) i) வைத்தியசாலை ii) வானம்
iii) வானொலி
14) i) கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக
ii) என்னை மன்னிக்கவும்
iii) நல்வாழ்த்துக்கள்
15) அ) மெஹி என்ன ஆ) ஒயாகே நம மொகத

17) 1
18) 1
19) 1
20) 1
21) 1
22) 4
23) 1
24) 2
25) 4
26) 1
27) 3
28) 3
29) 2
30) 1
31) 2
32) 3

33) 3
34) 2
35) 3
36) 2
37) 4
38) 4
39) 4
40) 3
41) 3
42) 1
43) 3
44) A - ஒளிராது
B - ஒளிரும்
C- ஒளிராது
45) i) சதுரமுகி
ii) 12 iii) 8

46) 4.5 cm/ 4.6cm
47) 21000
48) 420ml
49) [1] [4]
50) 187.50
51) 12.00 மணி
52) i) வெண்டி
ii) லீக்ஸ்
iii) 150/=
iv) 20kg
v) 105
vi) கரட் 25, வெண்டி - 15, போஞ்சி -25, லீக்ஸ் -35, கோவா -20
53) 171 km
54) 104 km
55) கட்டுரை

# பழமைவாய்ந்த துறைமுகம் திருமலையில் கண்டுபிடிப்பு



திருகோணமலையில் பழமை வாய்ந்த துறைமுகம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சேருவில பிரதேசத்தில் சர்வதேச துறைமுகம் ஒன்று இயங்கி வந்தமைக்கான சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளது என களனி பல்கலைக் கழகத்தின் அகழ்வாராய்ச்சி பீட பொறுப்பாளர் டாக்டர் அனுர தந்திலகே தெரிவித்துள்ளார்.

இலங்கை அகழ்வாராய்ச்சித் திணைக்கள அதிகாரிகள் குறித்ததோடு அங்கு சீன நாட்டின் பீங்கான் பொருட்கள், வெளி நாட்டுக் கண்ணாடிகள், செப்புத் தகடுகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் துறைமுகம் கடந்த 8 ஆம் நூற்றாண்டு காலத்தில் அமைக்கப்பட்டிருக்கலாம் என வும இது தொடர்பான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவந்துள்ளது.

# மகாவலி கங்கையில் குறைகின்றது நீர்மட்டம்



மலையகப் பகுதியில் தொடர்ந்து நிலவிவரும் கடும் வறட்சியால் மகாவலி கங்கையில் நீர் மட்டம் குறைந்து வருகின்றது.

இதனால், மகாவலி கங்கையின் பெரும் பகுதி நீர் குறைந்து பாரிய கற்கள் தெரிவதாக தெரிவிக்கப்படுகின்றது. மேலும் பொல்கொல்லை அணைக்கட்டை அடுத்த பகுதிகளில் நீர் பாரியளவில் குறைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நம்பிக்கை நிதியத்தின் பொதுக்கூட்டம்

(முழங்காவில்)

பூநகரி பகிரங்க சேவை நம்பிக்கை நிதிய வருடாந்த பொதுக்கூட்டம் பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் நம்பிக்கை நிதியத்தலைவர் பொன். தில்லைநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது நிகழ்வில் முதன்மை விருந்தினராக பூநகரி பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலன் சிறப்பு விருந்தினர்களாக பிரதேச செயலக கணக்காளர் பி.பிரேமசந்திரன் உதவித்திட்ட மிடல் பணிப்பாளர் வி.சொக்கநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். பிரதேச ஓய்வூதியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (112)

# வாஸ்து நிபுணர்கள் நிறுவனத்தின் 32 ஆவது ஆண்டு விழா

இலங்கை வாஸ்து நிபுணர்கள் நிறுவனத்தின் 32ஆவது ஆண்டு விழா 2014 ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த புதன்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வாஸ்து விஞ்ஞாத்திற்கு பாரிய சேவை வழங்கிய நிறுவனத்தின் முன்னாள் தலைவர் மிகிந்து கீர்த்திரத்னவின் சேவையை பாராட்டி ஜனாதிபதி தங்கப்பதக்கம் அணிவித்தார்.

மேலும் வாஸ்து நிபுணர் சுரஞ்சித் டி சில்வாவிற்கு கௌரவ அங்கத்து வமும் ஜனாதிபதியினால் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ- பிரதி அமைச்சர் நந்தமித்ர ஏக்கநாயக்க- இலங்கை வாஸ்த்து நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் சித்திரா வெடிக்கார உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# செய்தி, செவ்வி ஊடகவியல் நூல்களின் வெளியீட்டு விழா



யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் பணிப்பாளரும், விரிவுரையாளருமான தேவநாயகம் தேவானந்தின் செய்தி மற்றும் செவ்வி ஊடகவியல் நூல்களின் வெளியீட்டு நிகழ்வு ஊடக வளங்கள் ப்யிற்சி மையத்தில் கடந்த புதன்கிழமை மாலை 3 மணியளவில் நடைபெற்றது.

இதன் போது நூலின் முதற்பிரதியை நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி வி.பி சிவநாதனிடம் இருந்து மூத்த பத்திரிகையாளரான கதிரவேலு பெற்றுக் கொண்டார்.

மேலும் இந்நிகழ்வில் ஊட.க வ.ாங்கள் பயிற்சி மைய இணைப்பாளரும் தமிழ்த்துறைத். தலைவருமான பேராசிரியர் எஸ். விசாகரூபனும் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

# தொலைபேசியில் ஆபாச படம் வைத்திருந்தவருக்கு ரூபா 2,5000 தண்டம், தொலைபேசி பறிமுதல்

கிளிநொச்சி அக்கராயன் குளம் பகுதியில் தொலைபேசியில் ஆபாசப் படக்காட்சிகளை வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு கிளிநொச்சி நீதிமன்றத்தில் நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது அவருக்கு ரூபா 2,500 அபராதம் விதித்து நீதவான் தீர்ப்பளித்துள்ளார்.

குறித்த நபர் கைத் தொலைபேசியில் ஆபாசப்படக் காட்சிகளை வைத்திருந்த குற்றசாட்டில் புதன்கிழமை கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தியபோது அவருக்கு ரூபா 2,500 பணம் அபராதமாக விதித்ததுடன், அவருடைய கைத்தொலைபேசியிலுள்ள காணொளியை அளித்து தொலைபேசியினை அரசுடமையாக்குமாறும் கிளிநொச்சி நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீன் உத்தரவிட்டுள்ளார்.

# உயர்நீதிமன்ற பதில் நீதியரசராக ஷிராணி திலகவர்த்தன பதவியேற்பு



உயர் நீதிமன்ற நீதிபதி ஷிராணி திலகவர்த்தன, உயர் நீதிமன்ற பதில் நீதியரசராக நேற்று முற்பகல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். அலரி மாளிகையில் நடைபெற்ற இந்த நிகழ்வில, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் கலந்துகொண்டார்.

# விளக்க மறியல்கள்

**கடமைக்கு இடையூறு**

கடல்வள நீரியல் வள உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்து தாக்க முற்பட்டமை தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சம்பநதப்பட்ட மூவரை அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்க வாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி நபர்கள் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டு பெருமளவு பணத்தை ஈட்டுவதாகவும் சாதாரண் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்கள் இதனால் பெரும் பாதிப்புக்குள்ளாவதாகவும் கடல்வள நீரியல் துறை அதிகாரிகள் மன்றில் தெரிவித்தனர்.

**பலாத்காரம்**

முல்லைத்தீவு முள்ளியவளை பகுதியில் தனது மைத்துனிமுறையான ஒருவரின் வீட்டுக்குள் புகுந்து காசு கேட்க வந்ததாக கூறி தனிமையில் இருந்த பெண்ணை பலாத்காரமாக வன்புணர்வுக்கு உட்படுத்திய நபர் ஒருவரை முள்ளியவள்ள பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண் சத்தமிட்ட வேளையில் அயலவர்களினால் அப்பெண் காப்பாற்றப்பட்டதுடன் சந்தேக நபரை பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.


இந்நபரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

**முதிரை வெட்டுதல்**

புதுக்குடியிருப்பு காட்டுப்பகுதியில் அனும்திப்பத்திரமின்றி பெருமளவு முதிரை மரங்களை வெட்டுவதில் ஈடுபட்ட இருவரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியவேளை அவ்விருவரையும் நாளை மறுதினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேலும் மூவரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பெறுமதியான பாலை முதிரை மரங்கள் நீதிமன்றின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (170)

# லம்போகினி கார் உருவாக்கி சீன விவசாயி சாதனை



சீனாவைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தனது பேரன் பாடசாலைக்குச்செல்வதற்காக 5 ஆயிரம் யுவான் (சுமார் ஒரு இலட்சம் ரூபா) செலவில் விலை உயர்ந்த உயர்ரக லம்போகினி காரின் மாதிரி ஒன்றினை உருவாக்கியுள்ளார்.

FX என்ற விவசாயியே இந்த மினி லம்போகினியை உருவாக்கியுள்ளார். இவர் சீனாவின் ஹினான மாகாணத்திலுள்ள ஷெங்சொயூ நகரைச் சேர்ந்தவர்.

6 மாதங்கள் செலவிட்டு தனது வீட்டிலேயே இக்காரினை உருவாக்கியுள்ளார். பின்செல்லும் கியர், முன் பின் கண்ணாடிகள், ஒலி எழுப்பி, இசை கேட்பதற்கான வசதி உட்பட லம்போர்கினியின் வடிவில் லம்போர்கினி சின்னத்துடன் இக்கார் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் மணிக்கு 90 கிலோ மீற்றர் வேகத்தில் செல்ல முடியுமாம்.

இது குறித்து விவசாயி FX கூறுகையில், இது எனது பேரனுக்கான ஒரு விளையாட்டுப்பொருள் மட்டுமே. ஆனால் இதில் எனது பேரனை பாடசாலைக்கு ஏற்றி ஓட்டிச்செல்ல முடியும். மின்சாரத்தில் இயக்கும் சைக்கிளை விட இது சிறப்பாக உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் சீன போக்குவரத்து சடத்தின்படி இக்காரினை வீதியில் செலுத்த முடியாது. விளையாட்டுக் காராக குடியிருப்பு பகுதி மற்றும் பூங்காக்களில் குறைந்த வேகத்தில் ஓட்ட முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# 3 சிறுமிகள் உயிரோடு எரித்துக் கொலை பதற்றத்துக்கு உள்ளாகியது ஆந்திரா



ஆந்திரா மாநிலம் நிசாமாபாத் அருகில் உள்ள ஒரு கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 சிறுமிகள் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டசம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருமண நிகழ்ச்சிக்காக வருகைதந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று குழந்தைகளான அகசயா வயது 9, சூரி வயது 6, குஷி வயது 4 ஆகியோரே உயிரோடு எரித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் சொந்த ஊருக்கு திருமண வீட்டுக்கு வந்த மூன்று சிறுமிகளும் வீட்டில் இருந்து சிறிது தூரத்தில் விளையாடிக் கொண் டிந்திருந்தனர். விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களை வெகு நேரமாகக் காணாததால் பெற்றோர் பதற்றமடைந்தனர். இதற்கிடையே, அந்த சிறுமிகளின் மாமா நரேந்திர ரெட்டி, நேற்றுமுன் தினம் இரவு 10.30 மணிக்கு போன் செய்து 40 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பாசர் என்கிற இடத்தில் தற்கொலை செய்யப்போவதாகத் தெரிவித்தார்

இதனையடுத்து பதற்றமடைந்த உறவினர்கள், காவல்துறையினரின் உதவியுடன் அந்த இடத்திற்கு விரைந்தனர். அங்கு அவரின் கடிகாரம் மற்றும் செருப்புகள் ஒரு பாலத்தின் அருகில் கிடந்ததைப் கண்டனர். காணாமற்போன சிறுமிகள் மூவரும் ஊரைவிட்டு சில கிலோ மீற்றர் தொலைவில் உடல் கருகிய நிலையில் இறந்து கிடந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களின் உடல்கள் அருகே பெற்றோல் போத்தல்கள் இருந்தன. இதனால் அவர்கள் எரித்து கொலை செய்யப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டது.

கொல்லப்பட்ட மூன்று சிறுமிகளையும் நேற்றுமுன்தினம் மதியம் நரேந்திர ரெட்டி தனது காரில் அழைத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது. எனவே, அவர் தான் சிறுமிகளை கொலை செய்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. ஆனால், குடும்பத்தில் எந்தப்பிரச்சினையும் இல்லாதபோது, அவர்கள் எதற்காக கொலை செய்யப்பட்டார்கள் என்பது தெரியவில்லை என உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடாத்தி வருகின்றனர். திருமண நிகழ்ச்சிக்கு வந்த இடத்தில் 3 சிறுமிகள் எரித்துக் கொல்லப்பட்ட சம்பவம் அந்தப் பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# ஜனாதிபதிக்கு எதிரான போராட்டத்தில் தீக்கிரையானது உக்ரைன் கட்டடங்கள்

## பொலிஸார் மீது பெற்றோல் குண்டு வீச்சு



உக்ரைனில் ஜனாதிபதிக்கு எதிரான போராட்டம், காவல் துறையின் அடக்குமுறையால் வன்முறைச்சம்பவங்களாக மாறி வருகின்றது. உக்ரைனின் ஜனாதிபதி விக்டர் யானுகோ விச் பதவி விலகக்கோரி, கடந்த நவம்பர் மாதம் முதல் எதிர்க்கட்சியினர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சில நாட்களுக்கு முன் தலைநகர் கீவ்வில் உள்ள சுதந்திர சதுக்கத்தைக் கைப்பற்ற சுமார் 20 ஆயிரம் பேர் ஒன்று திரண்டுள்ளனர்.

அவர்களைத் தடுக்க முயன்ற காவல்துறையினருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையில் கடும் மோதல் ஏற்பட்டது. அவர்களை நோக்கி காவல்துறையினர் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும், துப்பாக்கியால் சுட்டும் அப்புறப்படுத்த முயற்சித்தனர்.

இந்நிலையில் போராட்டக்காரர்கள் காவல்துறையினர் மீது பெற்றோல் குண்டுகளை வீசித் தாக்குதல் நடாத்தியதில், நகரில் உள்ள பல கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இந்தத் தாக்குதலில் 7 பொலிஸார் உட்பட 25 பேர் பலியானதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் தற்போது பலியானோரின் எண்ணிக்கை 75 ஆக உயர்ந்துள்ளது, இன்னும் பலர் மருத்துவமனையில் தீவிர காயங்களுடன் சிகிச்சை பெற்று வருவதால் பலியானோரின் எணணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

# வெனிசுலா அதிபரை எதிர்த்துப் போராட்டம் தூரிஸ்மோ அழகி சுட்டுக்கொலை





தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் அதிபர் நிகோலஸ மதுரோவை எதிர்த்து எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். கலவரத்தை நிறுத்தி விட்டதாக சில நாட்களுக்கு முன் கூறி எதிர்க்கட்சி தலைவர் லியோ போல்டோ லோபஸ் சிறையில் அடைக்கப்பட்டார். நேற்றுமுன்தினம் அவர் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். அப்போது தன் மீதான குற்றச்சாட்டை சந்திக்க தயார் என்றும் அதிபர் மதுரோவின் சோசலிஸ்ட் கொள்கையை எதிர்த்துப் போராட வேண்டும் என்றும் அவர் கூறினார். இதனால் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் போராட்டம் பரவி வருகிறது.

நேற்றுமுன்தினம் வெனிசுலாவின் வடக்கு பகுதியில் வாலென்சியா என்ற இடத்தில் ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் காராபோபோ மாகாணம் தூரிஸ்மோ அழகியான 22 வயது ஜெனிசில் கர்மோனா பங்கேற்றார்.

அப்போது அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம மனிதன் ஆர்ப் பாட்டக்காரர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டார். இதில் அழகி ஜெனிசிஸ் தலையில் குண்டு பாய்ந்து இரத்த வெள்ளத்தில் கிடந்த அவரை மற்றொரு மோட்டார் சைக்கிளில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

பலியான ஜெனிசிஸ் கடந்த 2013ஆம் ஆண்டு கரபோபோ மாகாணம் தூரிஸ்மோ அழகியாக தேர்ந்து எடுக்கப்பட்டார். அழகி ஜெனிசிஸ் சுற்றுலா பற்றிய பட்டப் படிப்பு படித்து வந்தார்.

உலகச் செய்திகள்

# அமெரிக்காவில் விருப்பநாடுகள் தேர்வு 72 சதவீத வாக்குப்பெற்றது இந்தியா

அமெரிக்காவில் ஒவ்வொரு ஆண்டும் தங்களுக்கு விருப்பமான நாடுகள் குறித்து அந்நாட்டு மக்களிடம் கணக்கெடுப்பு நடாத்தப்பட்டு வருவது வழக்கம். அதுபோல் இந்தாண்டும் கணக்கெடுப்பு நடைபெற்றது. இந்தக் கணக்கெடுப்பில் இந்தியாவை விருப்ப நாடாக 72 சதவீத மக்கள் தேர்வு செய்துள்ளனர்.இது கடந்த ஆண்டை காட்டிலும் 4 சதவீத அளவு அதிகமாகும். அதேநேரத்தில் பாகிஸ்தானை விருப்ப நாடாக தேர்வு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை 17 சதவீதமாகும்.

இந்தக் கருத்துக்கணிப்பு 50 அமெரிக்க மாநிலங்களில் வாழும் 18 வயதுக்கு மேற்பட்ட சுமார் ஆயிரத்து 23 பேர்களிடம் நடாத்தப்பட்டது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம் திகதி இந்திய தூதரக அதிகாரி தேவ்யானி கோப்ரகாடே கைது விவகாரத்திற்கு பின்னர் கருத்துக்கணிப்பு நடாத்தப்பட்டது. தேவ்யானி கோப்ரகாடே தனது வீட்டு வேலைக்காரி யின்விசா விண்ணப்பத்தில் நிரப்பப்பட்ட தவறான தகவல்கள் காரணமாக அமெரிக்க போலிஸாரால் கைது செய்யப்பட்டார். இதனால்இரு நாடுகளிடையேயான உறவில் விரிசல் ஏற்படும் நிலை உருவானது. இருப்பினும் அமெரிக்கர்கள் தங்களது விருப்ப நாடாக இந்தியாவை தேர்வு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

வெளிநாடுகளை விரும்பும் வரிசையில் கனடா நாட்டை 93 சதவீதம் பேர் தேர்வு செய்துள்ளனர். தொடர்ந்து இங்கிலாந்து 90 சதம், ஜேர்மனி 81 சதம், ஜப்பான் 80 சதம், பிரான்ஸ் 78 சதம் தென் கொரியா 64 சதவீதம் மக்கள்விருப்ப நாடாக தேர்வு செய்துள்ளனர்.

# 20 கி.மீ. பரப்பளவில் வைஃபை மண்டலம் சீனாவை தோற்கடித்தது பீகார் மாநிலம்

உலகிலேயே 20 கிலோமீற்றர் பரப்பளவில் இலவச வை.்.பை மண்டலத்தை உருவாக்கி உலக சாதனை படைத்துள்ளது பீகார். பின்தங்கிய மாநிலம் என்று பெயர் பெற்றிருந்த பீகார் தற்போது உயர்ந்த அளவில் சாதனை படைத்துள்ளது.

இனிமேல் பாட்னாவின் என்ஜடி கல்வி நிறுவனத்தில் இருந்து தானாபூர் பகுதி வரை கிட்டத்தட்ட 20 கிலோமீற்றர் பரப்பளவில் வசிக்கும் மக்கள் எவ்வித தடையுமின்றி, வை.்.பை வசதியை எவ்வித கட்டணமும் இன்றி அனுபவிக்கலாம் என தெரியவந்துள்ளது.

இன்ரர்நெற் தகவல் மையத்தை திறந்து வைத்த முதல்வர் நிதிஷ் குமார் இந்த இலவச 'வை.்.பை' வசதியையும் ஆரம்பித்து வைத்தார். பல பகுதிகளில் இந்த 'வை.்.பை' வசதியை கொண்டு 100 கண்காணிப்பு புகைப்படக் கருவிகளைப் பொருத்தும் திட்டத்தையும் அவர் ஆரம்பித்து வைத்தார்.

விழாவில் பேசிய நிதிஷ் ராஜ்கிர் பகுதியில் 200 ஏக்கர் பரப்பில் தகவல் தொழில்நுட்ப நகரம் அமைக்கும் திட்டம் செயற்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

இதுவரை சீனா 3.5 கிலோமீற்றர் பரப்பளவில் இலவச 'வை.்.பை' மண்டலத்தை உருவாக்கியிருந்தது. ஆனால் தற்போது 20 கிலோமீற்றர் பரப்பளவில் 'வை.்.பை' மண்டலத்தை உருவாக்கி பீகார் சாதனை படைத்துள்ளது .

இதன்மூலம் வை.்.பை மண்டலத்துக்கு உட்பட்ட 11 முக்கிய சாலைகளில் எந்த வாகனம் சென்றாலும், அதன் எண்ணை துல்லியமாக கண்காணிப்பு புகைப்படம் மூலம் குறிப்பிட்ட வாகனம் எங்கெல்லாம் செல்கிறது என்பதை அவதானிக்க முடியும் என்றார்.

### இரணைமடு – யாழ். குடிநீர் விநியோகம்

# வடமாகாண சபை நிபுணர் குழு அறிக்கை விரோதமாக இருந்தால் போராட்டம்

## இரணைமடு கமக்காரர் சம்மேளனம் அறிவிப்பு

வடமாகாண சபையினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை எமது நிலைப்பாட்டுக்கு விரோதமாக இருந்தால் எங்களுடைய வாழ்வுக்காக உச்சக்கட்ட, சாத்வீகமான, உறுதியான போராட்டத்தில் குதிப்போம் என்று இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனச் செயலாளர் எம்.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நீர் கொண்டு வருதல் தொடர்பான ஊடகவியலாளர் சந்திபொன்று நேற்றைய தினம் யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்றது. இதில் கருத்துதெரிவிக்கும் போதே சம்மேளனச் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய நிலையில் வறட்சி காரணமாக எங்களுடைய அரிசியை நாமே உண்ண முடியாத நிலைமை காணப்படுகின்றது. சராசரி ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை வறட்சிக் கால நிலை காணப்படுகின்றது.

பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் என்பது தொடரும் அபாய நிலையிலுள்ளமையால் விவசாய சமூகம் சார்ந்து இதனைச் சிந்திக்காது எதேச்சதிகாரத்தனமாக யோசிப்பதனை சம்பந்தப்பட்டவர்கள் கைவிட வேண்டும்.

இரணைமடு குடிநீர்த்திட்டம் தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் மிகத் தெளிவாக தெரிவித்திருந்தோம். அவர் எம்மிடம் கருத்துத் தெரிவிக்கும்போது, இரணைமடு விடயம் தொடர்பில் முடிவெடுப்பதற்காக நிபுணர் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் நிபுணர்குழுவின் அறிக்கையின் அடிப்படையிலேயே நீர் விவகாரம் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

குறித்த நிபுணர்குழு இது தொடர்பான அறிக்கை களை வடமாகாண சபையிடம் ஒப்படைத்திருப்பதாக நாம் அறிகின்றோம். இந்நிலையில் குறித்த அறிக்கையின் பிரதியினை நாங்கள் பார்வையிடுவதற்கு கோரியிருக்கின்றோம். எனினும், இதுவரையில் அது எங்களிடம் கையளிக்கப்படவில்லை.

இரணைமடு தொடர்பிலான ஆசிய அபிவிருத்தி வங்கியுடனான ஒப்பந்தமும் கிளிநொச்சி விவசாயிகளாகிய எம்மிடம் கலந்தாலோசிக்கப்படாமலேயே கைச்சாத்திடப்பட்டுள்ளது என்பதனை நாம் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இரணைமடு - யாழ். நீர் விநியோகத்திட்டம் தொடர்பில் எந்தவொரு ஆய்வுகளும் மேற்கொள்ளாமல் பொய்யான முன்மொழிவுகளினை வைத்து ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இருபதாயிரம் மில்லியன் ரூபா கடன் திட்டத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இரணைமடு-யாழ். நீர் விநியோகத்திட்டம் கொண்டு செல்வது தொடர்பில் விவசாய சமூகத்திற்கு எதுவித பிரச்சனைகளும் இல்லையென்றும் அவர்கள் பற்றி ஆய்வு செய்ய தேவையில்லையென்றும் எல்லாக்காலமும் இரணைமடுவில் இருந்து தொடர்ந்து நீர் வழங்கப்படும் எனவும் சிறுபோக நெற்செய்கையை மாற்றி உபஉணவுச் செய்கைக்கு மாற்றும் திட்டம் முன்வைக்கப் பட்டு நீர் கணக்கிடப்பட்டு இத்திட்டம் செயற்படுத்தப்படுமென ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு உறுதி மொழிகள் வழங்கப்பட் டுள்ளன. ஆனால் இது பற்றி சம்பந்தப்பட்ட எவரும் வாய் திறக்காமல் உள்ளார்கள்.

இங்கு நீர்ப்பாசனத் திணைக்களமும், நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்கள். இந்த உடன்படிக்கையில் 13 அம்சங்கள் உள்வாங்கப்பட் டுள்ளன. இவற்றில் விவசாயி கள் நலன் சார்ந்த விடயங்கள் இடம்பெறவில்லை.

இதில் 9 இற்கும் மேற்பட்ட அம்சங்கள் எமக்கு பாதகமாகவே உள்ளன. இவை திருத்தப்படுவதாக கூறியும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு வழங்கிய உறுதி மொழிகளால் இன்று வரை இவை திருத்தப்படாமல் உள்ளன.

இதுவரையில் இத்திட்டம் சார்ந்த எதுவித கருத்துக்களையும் நீர்ப்பாசனத்திணைக்களம் சார்ந்த எவரும் கூறவில்லை. ஏனெனில் இதனால் விவசாய சமூகத்திற்கு பாரிய பாதிப்பு உள்ளது என்பது அவர்களுக்குத் தெரியும்.

இத்திட்டத்தால் விவசாயிகளாகிய எமக்குப் பாரிய பிரச்சனைகள் ஏற்படும். குறிப்பாக ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட வயல் நிலங்கள் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் இணைக்க வேண்டி உள்ளது. 1936ஆம் ஆண்டளவில் அப்பகுதியில் குடியேற்றப்பட்ட மக்களின் காணிகள் தற்போது சிறுதுண்டுகளாக உள்ள நிலையில் சிறு விவசாயிகளுக்கு 100 வீதம் பங்குரிமை கிடைக்கவேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடக சந்திப்பில் இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளன தலைவர் செ.சிவப்பிரகாசம், உப தலைவர் சு.கணபதிப் பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(இ,25)

## விருது பெற்ற நாடகம் வீரசிங்கம் மண்டபத்தில்




(யாழ்ப்பாணம்)

ஷோன் போல் சாத்றேவின் (Men Without Shadows) நாடகத்தின் சிங்கள வடிவமான 'தவல பீஷண' நாடகம் நாளை பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தர்மசிறி பண்டாரநாயக்கவின் நெறியாள்கையில் உருவான இந்நாடகம் இந்தியாவின் புதுடில்லி பாரத் ரங்க் மஹோத்சவ் சர்வதேச நாடக விழாவில் 2013 ஆம் ஆண்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்ததும் 1988 ஆம் ஆண்டில் அரச நாடக விழாவில் 10 விருதுகளைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

## யாழ்.நகரப் பகுதியில் ஆட்டோக்கள் பணிப்புறக்கணிப்பு

யாழ். நகர்ப்பகுதியில் சேவையில் ஈடுபட்டு வரும் முச்சக்கர வண்டிகள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டன.

யாழ். மின்சார நிலைய வீதி மற்றும் வைரவர் ஆலய முன்றலில் உள்ள முச்சக்கரவண்டி உரிமையாளர்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். சத்திரத்து சந்தி ஆட்டோ தரிப்பிடத்தில் சேவையாற்றிய முச்சக்கரவண்டி சாரதி கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக தரிப்பிடக் கட்டுப்பாட்டினை மீறி ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்களை கூறியும் யாழ். மின்சார நிலைய வீதியில் தமது உறவினர் ஒருவரின் வர்த்தக நிலையத்திற்கு முன்பாக முச்சக்கர வண்டியைத் தரித்து அத்துமீறி சேவையில் ஈடுபட்டு வருகின்றார்.

அவரை அத்துமீறிய சேவையில் ஈடுபட வேண்டாமென கூறிய நிலையில், அவர் அடியாட்களை அழைத்து வந்து அச்சுறுத்தியதை கண்டித்தும், நேற்றுக் காலை 10.30 மணிமுதல் சுமார் ஒரு மணித்தியாலங்களுக்கு மேலாக தமது பணிப்புறக்கணிப்பினை மேற்கொண்டனர்.

அந்தப் பணிப்புறக்கணிப்பின் போது, ஆர்ப்பாட்ட இடத்திற்கு வருகை தந்த யாழ். போக்குவரத்துப் பொலிஸார் வாகனங்களை அப்புறப்படுத்துமாறு முச்சக்கரவண்டி உரிமையாளர்களுக்குத் தெரிவித்தனர்.

அதனை தாண்டியும் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் தமது பணிப்புறக்கணிப்பினை முன்னெடுத்தனர்.

பணிப்புறக்கணிப்பினையடுத்து இரு தரப்பினரிடமும் யாழ் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் இணக்கப்பாடு காணப்பட்டதையடுத்து பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டது.

(25)

## இந்திய மீனவரின்...

வள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சு பற்றிய ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்திய மீனவரின் அத்துமீறல் தொடர்பாக கூட்டமைப்பினர் தங்களுடைய அரசியல் இலாபங்களுக்காக, தமிழக அரசியல்வாதிகளின் அனுதாபிகளாக இருந்து கொண்டு தான் இவ்விடயத்தைக் கையாளுகின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு வாக்களித்த பல்லாயிரக்கணக்கான கடற்றொழிலாளர்களுக்கு அவர்கள் துரோகமிழைக்கின்றார்கள். ஏனென்றால், அவர்கள் இவ்விடயம் தொடர்பில் நேரடியாக தமிழக அரசியல்வாதிகளிடம் பேசுவதில்லை இந்திய மத்திய அரசிடம் பேசுவதில்லை.

கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடம், நீங்கள் டில்லிக்குச் செல்கின்றீர்கள் தமிழ் நாட்டுக்குச் செல்கின்றீர்கள். ஏன் நீங்கள் எங்களுடைய கடற்றொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பாக அங்குள்ள அரசி யல்வாதிகளிடம் கதைப்பதில்லை? என்று வடபகுதி கடற்றொழில் அமைப்புக்கள் எங்கள் முன்னிலையில் கேள்வியெழுப்பின. தமிழ் தேசியக்கூட்டமைப்பினர் இவ் விடயம் தொடர்பில் எப்பொழுதும் மௌனத்தையே கடைப் பிடிக்கின்றார்கள்.

எமது கடற்பிரதேசத்தை இந்திய மீனவர்கள் குறிப்பாக, தென்னிந்திய மீனவர்கள் ஆக்கிரமிப்பதைத் தடுப்பதற்காக, கடற்றொழில், நீரக வள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத்ன பல வழிகளிலும் பல்வேறு முயற்சிகளை கடந்த சில மாதங்களாக மேற்கொண்டு வருவதையிட்டு, நான் அவரைப் பாராட்டுகின்றேன். தமிழக - இலங்கை மீனவப் பிரதிநிதிகளுக்கிடையில் அண்மையில் சென்னையிலே பேச்சுவார்த்தையொன்று இடம்பெற்றது. அதில் சுமுக உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக நான் அறிகின்றேன். இப்பிரச்சினை தொடர்பில் நாங்கள் நிரந்தரத் தீர்வொன்றினை பெற்றாகவேண்டும். ஏனெனில், இப்பிரச்சினையானது எங்களுடைய மக்களுடைய குறிப்பாக, தமிழ் மீனவர்களுடைய வாழ்வாதாரத்தை தினமும் பாதிக்கின்ற ஒரு விடயமாக இருக்கின்றது. எமது மீனவர்களுடைய பெறுமதியான மீன்பிடி வலைகள் தமிழக மீனவர்களுடைய ஆக்கிரமிப்பினால் தினமும் அழிவடைகின்றன. எமது அரசாங்கமானது பெறுமதி மிக்க ஏராளமான வலைகளை எமது மீனவர்களுக்கு வாழ்வாதார உதவியாக வழங்கியிருக்கின்றது. இவ்வலைகளெல்லாம் தமிழக மீனவர்களுடைய bottom trawling மூலம் தினமும் அழிக்கப்பட்டுக் கொண்டிருக் கின்றன.

இது ஒரு சில கடற்றொழிலாளர்களின் பிரச்சினையல்ல. மாறாக, பல்லாயிரக்கணக்கான கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை. எனவே, நாங்கள் அனைவரும் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால், இவ்விடயம் தொடர்பில் ஒரே குரலாக ஒலிக்கவேண்டும் என்பதுதான் முக்கியமானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இவ் விடயத்தில் எந்தக் கருத்தையும் இதுவரை முன்வைக்கவில்லை என்பதை நான் இங்கு வருத்தத்துடன் தெரிவிக்க விரும்புகின்றேன். அவர்கள் தங்களுடைய அரசியல் இலாபங்களுக்காக, தமிழக அரசியல்வாதிகளின் அனுதாபிகளாக இருந்து கொண்டுதான் இவ்விடயத்தைக் கையாளுகின்றார்கள் என்றே நான் நினைக்கின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு வாக்களித்த பல்லாயிரக்கணக்கான கடற்றொழிலாளர்களுக்கு துரோகமிழைக்கின்றார்கள் என்று தான் நான் சொல்லுவேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## அமைதியாக...

முன்னால் தொடர்ந்தும் வாயை மூடிக் கொண்டிருக்க முடியாது எனவும் சிங்களவர்கள் அதளபாதாளத்தில் விழுந்து கிடந்தாலும் நாட்டின் தலைவர்கள் அது பற்றிக் கவனத்தில் எடுப்பதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

நாட்டின் மேல் மட்டத்தில் முறையிட்டதும் சில வீண்பேச்சு மன்னர்கள் எம்மை ஒதுக்கி வைக்க முயற்சித்தனர். நாட்டில் நடக்கும் அநீதிகளை பேசினால் ஜெனிவாவில் நாங்கள் தோற்று விடுவோம் என்கின்றனர்.

நாட்டில் இன்று நடப்ப வைகள் இவர்களின் கண்களுக்கு புலப்படாது. வாக்கும், தேர்தலும் மட்டுமே இவர்களுக்கு தேவைப்படுகிறது.

இறுதியில் பொதுபல சேனாவின் செயற்பாடுகள் காரணமாகவே ஜெனிவாவில் தோல்வி ஏற்பட்டது எனக் கூறத் தொடங்கினர் என்றார்.

## மன்னார்...

சங்களின் மொத்த எண்ணிக்கை 77 ஆகும். இதேவேளை, ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட 9 எலும்புக் கூடுகளை நேற்றைய தினம் மீட்டு பொதி செய்து மன்னார் நீதவானின் உத்தரவுக்கமைய மன்னார் பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டன. இது வரையில் 69 மனித எலும்புக்கூடுகள் மற்றும் எச்சங்கள் மன்னார் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி மனிதப் புதைகுழியை மேலும் விரிவுபடுத்தும் முகமாக அருகிலுள்ள பற்றைகள் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி மனிதப் புதைகுழி 29ஆவது தடவையாக இன்று மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் தோண்டப்படவுள்ளது.

## இலங்கை...

ஒற்றுமையாக வாழலாம். நமது சமூகம் ஆங்கில மொழிக்கு முக்கியத்துவம் வழங்குவதனைப் போன்று தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். இந்நாட்டில் சிங்கள மொழி மாத்திரமின்றி தமிழ் மொழியும் தாய் மொழியாகும். எனவே இந்நாட்டில் இரண்டு தாய் மொழிகள் காணப்படுகின்றன. ஆகவே மொழியினூடாகவே சமூக மாற்றத்தினை வித்திட முடியும் என்றார்.

## தென்னாபிரிக்கா...

இதேவேளை, அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான அரசகுழு தென் னாபிரிக்கா சென்றுள்ளதுடன் அந்நாட்டின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் அரசாங்கத்துடனும் ஆபிரிக்க தேசிய காங்கிரசுடனும் கலந்துரையாடி வருகின்றனர்.

## படகில் ஆஸி.செல்லாதீர்; யாழ்.நகரில் துண்டுப்பிரசுரங்கள்



(யாழ்ப்பாணம்)

ஆட்கடத்தல்காரர்களின் பொய்களுக்கு ஏமாந்து நீங்கள் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பணத்தை வீணாக்க வேண்டாம் என்ற தலைப்பிலான துண்டுப்பிரசுரங்கள் யாழ். நகரில் வழங்கப்படுகின்றன.

விசா இல்லாமல் படகு மூலம் அவுஸ்ரேலியாவுக்கு செல்லும் பயணிகளை விழிப்பூட்டும் நடவடிக்கையாக இத்துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்படுகின்றது.

இதில் விசா இல்லாமல் படகில் ஏறும் நீங்கள் அவுஸ்ரேலியாவைச் சென்றடைய மாட்டீர்கள் குடும்பத்தினர் சிறுவர்கள் ஆதரவற்ற பிள்ளைகள் கல்வித்தகைமை கொண்டவர்கள் அல்லது விசேட தகுதியுடையோர் அனைவருக்கும் இச்சட்டம் பொருந்தும்.

நீங்கள் யாராக இருந்தாலும் எங்கிருந்து வந்தாலும் அவுஸ்ரேலியாவில் குடியமர முடியாது. போன்ற வாசகங்களுடன் இவ் விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்படுகின்றன.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உருளைக்கிழங்கு விவசாயிகள் சம்மேளனத்துடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தனிம் மாலை 6.30 மணியளவில் யாழ். கிறீன்கிறாஸ் விடுதியில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலுக்கு கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக பிரதி அமைச்சர் ஹேமல் குணசேகர, வடமாகாணசபை உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் வட மாகாண விவசாய அபிவிருத்தி அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் யாழ். மாவட்ட விவசாயிகளின் உற்பத்தி பொருட்களின் கொள்வனவு தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

## வெனிசுலா போல இலங்கையையும் சீர்குலைக்க அமெரிக்கா முயற்சி

### அமைச்சர் வீரவன்ச குற்றச்சாட்டு

(கொழும்பு)

வெனிசுலாவில் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ தலைமையிலான அரசாங்கத்தை சீர்குலைக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா செயற்பட்டு வருகின்றது.

அதேபோன்ற ஒரு நிலைமையையே எமது அரசாங்கமும், யுத்தம் இடம்பெற்ற பகுதிகளிலிருந்து எதிர்நோக்கி வருவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வெனிசுலாவின் அரசாங்கத்தை நிலை குலையச் செய்து நாட்டை ஸ்திரமற்ற நிலைக்கு கொண்டு செல்லும் வகையில் உள்நாட்டு கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா நிதியுதவியை அளித்து வருகின்றது. அமெரிக்கா பல்வேறு நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிட்டு வருகின்றது. இதில் அண்மைய தலையீடு வெனிசுலா ஆகும்.

வெனிசுலா ஜனாதிபதியாக மதுரோ இருப்பதனை அமெரிக்கா எதிர்க்கிறது. வெனிசுலாவின் புதிய நிர்வூகம் மனித உரிமை விடயத்தில் சரியாக நடக்கவில்லையென அமெரிக்கா குற்றம் சுமத்துகிறது. எனவே அமெரிக்காவின் இரட்டை நிலைப்பாடு தொடர்பாக கண் கண்ட சாட்சியாக நாம் உள்ளோம். ஒன்றுபட்ட நாடுகளை அமெரிக்காவின் புலானாய்வுப் பிரிவு வெடிக்கவைக்கிறது.

இதேபோன்று ஒரு நிலைப்பாட்டையே இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 25 ஆவது அமர்வில் முன்வைப்பதற்கு அமெரிக்கா தயாராகிறது. எனினும் ராஜபக்ஷ அரசாங்கத்தை அமெரிக்காவால் ஒன்றும் செய்ய முடியாது.

வெனிசுலாவில் சட்டவிரோதச்செயற்பாடுகளில் ஈடுபட்டதற்காக மதுரோவின் அரசாங்கம் அமெரிக்க இராஜதந்திரிகள் மூவர் மீது குற்றம் சாட்டியுள்ளதுடன் அவர்களை நாட்டை விட்டும் வெளியேற்றியுள்ளது. வெனிசுலாவின் இந்த நடவடிக்கையை நாம் வரவேற்கிறோம்.

இவ்வாறான நாடுகளை அமெரிக்கா குறிவைக்கிறது. எனவே இவ்வாறான நாடுகள் மேற்குலகின் அச்சுறுத்தலுக்கு எதிராக ஒன்றிணைவது அவசியமென அவர் மேலும் தெரிவித்தார்.

## போதைப் பொருள் சம்பவங்கள் குறித்து அரசாங்கத்துக்கு எதிராக ஐ.தே.க. நம்பிக்கையில்லா பிரேனை

அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளது.

நாட்டில் இடம்பெற்று வரும் போதைப் பொருள் சம்பவங்கள் தொடர்பில் இவ்வாறு நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் நம்பிக்கை இல்லாப் பிரேரணை நிறைவேற்றும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்த யோசனை நாடாளுமன்ற செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டதாக கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். அண்மையில் பாரியளவிலான போதைப் பொருட்கள மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொள்கலன்களில் போதைப் பொருள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. போதைப் பொருள் வர்த்தக நடவடிக்கைகளின் கேந்திர நிலையமாக இலங்கை செயற்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 500 ரூபா நாணயத் தாள்; அவதானம் தேவை

(கொழும்பு)

x/25 524376 என்ற இலக்கம் கொண்ட 500 ரூபா நாணயத்தாள்கள் குறித்து பொதுமக்களை அவதான மாக இருக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

கொழும்பு குற்றப்பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விஷேட சுற்றிவளைப்பு தேடுதலின் போது 2 இலட்சத்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியான 500 ரூபா போலி நாணயத் தாள்கள் 530 ஐ வைத்திருந்த ஒருவரை பியகம பிரதேசத்தில் வைத்து கைது செய்தததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் மேற்கொணட விசாரணைகளின் போது 500 ரூபா போலி நாணயத்தாள்கள் ஆயிரத்து 800 அச்சடிக்கப்பட்டுள்ளதாவும் அதன் பெறுமதி 9 இலட்சம் ரூபா என்றும் தெரிய வந்துள்ளது.

அவ்வாறான நாணயத்தாள்கள் புழக்கத்தில் விடப்பட்டமையால் மக்கள் அவதானமாக இருக்குமாறு தங்களுடைய கைகளுக்கு வரும் 500 ரூபா தாள்கள் போலியானதாக இருப்பின் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறையிடுமாறும் பொலிஸாரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## “புகை வாழ்க்கைக்கு பகை” தெல்லிப்பழையில் ஊர்வலம்

(தெல்லிப்பழை)

“புகை எமது வாழ்க்கைக்கு பகை” என்ற தொனிப்பொருளில் பல்வேறு சுலோகங்களையும் தாங்கியவாறு ஊர்வலம் ஒன்று நேற்றைய தினம் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்திற்கு முன்னாள் உள்ள தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இருந்து ஆரம்பமாகி சுன்னாகம் வரை சென்றடைந்தது.

இந்த விழிப்புணர்வு ஊர்வலத்தை யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் க.கேதீஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

சுகாதார அமைச்சின் 101 நாள் வேலைத்திட்டதின் கீழ்



தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, உடுவில் பிரதேச சுகாதார வைத்தியதிகாரி பிரிவு, தெல்லிப்பளை உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுகள், வலி.தெற்கு, வலி. வடக்கு பிரதேச சபைகள் ஆகியோரின் இணைந்த ஏற்பாட்டில் இந்த விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது.

இந்த ஊர்வலத்தில் சுகாதார வைத்திய அதிகாரிகளான அ. ஜெயக்குமாரன், எஸ்.நந்தகுமார் ஆகியோரும் வடமாகாண சபையின் சுகாதார அமைச்சரின் பிரதிநிதி, வடமாகாண சபை உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன், வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ் வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன், சுகாதார பரிசோதகர்கள், மருத்துவ மாதுக்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கிளிநொச்சி சந்தையில் அறுவரைப்பதம்பார்த்த பூனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, கரைச்சி பொதுச்சந்தையில் பூனையொன்று பொதுமக்கள் அறுவரைக் கடித்துள்ளதாக வர்த்தகர்களும் பொதுமக்களும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது கிளிநொச்சி பொதுச் சந்தையில் கடந்த ஒரு சில தினங்களில் மட்டும் சந்தையில் உள்ள பூனை ஒன்று பொருட்களை கொள்வனவு செய்ய வருகின்ற பொது மக்களை தீடிரென பாய்ந்து கடித்து காயத்தை ஏற்படுத்தி தப்பிச் சென்றுவிடுகின்றது அந்த வகையில் ஒரு சில தினங்களில் மட்டும் குறித்த பூனை ஆறு பொதுமக்களை கடித்துள்ளது.

இதில் சிலர் இரத்தம் சிந்துமளவுக்கு காயங்களுக்கு உள்ளாகி கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று சென்றுள்ளனர். குறித்த பூனையை பிடிப்பதற்கோ அல்லது கொலைசெய்வதற்கோ வர்த்தகர்கள் முயன்ற போது தப்பித்து சென்றுவிடுவதாகவும் சில மணிநேரங்களின் பின்னர் மீண்டும் சந்தைக்குள் உட்பிரவேசித்து திரிவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்தையில் கட்டக்காலி நாய்கள், பூனைகள் என்பன அதிகமாக காணப்படுவதாகவும் இவைகள் சந்தைக்கு வருகின்ற பொதுமக்களுக்கு பல்வேறு வழியில இடையூறுகளை ஏற்படுத்துவதாகவும் வர்த்தகர்கள் குறிப்பிடுகின்றனர். எனவே மேலும் பொது மக்களை கடித்து ஆபத்தை ஏற்படுத்த முன்னர் குறித்த பூனை மற்றும் கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த உரிய தரப்பினர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (29)

## கொழும்புத் துறைமுகத்தில் ஆஸி. கடற்படைக் கப்பல்

(கொழும்பு)

நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டு அவுஸ்ரேலியக் கடற்படைக்கப்பலான எச்.எம்.எ.எஸ்.மெல்போர்ன் நேற்றையதினம் கொழும்புத் துறைமுகைத்தை வந்தடைந்தது.

இவ்வாறு வந்த கப்பலை கடற்படையினர் வரேவேற்றனர். மெல்போர்னில் கொமாண்டர் பி.ஜே.சிலிஜெல்லை இலங்கைக் கடற்படையின் மேற்கு பிராந்திய கடற்படைத்தளபதி அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க வர



வேற்றார்.

இவர்கள் இருவரும் நட்பு ரீதியான கலந்துரையாடலை நடத்தினர். இந்தக்கப்பலில் 26 அதிகாரிகளும், 195 கடற்படை வீரர்களும் உள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 பெப்ரவரி 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.